ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -ஸ்ரீ. வீரராகவ கவி.


| மலர் 19 | சித்ரபானுஹு வைகாசிமீ ஜூன் 1942 | இதழ் 6 |
|---|---|---|


## நம்மாழ்வார் அருளிச் செய்தவை

பொய்ந்நின்றஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்றநீர்மை யினியாமுறுமை உயிரளிப்பான்
எந்நின்றயோனியு மாய்ப்பிறந்தாய்! இமையோர்தலைவா!
மெய்ந்நின்றுகேட்டரு ளாயடியேன்செய்யும் விண்ணப்பமே.

*　　*　　*　　*

உயர்வறவுயர்நலம் உடையவன்யவனவன்
மயர்வறமதிநலம் அருளினன்யவனவன்
அயர்வறுமமரர்கள் அதிபதியவனவன்
துயரறுசுடரடி தொழுதெழுஎன்மனனே.

OFFICE OF THE REGISTRAR
19 AUG 1942
MADRAS

## விஷய அட்டவணை


"ஜகன்மோகன கோபாலன்" (ஆழ்வார்கள் கண்ட அழகுத்தெய்வம்)

| | | |
|---|---|---|
| 1. இயற்கையில் ஈசன் | பி. ஸ்ரீ. | 2 |
| எங்கள் கிராமவாசம் - இருளும் ஒளியும் | எஸ். அம்புஜம்மாள் | 7 |
| ஸகோதரி ஸுப்பலக்ஷ்மி அம்மாள் | ஸ்ரீ ஜானம்மாள் | 14 |
| வைகாசி விசாகம் | "குகப்ரியை" | 19 |
| வனிதா மண்டலம் | வை. மு. கோ. | 23 |
| ஞானதீபம்-(தொடர்ச்சி) | வை. மு. கோ. | 161-192 |


எமது தற்போதைய விலாசம்

**ஜகன்மோகினி ஆபீஸ்,**

**சிங்கப்பெருமாள் கோவில் போஸ்ட்,**

**(செங்கற்பட்டு ஜில்லா.)**

மேற்படி விலாசத்திற்கே நேயர்கள் தங்கள் கடிதங்கள், ஆர்டர்கள், மணியார்டர்கள் முதலியவற்றை அனுப்பும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். போஸ்டல் ஆர்டர்களோ, செக்குகளோ, பாங்க் ட்ராப்டுகளோ அனுப்பாது மணியார்டர் மூலமாகவே அனுப்பவும்.

பி.ரு

# ஜகன்மோகன கோபாலன்

## (ஆழ்வார்கள் கண்ட அழகுத் தெய்வம்)

### 1. இயற்கையில் ஈசன்

"மனமே! நினைக்கவும் முடியவில்லையே: ஆம், உண்மைதான்; நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை—முடியவேயில்லை. அந்தப் பெருமையின்முன் மற்றப் பெருமைகளெல்லாம் வீண் பெருமை தானே! எந்தச் சக்கரவர்த்திக்கு, எந்தச் சர்வாதிகாரிக்கு, அந்தப் பெருமை உண்டு!" என்று தமக்குள்தாமே சொல்லிக்கொண்டார். அகிலலோக சக்கரவர்த்தியான ஆண்டவனுடைய ஐச்வரியமாகிய பெருமைக்கு முடிவேயில்லாததால் அதைச் சிந்திக்கவும் அந்தப் பரம பக்தமணியான ஆழ்வாரின் உள்ளமும் கூசுகிறது.

### உள்ளத்திலே ஒளித்து...

ஆனால் ஆசைக்குக் கூச்சமில்லை. அது மேன்மேலும் பொங்கிக்கொண்டேயிருக்கிறது, முடிவில்லாமலே. நினைத்துப் பார்க்க மட்டுமா? பேசிப் பார்க்கவும் ஆசைதான். அவனுடைய பெருமை, இவருடைய ஆசை, இரண்டும் வெள்ளமிட்டுப் பெருக, அங்கே நிலையுமில்லை, நீச்சுமில்லை!

என்ன ஆச்சரியம்! நினைக்க நினைக்க ஆச்சரியமும் அதிகப்படுகிறது. நெஞ்சிலே இருக்கிறான்; நிலைத்திருக்கிறான், விட்டுப் பிரியாமலே: எனினும் அதே நெஞ்சால் அறியவும் முடியவில்லை; ஆராயவும் முடியவில்லை:

"......... நெஞ்சத்துப்
பேராது நிற்கும் பெருமானை என்கொலோ
ஓராது நிற்ப(து) உணர்வு?"

[போராது-விட்டு நீங்காமல். ஓராது-அறியாமல்; ஆராய்ந்து அறியாமல்]

இப்படி நினைத்துவிட்டாலும், இதையே வியாஜமாகக்கொண்டு தன்மீதுள்ள ஆசையை வளர்த்து நமது நினைவின் சக்தியையும் பலப்படுத்துகிறானும், நமது நெஞ்சமாகிய கோயிலில் தன்னைத் தானே பிரதிஷ்டை செய்துகொண்ட பெருமான். இப்படி நினைக்க நினைக்க ஆசையின் சக்தியும் நினைவின் சக்தியும் அதிகரித்துக்கொண்டே போனபோதிலும், உணர்வு கூசி நிற்கிறதாம், அவனுடைய சன்னிதியிலே.

என்ன? பரம சங்கடமாயிருக்கிறதே: உணரமுயன்றாலும் உணரமுடியவில்லை; அவனே எளிமையுடனும் கருணையுடனும் உள்ளம் புகுந்து கலந்திருந்தாலும், உண்மை காண முடியவில்லை. "இனி எங்கே போய், எப்படித்தான் காணப்போகிறோமோ? நெருங்கிக் காணும் உபாயம்தான் எதுவோ!" என்று கலங்குகிறார்; குழைந்து வாடுகிறார், வருந்துகிறார்—காதலனைக் காணாது தவிக்கும்

காதலிபோலே. ஆம்; அவனே தம் ஆசைக்கு உரிய அழகன் என்பதை மட்டும் எப்படியோ உணர்ந்துகொண்டார்.

"உணரில் உணர்வரியன்; உள்ளம் புகுந்து
புணரிலும் காண்பரியன் உண்மை:-இணர் அணையக்
கொங்கணைந்து வண்டறையும் தண்துழாய்க் கோமானை
எங்கணைந்து காண்டும் இனி?"

[உணர்வரியன் - உணர்வு+அரியன் — உணரக்கூடாதவன். புணரிலும்-சேர்ந்தாலும். காண்பரியன்-காண்பு+அரியன்-காணக் கூடாதவன். இணர்-பூங்கொத்துகள். அணைய-தாழும்படியாக. கொங்கணைந்து - கொங்கு+அணைந்து. கொங்கு-தேன். அணைந்து-வந்து நெருங்கி. வண்டறையும்-வண்டு+அறையும்-வண்டுகள் ரீங்காரம் செய்யப்பெற்ற. தண்துழாய் - குளிர்ந்த திருத்துழாய். கோமான்-அரசன்; (இங்கே) ராஜாதி ராஜனான பகவான். எங்கணைந்து-எங்கு+அணைந்து. எங்கு-எவ்விடத்தில்; எவ்விதமாக. காண்டும்-காண்போம்.]

என்ற பாட்டிலே ஆழ்வாருடைய அகக் காதல் தோய்ந்த அந்த உருக்கமான குரலையே கேட்கிறோம். பகலும் இரவைப்போலவே ஹிம்ஸிக்கிறது இந்தக் காதலரை.

## வானத்திலே வந்தவன்

இதே நிலையில் அந்தோ!—அந்திவேளையும் வந்துவிட்டதே! காதலர்களை அதிகமாய்க் கலங்கச் செய்யும் அதே அந்திமாலை. 'எத்தனை இரத்தினங்களின் ஒளிகளோ? எப்படியெல்லாம் கலந்து கலந்து இமைக்கின்றனவோ?' என்று சொல்லும்படியிருக்கிறது ஒரு சமயம். அடுத்த க்ஷணத்திலே, 'எத்தனை நிறமுள்ள தெய்வ லோகப் புஷ்பக் காட்சிகளோ?' என்று பிரமிக்கும்படியிருக்கிறது அந்தத் தோற்றம். அதற்கும் அடுத்த நிமிஷத்திலே, 'ஆஹா! அந்த மரகதப் பச்சை எங்கேதான் கிடைத்ததோ, அந்த மேல்-திசைப் பெண்ணுக்கு?' என்று அதிசயிக்கத் தோன்றுகிறது. ஆனால் அப்படியெல்லாம் ஏமாற்றவில்லை இந்தக் காதலரை அந்தக் காட்சிகள்! "அந்த மேனிதான்! ஆம்: அவனைத்தான் அப்படியெல்லாம் காட்டுகிறது அந்திவானம். ஆம், ஆம்: அவனுடைய அழகுகளைத் தான்" என்கிறார் ஆழ்வார். அந்த அனுபவம் இவருக்கு ஹிம்ஸை யாகவும் இல்லை: அந்த அழகுகள் கூசச் செய்யவுமில்லை, கண்ணையும் கருத்தையும்.

"எங்கேபோய் எந்தவிதமாகக் காணப்போகிறேனோ?" என்று ஏங்கித் தவித்தவர், "அதோ வந்துவிட்டான் அந்திவானத்திலே!" என்று புளகாங்கிதமாகிறார்.

"கலந்து மணி இமைக்கும் கண்ணா! நின்மேனி
மலர்ந்து மரகதமே காட்டும் நலமிகழும்
கொந்தின்வாய் வண்டறையும் தண்துழாய்க் கோமானை
அந்திவான் காட்டும் அது"

[மணி-இரத்தினங்கள். இமைக்கும்-ஒளிவிடும். கண்ணா-கிருஷ்ணா. நின்-உன். நலம்-அழகு. கொந்தின்வாய்-பூங்கொத்துக்களிலே.]

183068

என்ற ஆழ்வார் வாக்கிலே அந்திவானத்தின் தெய்விக சௌந்தரியம் எவ்வளவு அதிசயமாக வெளிப்படுகிறது, பாருங்கள்!

'எங்கே காண்பேன்? எப்படிக் காண்பேன்?' என்று உருகிய வண்ணம் வானத்தை நோக்கியவர், சூரியன் அஸ்தமித்த அந்தத் திசையிலேயே தமது நம்பிக்கை உதயமாகக் காண்கிறார்.

"கொங்கணைந்து வண்டறையும் தண்துழாய்க் கோமானை
எங்கணைந்து காண்டும் இனி?"

என்று மயங்கியவர்,

"கொந்தின்வாய் வண்டறையும் தண்துழாய்க் கோமானை
அந்திவான் காட்டும் அது"

என்று தெளிகிறார். அந்தி மயங்க, மயக்கம் தெளிகிறது இந்தக் காதலருக்கு.

அந்திவானத்தின் வர்ண ஜாலங்களெல்லாம் காதலனுடைய திருமார்பையும், அந்த மார்பிலே அழகு பெற்று ஜொலிக்கும் இரத்தின ஹாரத்தையும் காட்டுகின்றன. அங்கே தோன்றும் பலவிதமான பச்சை வர்ணங்கள், அந்த அழகனுடைய அற்புதமான திருமேனியையும், அவன் அணிந்திருக்கும் திருத்துழாய் மாலையையும் காட்டுகின்றன. சிவந்த வர்ணங்கள் அவனுடைய செந்தாமரை போன்ற கண், வாய், கை, கால் ஆகிய திவ்ய அவயவங்களை ஞாபகப்படுத்துகின்றனவாம். உள்ளத்திற்கும் ஒளித்த கள்ளனை வானம் காட்டிக் கொடுத்துவிட்டது!

அந்திவானம்மட்டுமா? மேகங்கள் மூடிய காலத்திலும், வானம் காட்டிக் கொடுத்ததாம் அந்தக் கள்ளனை:

"எழில்கொண்ட மின்னுக் கொடிஎடுத்து, வேகத்
தொழில்கொண்டு, தான்முழங்கித் தோன்றும்-எழில்கொண்ட
நீர்மேகம் அன்ன நெடுமால் நிறம்போலக்
கார்வானம் காட்டும் கலந்து"

[எழில்-அழகு. மின்னுக்கொடி-மின்னற்கொடி. நீர்மேகம்-நீர் நிறைந்தமேகம். அன்ன-அப்படிப்பட்ட. நெடுமால்-மகா விஷ்ணுவாகிய கண்ணன். கார்வானம்-கார்காலத்து வானம்.]

நீர் நிறைந்த மேகங்களுக்கிடையே பளிச்சுப் பளிச்சென்று மின்னற்கொடிகள் தோன்றும்போது, உள்ளம் கொள்ளைகொண்டு அங்கேயே ஒளித்துக்கொண்ட அந்தக் கள்ளனே மார்பில் இரத்தினஹாரம் அணிந்து உலாவுவதுபோல் இருக்கிறதாம் ஆகாசத்திற்கும் பூமிக்குமாக. இப்போது இவருக்குக் காட்சி தருவதற்காக, அவ்வளவு வேகமாய்—அந்த மின்வெட்டின் வேகத்திலேயே—ஓடி வருகிறானும். இவருக்கு மட்டுமா? பொதுவாக அடியார்களையெல்லாம் இரட்சிக்க வேண்டுமென்றே அவ்வளவு வேகமாய்த் திரிந்து கொண்டிருக்கிறானும். அந்த இடி முழக்கம் அவன் வந்து விட்டதற்கு அறிகுறியாக முழங்கும் வெற்றிச் சங்காகிய பாஞ்சஜந்யம்தான்—என்கிறார்.

மேகத்தினிடையே மின்னற்கொடி அருள்வடிவமான தேவி யாகிய மகாலட்சுமியையும் ஞாபகப்படுத்துகிறது.

''பொலிந்(து) இருண்ட கார்வானில் மின்னேபோல் தோன்றி
மலிந்து திருஇருந்த மார்வன்''

[பொலிந்து இருண்ட-அழகாய் இருண்ட. மலிந்து-நிறைந்து; நெருங்க. திரு-மகாலட்சுமி. மார்வன்-மார்பையுடையவன்.]

என்றும் பாடுகிறாரல்லவா?

## நால்வரும் கண்ட கள்வன்

வானத்திலுள்ள அழகுகள் மட்டுமா? பூமியிலுள்ள அழகு களும் அந்த அழகனை ஞாபகப்படுத்துகின்றன. உதாரணமாக, கண்ணனுடைய கண்களைக் காட்டுகின்றனவாம் செந்தாமரைப் பூக்கள். உண்மையில், இவருக்கு நிலத்திலும் வானத்திலுமுள்ள அழகுகளெல்லாம் காதற் காட்சிதான்; காதலன்-காட்சிதான்! இவ் வளவு பிடிவாதமாக-இவ்வளவுவைராக்கியமாக—இயற்கையிலேயே கள்ளனைக் கண்டு பிடித்த ஆழ்வார், பேயாழ்வார் என்று பிரசித்தி பெற்றிருக்கும் பக்த யணிதான். அந்தக் கள்ளன்தான் கண்ணன் —ஜகன்மோகன கோபாலன்—என்று சொல்லவும் வேண்டுமா?

பேயாழ்வார், முதலாழ்வார்கள் என்று சொல்லப்படும் மூவரில் ஒருவர். இவர்கண்ணனை இயற்கையிலும் கண்டு, பிறகு தம் உள்ளத் திலும் கண்டுகொண்டார். இயற்கை யழகுகளில் கண்ணனுடைய அழகைப்பார்க்கமுடியாதவர்கள் உள்ளத்திலே எப்படிப் பார்க்கப் போகிறார்கள்? உள்ளத்தில் இல்லாததெய்வத்தை—தெய்வஅழகை— இயற்கையிலும் பார்க்கமுடியாது. அங்கே உண்டானால் இங்கும் உண்டு: இங்கே உண்டானால் அங்கும் உண்டு; எங்கும்உண்டு.

பேயாழ்வாரைப்போல் முதலாழ்வார்களில் ஒருவரான பூதத் தாழ்வாரும் இயற்கையில் கண்ணனைத் தரிசித்தாரென்று கருதலாம். முதலாழ்வார்களில் முதல்வரான பொய்கையாழ்வாரும் அத்தகைய பக்தி-அனுபவம் வாய்ந்தவர்தான். பேயாழ்வாருக்கு அந்திவானத் திலே பக்தி உதயமாயிற்றென்றால், பொய்கையாழ்வாருக்கு உதய சூரியனோடு ஞான பக்தியும் உதயமாகிறதென்றுசொல்லவேண்டும்.

சமுத்திரத்திலே சூரியோதயமாகும்போது, இயற்கையானது கிழக்குத் திக்கிலே ஏற்றி வைத்த ஓர் அற்புதமான தீபம்போலத் தோன்றுகிறதல்லவா? அந்த மங்கள தீபத்திற்குச் சமுத்திரம் நெய்யாகவும், பூமி நெய்க்கும் திரிக்கும் ஆதாரமான விளக்குத் தகளியாகவும் தோன்றுகின்றனவாம். இந்த இயற்கைத் தீபமே ஞான தீபத்தை உள்ளத்திலே ஜொலிக்கச் செய்கிறது பொய்கை யாருக்கு. இந்த இயற்கை—அற்புதம், இவருக்கு இத்தகைய விசித் திரமான பிரபஞ்சத்தை நிர்மாணம் செய்யவல்ல விசித்திர சக்தியும் ஸர்வ சக்தியுமான ஞான சக்தி ஒன்று, சிருஷ்டியாகிய திரைமறை விலே வேலைசெய்து வருகிறதென்பதைக் காட்டிவிடுகிறது.

ஞான சக்தியாகிய ஸர்வேச்வரனைக் கண்ணனாக வழிபடுவதில் பொய்கையாழ்வாருக்கும் விசேஷமான திருப்திதான்; குதூகலம்

தான். கிருஷ்ண பக்தியென்ற பயிரைத் தமிழ் நாட்டில் ஸ்ரீ வைஷ்ணவமாக முதல் முதல் வளர்த்த பெருமை இவருக்கே உரியது.

"வானகித் தீயாய் மறிகடலாய் மாருதமாய்த்
தேனகிப் பாலாம் திருமாலே !-ஆனய்ச்சி
வெண்ணெய் விழுங்க நிறையுமே, முன்னொருநாள்
மண்ணை உமிழ்ந்த வயிறு"

[வான்-வானம். மறிகடல்-அலை எறியும்கடல். மாருதம்-காற்று. ஆனய்ச்சி-ஆன்+ஆய்ச்சி—யசோதை என்னும் இடைச்சி]

என்று ஈடுபடுவதைப் பாருங்கள்.

ஸர்வாந்தர்யாமியாக இருக்கும் ஈச்வரனது பரிபூர்ண அவதாரம் கண்ணன் என்பது ஆழ்வார்களுக்கெல்லாம் பொதுவான கொள்கை தான். இந்தக் கண்ணனை முதலாழ்வார்களைப்போல் பேயாழ்வாரின் சிஷ்யரான திருமழிசையாழ்வாரும் இயற்கை யழகுகளில் கண்டு அனுபவித்தவர்தான்.

"..........................—மொய்த்தெழுந்த
கார்மேகம் அன்ன கருமால் திருமேனி
நீர்வானம் காட்டும் நிகழ்ந்து"

[மொய்த்து-திரண்டு. கார்மேகம்-காளமேகம். கருமால்-கரிய திருமால். நிகழ்ந்து-(இங்கே) எதிரே நின்று.]

என்ற திருமழிசையாழ்வார் வாக்கு இவரது குருவான பேயாழ்வார் வாக்கோடு பொருளிலும் சொல்லிலும் எவ்வளவு ஒற்றுமையுடையதாக இருக்கிறது, பாருங்கள் !

இந்த நான்கு ஆழ்வார்களுக்கும்முன்பே, கிருஷ்ண பக்தி நமது நாட்டில் உண்டு. சிலப்பதிகாரத்திலே சில வசீகரமான பாடல்கள் ஜகன்மோகன மூர்த்தியான கிருஷ்ணனைப்பற்றியவை. சிலப்பதிகார காலத்திற்கும் முன்னமே—எத்தனையோ நூற்றாண்டுகளுக்கும் முன்னமே—தமிழ் முனிவரான அகஸ்தியருடைய சிஷ்யரென்று கருதப்படும் தோல்காப்பியர் கிருஷ்ணனைக் குறித்தும் பிரஸ்தாபிக்கிறார்; காடுகளிலும், காடுகளைச் சார்ந்த இடங்களிலும் வசித்த தமிழர்கள் கிருஷ்ணனை வழிபட்டு வந்தார்களென்று சொல்லுகிறார். இயற்கையோடு இசைந்து வாழ்ந்தவர்கள் இயற்கை யழகுகளிலே கண்ணனைத் தரிசித்தார்கள்—என்ற அபிப்பிராயம் தொல்காப்பியருக்கும் உண்டென்று ஊகிக்கலாம்.

---

Please address your letters, orders and remittances
TO OUR PRESENT ADDRESS:
Jaganmohini Office
SINGAPERUMAL KOIL B. O.
(Chingleput. Dt.)

Please remit only by M. O. and not by Postal orders, cheques or drafts, to the above address.

*Manager.*

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்

# எங்கள் கிராமவாசம்

## (இருளும் ஒளியும்)

"நாளை நகரத்தை ராணுவ அதிகாரத்திற்கு ஒப்படைத்து விடப் போகிறார்கள். இனிமேல் பிடிவாதம் வேண்டாம். கிராமத்துக்குப் போய் விடுங்கள். நீங்கள் ஸ்திரீகள்; இங்கே இருந்தால் எங்களுக்குச் சற்றும் தூக்கம் பிடிக்காது; சதா உங்கள் கவலையாகவேயிருக்கும்" என்று வீட்டு வாசலில் காரை நிறுத்திவிட்டு வற்புறுத்தினால், எங்களால் வேறு என்னசெய்ய முடியும்? அன்று காலை யார் முகத்தில் விழித்தோமோ, வருஷப்பிறப்பும் நல்ல நாளுமாக வீட்டைப் பூட்டிவிட்டுப் புறப்படச் சித்தமாகிவிட்டோம்.

எற்கெனவே ஒரு மாசத்திற்குமுன்பே மூட்டைகட்டிச் சித்தமாக இருந்தன எங்கள் பெட்டி பேழைகளும் சாமான்களும், துறைமுகப்பட்டினமாகிய சென்னைமாநகரைவிட்டு எந்தக் கணமும் காலி செய்ய.

கடைசி முறையாக என் வீடு முற்றிலும் ஒரு முறை சுற்றிவந்தேன். நான் அருமையாகச் சேமித்து வைத்திருந்த புஸ்தகங்களையும் படங்களையும், பல அபூர்வமான தட்டுமுட்டுச் சாமான்களையும், ஒருமுறை நன்றாக ஆசை தீரப் பார்த்தேன். எவ்வளவு சாமானை கூடக் கொண்டுபோகமுடியும்? எல்லாவற்றையும் ஓர் அறையில் பத்திரப்படுத்தினேன்.

"இவையெல்லாம் இப்படியே இருக்குமா? நாம் திரும்பி வந்து இவைகளைப் பார்ப்போமா?......அன்றி, இவை யாவும் குண்டுக்கு இரையாகி விடப் போகின்றனவோ, என்னவோ? 'ஈச்வரனுக்குத்தான் வெளிச்சம்" என்ற எண்ணம் உதிக்க, 'மளமள'வென்று கண்கள் தாமாகவே நீரைச் சொரிந்தன. சட்டென்று சேலைத் தலைப்பால் துடைத்துக்கொண்டேன்.

"என்ன மதியீனம்! நாம் கடைசியாகப் போகும்போது இவையெல்லாம் கூட வரப்போகின்றனவா? என்றைக்காவது ஒருநாள் அந்த யாத்திரையும் நிச்சயம்தானே! இந்த நிலைமையைக் குறித்து என் இவ்வளவு பிரமாதப்படுத்தவேணும்?" என்று என்னை நான் சற்றுச் சாந்தப்படுத்திக் கொள்ள முயன்றேன். ஆனாலும் முடிவில் 'கன்றைவிட்டுப் பிரியும் தாய்ப் பசுப்போல' வீட்டைத்திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே காரில் போய் உட்கார்ந்தேன். கார் 'விர்'என்று வேகமாகச் சென்றது. ஆனால் எங்கள் மனமோ, வீட்டையும் பந்து ஜனங்களையும் நினைத்துக்கொண்டு பின்னேயே நின்றது. அன்று நாங்கள் சென்ற பாதையில் ஆங்காங்குள்ள காட்சிகளைப் பார்த்து ஆனந்திக்கக் கண்கள் சற்றும் சம்மதிக்கவில்லை.

"வருங்காலம் எப்படியாகுமோ? விட்டுப் பிரிந்தவர்களை க்ஷேமமாகத் திரும்பவும் சந்திக்க இயலுமா? நமக்கு மட்டும் ஆபத்தற்ற நிச்சிந்தையான கிராம வாழ்வு; அவர்களுக்கு மட்டும்—அதாவது, நம்முடைய அகத்துப் புருஷர்களுக்கு, நமது உயிருக்கு உயிர்போல் இருப்பவர்களுக்கு மட்டும்—விளக்கணைப்பு விதி, ராணுவச் சட்டம், அபாயச் சங்கின் அழுகுரல் முதலிய சங்கடங்கள் நிறைந்து, எங்கும் சூனியமாய் அமைதியற்ற நகர வாழ்வு? என்ன நியாயம்? நாம் அவர்சளுடைய பேச்சைக் கேட்டுப் புறப்பட்டது பிசகு" என்று எண்ணும்போதெல்லாம் 'காரைத் திருப்பிவிடச் சொல்லலாமா?' என்று தோன்றும். கடைசியில் எப்படியோ எங்கள் கிராமத்திற்குப்

போய்ச் சேர்த்துவிட்டோம். கிராமத்துப் பாதையில் 'தொப்புத் தொப்பு!' என்று வயிறு குலுங்கக் கார் எங்களைத் தூக்கிப்போட்டபோதுதான் 'எங்கே இருக்கிறோம்?' என்ற உணர்வு உண்டாயிற்று.

'திருவூர்' பெயருக்கு ஏற்ற அழகிய ஊர்தான். 'குப்பம், சேரி, கிராமம்' என்ற மூன்றுபாகம் கொண்டது திருவூர். கிராமத்திலும் குப்பத்திலும் இரண்டு மூன்று வீதிகளும், ஒரு வீதியின் கோடியில் ஒரு மாடி வீடும் இருந்தன. சேரிக்கு மாடி வீடு இல்லை. திருவூரின் மாடி வீடு, ஒரு பிராமணரைச் சேர்ந்தது. குப்பத்தின் மாடிவீடு ஒரு முதலியாருடையது. இவர்களே கிராமத்தில் செல்வாக்குடையவர்கள்; சொந்த நிலமும் உள்ளவர்கள். ஊர் ஒரு சிறிய ரெயில் ஸ்டேஷனின் அருகே இருந்தது. இவ்வூர்ப் போஸ்ட் மாஸ்டருக்கு 7 ரூ சம்பளம்; தபாற்காரன் முப்பது கிராமங்களைச் சுற்றி வரவேணும், ஒரு நாளைக்குப் பதினைந்து கிராமமாக.

ஒரு பாழடைந்த விஷ்ணு கோவிலும், உடைந்த கோபுரமும், ஒரு பிள்ளையார் கோவிலும் உண்டு இவ்வூரில். விஷ்ணு கோவிலின் தேர் ஒரு சமயம் காற்று மழையில் அரசமரத்தடியிலிருந்து பறந்துபோய் ஒரு குட்டையில் அழுந்திவிட்டதாம். அதுமுதல் கோவிலின் பிரபாவமும் பறந்துபோய்விட்டதாம். ஆனால் இன்னும் உண்மைப் பக்தர்களின் கண்களுக்கு வருஷத்திற்கு ஒரு முறை அந்தத் தேரின் சிகரம் குளத்திலிருந்து எழும்பித் தரிசனம் கொடுக்குமாம்.

ஊர் வீதிகளிலே வீடுகளின் முன்புறம், கூடிய மட்டும் சுத்தமாகவேயிருந்தது. மண் சுவர் எழுப்பிப் பனை ஓலையினால் கூரை வேய்ந்து செம்மையாகக் கட்டப்பட்ட வீட்டுவாசல் திண்ணைகள் 'பளபள'வென்ன மண்ணும் சாணமும் பூசி மெழுகிக் கரும்பளிங்கு மேடைகள்போலப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. பட்டணத்து வீட்டுவாசல்களில் தென்படும் காகிதக் குப்பை, கந்தல் குவியல், உடைந்த புட்டித் துண்டுகள், துருப்பிடித்த தகர டப்பிகள், சிகரெட் குச்சிகள், எச்சில் இலை, குப்பைத்தொட்டி ஆகியவை அங்கே காணப்படவில்லை. எவ்விதப்பொருளும் மனிதனுக்கோ, கால் நடைக்கோ, மண்ணுக்கோ உபயோகப்பட்டுப்போகிறபடியால், அங்கே அனாவசியமாக எறியப்படுகிற பொருளைக் காணமுடியாதுதான். ஊர்ப் பெண்டுகளும், குழந்தைகளும்கூட விடிந்ததும் வயலைத்தேடிச் சென்றுவிடுவதால், ஊர்த் தெருக்களையே கக்கூஸாக மாற்றும்—நகரத்தின் நெருக்கடியான சந்துகளில் நடக்கும்—இந்தக் 'கண்ணராவிக்காட்சி' இங்கே எங்கும் தென்படவில்லை.

எங்கள் வீடும் அதைச்சேர்ந்தநிலமும் ஊருக்கு இரண்டு,மூன்று பர்லாங்கு தூரத்திலே இருப்பது. பெரிய ஒரு தோப்பின் நடுவிலே விசாலமான வீடு. தோப்பில் நுழையும்போதே வாசலில் ஒரு அழகிய தாமரைக்குளம். நாட்டுப்புற வாசத்தை எங்களுக்கு ஒரு தெய்வப்பூங்காவனமாகச்செய்தன, அந்தத் தோப்பும் தாமரைக்குளமும். ஏன்? அந்த ஊருக்கே அந்த இடம் ஒரு அழகிய கண்காட்சிச்சாலையாகவும், வனபோஜனத்திற்கான இடமாகவும் இருந்தது. ஊர் வழியே பாதையில் போவோரும், சமீப வயல்களில் வேலை செய்வோரும், பகல் பன்னிரண்டு மணிக்கு அந்தத் தாமரைக்குளத்தை அடைந்து கட்டுச்சோறு சாப்பிடவோ, அதன் குளிர்ந்த நீரை அள்ளிக் குடிக்கவோ செய்யாமல் போகமாட்டார்கள். எவ்வளவோ காவல் போட்டுப் பார்த்தோம். "தாமரை இலை வேணும்; அதன் தண்ணீரைக்குடிக்கவேணும்,

அங்கே கட்டுச்சோறு சாப்பிடவேணும்" என்று வரும் ஜனங்களைக் கட்டுபடுத்துவது சாத்தியமாகவேயில்லை.

தண்ணீர்த்துறையைக் கண்டறியாத பட்டணத்துவாசிகளாகிய எங்களுக்கு அந்த அழகிய தாமரைக் குளத்துப் படித்துறையும், நறுமணம் கமழ அலைமோதும் அதன் தெள்ளிய நீர்ப் பரப்பும், சுற்றிலும் உள்ள குளிர்ந்த சோலையும், பார்க்கப் பார்க்கக் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன.

நாங்கள் கிராமத்தைப்போய்ச் சேர்ந்தது மாலை நேரம். அந்த மஞ்சள் வெய்யிலிலே, சுற்றிலும் காற்றில் ஓவென்று சப்தித்து மெல்ல அசையும் ஆல் அரசு மரங்களும், பச்சைத் தாமரை இலைகள் நிறைந்த அந்த நீர்ப் பரப்பும், இரத்தின கம்பளம் விரித்துப் பக்க வாத்யக்காரர்களுடைய ஓர் ஆடரங்கம் போலவும், அந்தக் குளத்தின் மத்தியிலே மலர்ந்து காற்றிலே மெல்ல அசைந்தாடிக்கொண்டிருந்த அந்தத் தாமரைப் பூக்கள், நடனமாடும் தெய்வ கன்னிகைகள் போலவும் தோன்றின.

குளத்திலே இறங்கி எங்கள் ஆசை தீரும்மட்டும் அதன் குளிர்ந்த ஜலத்திலே திளைந்து விளையாடினோம். எங்களைக் கண்ட மீனினங்கள் துள்ளிக் குதித்து நீரிலே பாய்ந்து வெள்ளிக் கோடுகளைக் கீறிச் சென்றன. இரவில் குளத்து அக்கரையிலே நெடுக ஓங்கி நின்றிருந்த ஆல் அரசு மரங்கள் எல்லாம் அற்புத உருவங்கொண்டு தோன்றலாயின. வீசும் தென்றலிலே 'ஜோ' வென்று சப்தித்துக் கம்பீரமாக அசைந்தாடும் அந்தப் பெரிய மரங்கள் "பெரிய உருக்கொண்டெழுந்த அவ்வூர்க் கிராம தேவதைகள்தானோ எம்மை நோக்கி, 'வாவா' வென்று கைவீசி அழைக்கின்றன?" என்று தோன்றின.

அன்று இராத்திரி சரியான நித்திரையில்லை. கொசு உபத்திரவம் ஒரு பக்கம்; 'ஊம் ! ஊம்!'—என்று உறுமும் கோட்டான் உறுமல் ஒரு பக்கம்; குளத்தங்கரையிலிருந்து சதா 'சள சள' வென்று பலவிதமான சப்தங்கள் எழுவது ஒரு பக்கம். யாரோ தண்ணீரில் குதிப்பது போலவும், எழுவது போலவும் தோன்றியது சில சமயம். இத்துடன் ஏகாந்தமும் இராத்திரி வேளையும் சேர்ந்துவிட்டால் கேட்கவும் வேண்டுமா? 'மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்ற பழமொழிக் கொப்ப, அந்த இருட்டுப்போதில் எல்லாம் சற்றுப் பயங்கரமாகவே இருந்தது. 'நல்லபடியாக இன்று போது விடியணுமே! அந்த (யுத்த) பயத்தைவிட்டு இந்தப் பயத்திற்கா வந்து சேர்ந்தோம்?" என்றுகூடத் தோன்றலாயிற்று.

பொழுதோ ரம்யமாக விடிந்தது. குளிர்ந்த ஜலத்திலே நீந்தி விளையாடுவதுபோலவும், தாமரை மலரைக் கொய்துகொண்டு ஆகாசத்தில் சட்டென்று கிளம்பிப் பறந்து மறுபடியும் குளத்தில் குதித்து விளையாடுவது போலவும் கனவு கண்டு விழித்த மனம் இன்புற்றிருந்தது. 'பம் பம்' என்ற மோட்டார் ஹார்ன் சப்தத்திற்குப் பதில் வயலில் நீர் பாய்ச்சுவோரின் ஏற்றப் பாட்டு காதில் இனிமையாக ஒலித்துப் பள்ளியெழுச்சி பாட, நாங்கள் விழித்தெழுந்தோம்.

காலைத்தென்றலிலே பச்சை அலைமோதும் மரகத நிறம் வாய்ந்த நெல் வயல்களினூடே வரப்பின்மீது வெகு தூரம் நடந்து சென்றேன். ஆற்றுக் கால்களிலே 'சலசல'வென்று பால்போல ஜலம் ஓடிக்கொண்டிருந்தது. குயிலும் மைனாவும் கிளியும் மரக்கிளைகளினூடே இனிமையாகக் கூவிக் கொஞ்சி விளையாடின. ஆகாயத்திலே கருடபட்சிகள் வட்டமிட்டன. நாற்புறமும் 'கா கா' வென்று கரைந்துசெல்லும் பட்டணத்துக் காக்கைக்கூட்டங்

களை அங்கே காணவில்லை. தூரத்தில் ஊர்ச்சாலையில் ஊர்ந்து செல்லும் மாட்டுவண்டிகளின் மணியோசைகள் கேட்டன. கிராமத்துப் பாதையிலே இறங்கி நடந்து சென்றபோது பட்டணத்துக் கப்பி ரோட்டிலே தேய்ந்து காய்ச்சுக்கிடந்த பாதங்களுக்குப் பஞ்சணைமீது நடப்பதுபோன்ற சுகானுபவம் உண்டாயிற்று. களத்துமேட்டிலே ஒரு நாற்கட்டிலைப் போட்டுக் கொண்டு களங்காப்பவரும், ஆற்றுக்கால் வெட்டிவிட்டு ஊர் திரும்புவோரும், அடுத்த ஊருக்கு மோர் பால் கொண்டுசெல்வோருமான ஊர்க் குடிகளைக் காண நேர்ந்தது வழியிலே.

"ஆரும்மா நீங்க! ஊருக்குப் புதசா வந்திருக்கவங்கபோல காணுதே! பட்டணத்தாருங்களா! தோப்புக்கா வந்திருக்கீங்க! பட்டணத்திலே சண்டை என்னமாம்மா இருக்குது?"..."டேயப்பா! இந்தப் பட்டணத் தாருங்க வந்து நம்ப நாட்டுபுறங்களை எப்படி ரொப்பராங்க பாரு! கூரை குடிசைக்கும்கூடன்ன இப்ப 5, 10 இன்னு கிராக்கி வந்துட்டது! இம்மா இடங் கிடைத்தா போதும்னு வந்து அடையராங்கப்பா? நம்ப போர வழி என்ன? நீதான் சொல்லண்ணே!" இவ்விதமான சம்பாஷணைகளையும் கேட்க நேர்ந்தது.

வயலை உழுவோருக்குக் கூழ்ப் பானைகளைச் சுமந்து செல்லும் இளமங்கையர் பலரைக் கண்டேன். அவர்களிலே சிலஅழகிகளையும் கண்டேன். அரையில் பளிச்சென்ற ஒரு சிவப்பு நாட்டுப்புடவையைக் கட்டி, தலையை மழமழ வென வாரித் தூக்கிச் சொருக்குப் போட்டு அதிலே ஒரு கொத்து விருவதிப் பூ சொருகியிருந்தாள் ஒரு அழகி. அவள் அதரங்கள் வெற்றிலை பாக்குப் போட்டுக் கோவைக் கனிபோலச் சிவந்திருக்க, கையில் இட்டிருந்த கண்ணுடி வளையல்கள் இள வெய்யிலிலே தங்க வளையல்போல ஜ்வலித்தன. மற்றொருஅழகி, மஞ்சள் புடவை கட்டி நீல ரவிக்கைஅணிந்து தலையைப் பின்னி பிச்சுவாடா போட்டுக்கொண்டிருந்தாள். அவள் கொண்டையிலே ஒரு கொத்துஅரளிப்பூ துலங்கியது. கிராமத்துப் பெண்களுக்கும் அலங்காரத்தில் ஒரு பிரியமும், வர்ணங்களை அழகாக இணைக்கும் ஞானமும் இருப்பதை அறிய எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

தலையைச் செவ்வனே கோதி முடியாமலும் யாதொரு அலங்காரமும் செய்துகொள்ளாமலும் அப்படியே எழுந்து உலாவச் சென்ற பட்டணத்து ஸ்திரீயாகிய என்னைப் பார்த்து, "நீங்கள் பட்டணத்தார்தான்! ஆனல் நான் உங்களுக்குச் சற்றும் குறைந்தவளில்லை. உங்கள் வேஷத்தையும் என் அலங்காரத்தையும் பாருங்கள்" என்று என்னை ஏளனம் செய்வதுபோல இருந்தன, கூழ்ப்பானையைத் தலையில் சுமந்து அனுயாசமாய்க் கைவீசி நடந்து சென்ற அந்த அழகியின் ஒய்யார நடையும், குறும்புத்தனம் நிறைந்த அந்தக் கடைக் கண் பார்வையும்.

ஏழைமைப்பிணியினல் நிறைந்து சாரமற்றதாகத் தோன்றும்கிராமத்துக் குடியானவர்களின் வரட்டு ஜீவனத்திலும் எவ்வளவோ மனக் கிளர்ச்சிகளைக் கடவுள் நிரப்பித்தான் இருக்கிறர். நாம் எந்த நிலைமையில் இருந்தாலும், மனத்தினுடைய கற்பனுசக்திக்கு வேகமுண்டானல், கிடைப்பதற்கரிய கனவு-உலகங்களிலே சஞ்சரிக்க இயலும; நடப்பதற்கரிய சம்பவங்களை நிகழ்வதாகக் காண இடமுண்டு அல்லவா? ஆதலால் அந்தக் காலை வேளையிலே, தம் கணவருக்காகக் கூழ்கொண்டு ஒய்யாரமாக நடந்து செல்லும் அந்த இளமங்கையரின் மனத்திலே என்ன என்ன காதற் கனவுகள் தோன்றியிருக்குமோ? மாமன் மாமியாருக்குக்கண் மறைவாகச்சுகமாய்த்தென்றல்வீசும்

ஒரு தனியிடத்திலே, பசுமை படர்ந்த வயல் வெளியிலே, தன் காதற்குரிய கணவனைச் சந்திப்பதில் அவளுக்கு எவ்வளவு குதூகலம் இருக்கவேணும்?

குனிந்து, வளையணிந்த கையினால் மிக்க பரிவுடன் மெல்லக் கூழை வார்க்கிறாள் ஒரு மங்கை தன் கணவனுக்கு; ஆவலுடன் குந்திக்கொண்டு அதை இரு கையாலும் ஏந்தி வாங்கிக் குடிக்கிறான் அவள் காதலுக்குப் பாத்திரமான ஒரு குடியான இளைஞன்.

"நீயாக எடுத்து வந்தாயா? கருப்பாயி! ஆத்தா போகச் சொல்லிச்சா?" என்று தன் குதூகலம் தூண்ட வினவுகிறான் அந்த வாலிபன். "ஆமா! நல்லா ஆத்தா போகச் சொல்லுமே! தங்காச்சி எடுத்துப்போவட்டும் இன்னு சொல்லிச்சி: நானுத்தான் கூழ்ப்பானையை தூக்கிகிட்டு வந்துட்டேன். இந்தக் காலே வேளையிலே ஊட்டிலே அடுப்புகிட்ட அடஞ்சிகிட்டுச் சாவராதுன்னு ஆருக்கு மனம்வரும்? நீங்க அப்போவே இருட்டோடே வேலேமேலே போய்ட்டது மன்சே என்னமோ செய்தது: ராத்திரிக்கூட சரியா சாப்பிடல்லேயே என்னு எண்ணிக்கிட்டே வந்தேன்" என்று பதில் சொல்லுகிறாள் அவள். இந்தச் சம்பாஷணையில் எவ்வளவு காதலும் பரிவும் கூடமாக நிரம்பியிருக்கின்றன?

மனம் வராமலே அந்த இடத்தைவிட்டு நீங்கி வீடு திரும்பினேன். அப்போது கிழக்குத் திக்கில் குளத்துக்கு அக்கரையில், தாமரைப் பூக்களுக்கு நடுவே பொன் சரங்களை வாரி இறைப்பது போலத் தன் தங்கக் கிரணங்களை வீசிக்கொண்டு உதயமானான் சூரியன். மறுபடியும் குள ஸ்நானம், குளக்கரையிலே காலைப் பூஜை; ஈச்வர வந்தன வழிபாடு. பிறகு ஒரு மாமரத்தடியிலே சம்பராமாயணப் பாடம். அப்பால் பகற் போஜனம். சித்திரை மாசமாக இருந்தும், எலக்டிரிக் பானின் கைங்கரியத்திற்கு யாதொரு வசதியுமில்லை அந்த நாட்டுப் புறத்திலே. ஆனாலும் பட்டணத்தின் புழுக்கமும் வியர்வையும் இல்லையென்றே சொல்லவேணும். இராத் தூக்கமின்றியும், அந்தக் கிராமத்தின் சுத்தமான காற்றின் பயனாக எங்கள் உடம்பும் மனமும் தெம்பாகவே இருந்தன.

பட்டணத்தின் கலவர ஸ்திதியும், பிரிந்திருப்போரின் ஞாபகமும் என் மனசை விட்டுச் சிறிது சிறிதாக நீங்கவே, கிராமத்தின் புதிய தோற்றத்தில் ஒரு ஊக்கங்கூட ஏற்படலாயிற்று. பகலெல்லாம் தோப்பில் சுற்றினேன். எங்கும் குளிர்ந்த நிழல் பரவித் தண்ணென்றிருந்த தோப்பில், மா, பலா, விளா, நெல்லி, தென்னை, பனை, கமுகு முதலிய மரங்களும், கிச்சிலி, எலுமிச்சை, மாதுளை, கொய்யா முதலிய பழச் செடிகளையும் கண்டு இன்புற்றேன். எங்கள் தோப்பிலே உதிர்ந்து கிடந்த மா, புளி முதலிய கனிகளைக் கிராமத்துச் சிறுவர் போட்டி போட்டுக்கொண்டு பொறுக்குவதைப் பார்த்தும், அவர்களைக் கண்டிக்க மனம் வரவில்லை.

பிறர் தோப்பில் புகுந்து, சாணி, சுள்ளி, சருகு முதலியன சேகரிப்பதற்கும், கீழே உதிர்ந்து கிடக்கும் கனி வர்க்கங்களைப் பொறுக்கியெடுப்பதற்கும் கிராமத்துக் குழந்தைகளும் பெண்டுகளும்கூடச் சற்றும் தயங்குவதில்லை. 'சொந்தக்காரர் அனுமதி பெறவேண்டாமா?' என்ற எண்ணமே உதிப்பதில்லை அவர்களுக்கு.

பட்டணத்திலுள்ள தோட்டங்களாவென்றால், சுற்றி மதில்சுவர், கேட்டில் தர்வான், வாசற்படியில் ஓநாயைப்போல் பார்ப்பதற்கே பயங்கரமாக இருக்கும் ஒரு அல்ஸாஷியன் (நாய்) எல்லாம் காவல். கிராமத்துத் தோப்புகளுக்கு அத்தகைய காவல் ஏது? ஆதலால் கிராமத்திலுள்ள யாவும்

அக் கிராமத்தாரின் (முக்கியமாக அந்தக் கிராமத்துச் சேரிப் பசங்களின்) பொது உடைமை என்றே சொல்லவேணும்.

'நெற்றி வேர்வை நிலத்தில் விழ' இராப்பகல் பாராமல், மழையிலும் வெய்யிலிலும், உழுதும் விதைத்தும், நீர்பாய்ச்சியும், இங்ஙனம் பாடுபட்டுப் பயிரிட்டும், முக்கால் மூன்று வீசம் போது கூழையே குடித்து ஏழை ஜீவனம் நடத்தும் நம் தேசத்துக் குடியானவர்களுக்கு, உண்ணும் உணவுடன் வியஞ்சனத்திற்கான உப்பு, புளி மிளகாய் முதலிய பண்டங்களுக்கு எங்கே போவார்கள்? கையில் காசேது? கடித்துக்கொள்ளப் புளியோ, மிளகாயோ, மாங்காய்த்துண்டமோ இன்றி அந்தக் கூழைத்தான் அவர்கள் எப்படிக் குடிப்பார்கள்? ஆகையால் அந்தப் பாம ஏழைகள் தோப்புத்தோறும் தேடிச் சென்று இவற்றைப் பொறுக்கியோ, திருடியோ தான் சேமிப்பார்கள். கிராமத்துச் சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் இது ஒரு நல்ல தமாஷான போதுபோக்காகக்கூட இருக்கிறது.

மாலைக் காப்பி டிபனை முடித்துக்கொண்டு மறுபடியும் வயல்களைச் சுற்றிப் பார்க்கச் சென்றோம். சில வயல்களில் 'கார் நெல்' அறுவடையாகிக் கொண்டிருந்தது. ஆணும் பெண்ணும் ஜோடி ஜோடியாகக் குழந்தை குட்டியுடன் தனி தனியாக அறப்பு அறுத்துக் குவிப்பதைப் பார்த்தோம். சில ஆண்பிள்ளைகள் அறுத்த தாள்களைச் சேர்த்துச் சுமை கட்டினர். சிலர் சுமைகளைச் சுமந்து சென்றனர் களத்துமேட்டுக்கு. வயலுக்கு அடுத்த களத்திலே சிலர் நெல்லடித்துக்கொண்டிருந்தார்கள். சில பெண்கள் அதை முறத்தில் எடுத்துக் காற்றில் தூற்றிக்கொண்டிருந்தனர். ஒரு களத்தில் நெல் அடித்த தாள்களின்மீது மாட்டைவிட்டு அடித்துக்கொண்டிருந்தனர். பிறகு அதைப் பலர் எடுத்துப் போர் போட்டனர். இங்ஙனம் கும்பல் கும்பலாக, குதூஹலமாகப் பேசியும், சிரித்தும், பரஸ்பரம் திட்டி ஏளனம் செய்துகொண்டும் ஆண் பெண், பாலர், கிழவர் அனைவரும் ஏதேனும் ஒரு தொழிலில் ஈடுபட்டிருப்பதைப் பார்த்தோம்.

இன்னும் சில வயலிலே கேழ்வாகு பயிராகியிருந்தது. சில வயலிலே சுவர்ணவாரி நாற்றுக்கால்விட்டு இரட்டைக் கலப்பை பூட்டி நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தனர். தோட்டப்பயிராகக் கத்தரியும் மிளகாயும் நட்டிருந்தது. சில வயலிலே மாட்டுக்காரப் பையன்களும் வாத் தோட்டிப் பையன்களும், மந்தை மந்தையாக ஆட்டையும், மாட்டையும், வாத்துக்குஞ்சுகளையும் ஓட்டிக்கொண்டு, அருமையான வயல்தோறும், வாய்க்கால்தோறும் மேய்த்துச்சென்றனர். பின்னும் ஒரு களத்தில் சிலர் அறுவடையான புத்தப் புது நெல்லை அப்போதே குத்தித் தீட்டி, களத்துத் தெய்வத்திற்குப் பொங்கலிட்டுப் பூசை போடுவதில் ஈடுபட்டிருந்தனர்.

பெரிய பெரிய ஆலைகளும், கட்டடங்களும் சகல நாகரிக வசதிகளும் பொருந்திய மாபெரும் நகரங்கள் எதிரியால் தாக்கப்பட்டுத் தகர்க்கப்பட்டு இடிந்து பாழாகி, பட்டணத்தாருடைய ஷேர்களும், டிபென்சர்களும், நோட்டுச்செலவாணிகளும் சர்க்கார் உத்தியோகமும் மதிப்பற்றுக் கிடக்கும் இந்நாளிலே, அழியாத பூர்விக சொத்தாய் வந்த ஒரு காணி நிலமும் வாய்க்காலுமே விலையுயர்ந்தஆஸ்தியாகத் தோன்றுவது சகஜம்தானே. ஒவ்வொரு நெல் மணியையும் ஒரு நல் முத்துக்கு ஈடாகப் பாவித்துச் சேமித்து வைக்கவும் தோன்றுவது இயற்கைதானே!

யுத்தத்திற்குச் சாதகமாக வேலை செய்வோரையும் யுத்த தளவாடங்களைத் தயாரிப்போரையுமே மிகவும் போற்றி, பிறரைத் 'தேவையில்லாத

வேலையினர்' என்று இகழ்வது சகஜமாக இருக்கிறது இந்நாளிலே. ஆனாலும் பயிரிடுவோரை அவசியமற்ற தொழிலாளர் என்று எவரும் சொல்லத் துணியார்.

சித்திரா பௌர்ணமியில் எங்கள் தாமரைக் குளத்து ஸ்நானம் உடலுக்கும் மனத்திற்கும் மிகவும் உத்ஸாகத்தை ஊட்டிற்று. புளியோரையும், ததியோதனமும் கலந்து தாமரை இலையிலே வைத்துக்கொண்டு இன்பமாக உண்டு களித்தோம் அப்போது. பிறகு அந்தச் சந்திரிகையிலே படிக்கரையில் உட்கார்ந்து எல்லோரும் சேர்ந்து ராமநாம சங்கீர்த்தனம் செய்தோம்.

ஆபத்துக் காலத்திலோ, அல்லது ஏகாந்தத்திலோதான் நமக்குத் தெய்வத்தின் ஞாபகம் வருகிறது. மனத்திலே அபூர்வமாகப் பக்தியுணர்ச்சி உண்டாகிறது. ஆகையால் எங்களில் நாஸ்திகவாதம் புரிவோரைக்கூட இந்த ஏகாந்தவாஸம் தெய்வ பக்தியுள்ளவர்களாகச் செய்துவிட்டது என்றால், இயற்கை மாதாவின் மடியிலேயே துயின்றும், எழுந்தும், அவளுடைய அன்பையும் கோபத்தையும் மாறிமாறி அனுபவித்துவரும்--அதாவது, இயற்கையின் சௌம்ய ரூபத்தைப்போல அதனுடைய பயங்கர ரூபத்தையும், அதன் பலா பலனையும் அன்றாடம் அனுபவித்தறிந்துள்ள—கிராமத்துக் குடிகளின் கண்களில், கல்லும் மண்ணும் மரமும் தெய்வ உருக் கொண்டு தோன்றுவதில் என்ன விசித்திரமிருக்கிறது ?

நாகரிக நகர வாழ்க்கையில் நாம் எதை மூடபக்தி என்று ஏசிப் புறக்கணிப்போமோ, அதையே கிராமத்திற்கு வந்த பிறகு, ஆதரவுடன் நோக்கத்தொடங்குகிறோம். மூடபக்தியானாலும் அதிலே கிராமத்துக் குடிகளின் கள்ளங்கபடமற்ற (வெகுளி)த்தனம் வெளிப்படுகிறதாகையால், அவர்களின் தெய்வ வழிபாடு தூய்மை பெற்றதாய், அலட்சியம் செய்யக்கூடாத வகையில் அமைந்திருக்கிறது.

எங்கள் குளத்தின் அக்கரையில் ஒரு அரசமரத்தடியில் ஸ்ரீராமகிருஷ்ண பரம ஹம்ஸரின் ஒரு பழஞ்சிலையை யாரோ வைத்திருக்கிறார்கள். ஒருநாள் நடுப்பகலில் அதன் சமீபம் போய்ப் பார்த்தபோது, சிலையின் முன்பு ஒரு தாமரை இலையில் ஒரு முழு மாங்கனியும் சில தாமரைப் புஷ்பங்களும் வைத்திருப்பதைக் கண்டேன். "யாரோ ஒரு மாட்டுக்காரப்பையன் தான் தேடித் திருடி வந்த மாங்கனியை அந்தக் குளக்கரைச் சாமியாருக்கு அன்புடன் நிவேதனம் செய்துள்ளான்!" என உணர்ந்தேன்.

இவ்விதமான ஆடம்பரமற்ற, பிறர் அறியாப் பூசனைகளுக்குப் பட்டணவாசங்களிலே மதிப்பில்லாவிட்டாலும், எல்லாம்உணர்ந்த அந்தபரம்பொருளின் சன்னிதியிலே அதற்கொரு ஆதரவும் மதிப்பும் ஏற்படாமலாபோகும் ?

சகலவித சௌகரியங்களும், சுகசம்பத்துகளும் நிறைந்திருப்பினும், ஒருவர் இருதயத்தில் காதலுணர்ச்சியோ பக்தி யுணர்ச்சியோ, அரும்பு விட்டுப் பூக்காவிடில், அவருடைய வாழ்க்கை நீரற்ற பாலைவனம்போலச் சாரமற்று வரண்டுபோகும்.

பலவித ஆசைகளால் தூண்டப்பட்டு மனச்சாந்தியின்றி, சதா வீண் பரபரப்பும் கவலையும் நிறைந்திருக்கும் பட்டணவாசத்திலே, உயர்ந்த காதல்-உணர்ச்சியோ, அன்றி தெய்வபக்தியோ உண்டாவதற்கு என்ன சாதனம் இருக்கமுடியும் ? அப்படித் தப்பி ஒருகால் உண்டானாலும், அது முளையிலே மடிந்துபோகாமல் கொழுந்துவிட்டு வளர அவகாசம்தான் ஏது ? இதை உணர்ந்தே முற்காலத்துப் பெரியோராகிய பிரம ஞானிகள் வனவாசத்தை நாடிச் சென்றனர்.

துஷ்யந்தனின் தூயகாதலும் நகரம் சென்றபின் மறைந்துபோயிற் றென்றால், சாமானியரின் நிலைமையைப் பற்றிக் கேட்கவும் வேணுமா?

ஜப்பான் யுத்தத்தின் பயனாகப் பட்டணவாசிகளும், உண்மையான பய பக்தியுடன் கடவுள் வழிபாடு செய்யவும், கிராம வாழ்க்கையை மேற் கொண்டு ஆடம்பரமற்றுவாழவும், கிராமத்தாரின் சுகதுக்கங்களை உணரவும் இடம் ஏற்பட்டதே; இதைத்தான் ஆங்கிலேயர்கள் "Every cloud has a Silver Lining" அதாவது, 'இருளுந்துப் பின்னும் கொஞ்சம் ஒளியிருக் கிறது!' என்பார்கள்.

திகில்கொண்டு விசனத்தோடு, வீட்டையும் சொத்தையும், ப்ரிய பந்து ஜனத்தையும் விட்டுப் பிரிந்து வேறிடம் சென்ற எங்களுக்கு எங்கள் அழகிய 'திருவூர்' வாசம் இந்த ஆங்கிலப் பழமொழியின் கருத்தை அப்படியே மெய்ப் படுத்திவிட்டது.

உலகத்திற்கும், இந்த மகத்தான ஆபத்துச் சமயத்தில் மேற்கூறிய ஆங்கிலப் பழமொழிக்கொப்ப, ஒரு மகத்தான நன்மையைக் கடவுள் அளித்தக் கிருபை செய்யவேணுமாய்ப் பிரார்த்தித்துக்கொள்வோம்.

[அருமையான பெரிய தோப்பும், தோப்பிற்குள் ஆனந்தமான தாமரைக்குளமும் அதையடுத்த அழகிய பங்களாவும் அதைச் சுற் றிலும் வாய்க்கால்களும் பசுமை நிறைந்த வயல்களும் கூடிய ஒரு இடம் மதி அம்புஜம்மாளுக்கு அகப்பட்டிருப்பதுபோல் எல் லோருக்கும் கிடைத்தால் கிராமவாஸத்தை சொர்க்கவாஸமாகக்கூட அநுபவிக்கலாம்.—ப-ர்]




## வித்தியா பூஷணமணி ஸகோதரி ஸுப்பலக்ஷ்மி அம்மாள்

ஸ்ரீ. ஜானம்மாள்

நமது பாரதநாட்டின் இதிகாசத்தைப் பார்த்தால் ஸ்திரீகள் எல் லோரும் மிக்க குணசாலிகளாகவும், கலையில் நல்ல தேர்ச்சியுள்ளவர்களாகவும் கீர்த்தியுடன் விளங்கிக்கொண்டிருந்தனர் என்று உள்ளங்கை நெல்லிக்கனி யைப்போல் நன்றாக பிரகாசிக்கிறது. மேலும் யுத்தத்தில்கூட ஸ்திரீகள் அஞ்சா நெஞ்சத்துடன் தம்தம் கணவர்களுக்கு உதவி புரிந்திருப்பதையும் நாம் படித்திருக்கிறோம். எந்த அம்சத்தில் பார்த்தாலும் ஸ்திரீகள் புருஷர் களுக்குக் குறைந்தவர்களாயிருந்ததாகத் தென்படவில்லை.

உதாரணமாக கைகேயியை எடுத்துக்கொள்வோம். இந்திரலோகத்தில் போர் புரிந்த அயோத்தி மன்னனான தசரத சக்கரவர்த்திக்கு அவரின்

அருமை மனைவியான கைகேயி ஸாரத்யம் செய்யவில்லையா? அவளுடைய ஸாரத்ய நிபுணத்தைக் கண்டு மகிழ்ந்து அரசன் கைகேயிக்கு இரண்டு வரன்கள் கேட்பதற்கு அனுமதித்தார் என்பது எல்லோரும் அறிந்தவிஷயம்.

மார்க்கண்டேயன் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள சிவபெருமானின் துணையை வேண்டிக்கொண்டான்; ஸாவித்திரியோ தன் பதிவ்ரதா சக்தியினாலேயே தன் பதியின் பிராணனை எமதர்ம ராஜனிடமிருந்து மீட்டிக்கொண்டும், இழந்த நேத்திரத்தையும், ராஜ்யத்தையும் தன் மாமனாருக்கு அடையும்படிச் செய்துவிட்டாள்.

அப்பேர்ப்பட்ட நமது நாடு, நடுவில் ஸ்திரீகள் இருக்கும் இடமே தெரியாமல் மேடிட்டுப் புல் முளைத்து மறைந்துவிட்டது. ஸ்திரீகள் இருக்கும் இடம் சமயலறை; அதைத் தாண்டி வருவதற்கு அவர்களுக்கு சுதந்திரம் இல்லை. அவ்வளவு துச்சமாகவும், ஞானக்கண்ணைத் திறக்கும் வித்தையை பெண்களுக்கு அளிக்காமல், வெறும் அந்தகாரத்தில் வைத்திருப்பதையும் பார்த்துத்தான் பேயும் அவர்களைக் கண்டு மனமிரங்கி யிருக்கவேண்டும். பெண்கள் புருஷர்களின் பொம்மையாக இருந்தனர். பாவம்! சுமை சுமையாக நகைகளையும், கணக்கில்லாத ஜரிகைகளை குறுக்கவும், நெடுக்கவும் இசைத்து கனமான சேலைகளையும் மாட்டுவதற்குப் பெட்டியும், கொடியுமாக இருப்பது ஸ்திரீகளின் சரீரம்தான் விந்தை! பணமிருந்தால்தான் பெட்டிகளும், பேழைகளும் இருக்கும். ஸ்திரீகள் நகைகளைக்கழட்டி வைக்கவேண்டுமானால் வீட்டிலிருக்கும் அரிசிப்பானை சர்க்கரை டப்பி முதலிய பாத்திர பண்டங்களைத்தான் தேடிப் போவார்களாம். என்ன விந்தையான காலம் அது! ஸஹதர்மிணிக்கு வீட்டின் சுதந்திரத்தின் எல்லை சமைப்பது, சாப்பிடுவது, உறங்குவது, குழந்தைகளைப் பெறுவது, நகை, துணிமணிகளை போட்டுக்கொள்வது இதுவரையில்தான்.

படிப்பு, கணிதம், சங்கீதம் முதலிய கலைகளெல்லாம் புருஷர்களுக்கே சொந்தமாக இருந்தன. அவைகளை ஸ்திரீகள் கனவிலும் நினைக்கக்கூடாது. என்ன அநீதம்! வித்தை, செல்வம், சக்தி முதலியவைகளுக்கு அதிபதியான தெய்வங்கள்பெண்களே. அவர்களைகொண்டாடி பூஜித்து அவர்களிடமிருந்து வரப்பிரஸாதத்தைப் பெறுவதற்கு புருஷர்களுக்குத்தான் உரிமை உண்டாம். பெண்களை கல்வித்துறையில் இறங்கும்படிச்செய்துவிட்டால் தங்களை மிஞ்சிப் போய்விடுவார்கள் என்ற அச்சத்தினால்தான் பெண்களை புத்த பகவானைப்போல வெளியில் விடாமல் உள்ளுக்குள்ளேயே அடைத்து வைத்திருந்தார்கள்போலும், அக்காலம் இப்பொழுது மலையேறிவிட்டது.

நாற்பது அல்லது நாற்பத்தைந்து வருஷங்களுக்குமுன் அதாவது பெண்களுக்கு கல்வியின் வாஸனை யிருப்பது மிகவும் ஆபத்து என்று அபிப்பிராயம் இருந்துவந்த நாட்களில் நமது சகோதரி ஸுப்பலக்ஷ்மி அம்மாள் அவர்கள் பிறந்து, வளர்ந்துவந்தார். அவர் சிறு பிராயத்திலேயே வைதவ்யத்தை அடைந்தார். பெண் மக்களின் மனத்தை உத்தம வழியில் செப்பனிட்டு வைராக்ய விருக்ஷத்தை வளர்த்து அதிலிருந்து பொதுமக்களுக்கு ஞானக்கண்களைத்திறக்கும் உதவிக்கனியை அளித்தும் இதர பலவிதங்களில் மகத்தான உபகாரம்செய்தும் பயனடைவதேசிலாக்யம் என்பதைவைதவ்யம் என்கிறதிரைக்குள்ளிருந்து நமது சகோதரியார் செய்து காட்டியிருக்கிறார்.

ஆதியில் முதன்முதல் அவருடைய பெற்றோர்கள் கல்வித் துறையில் அவர்களைச்சேர்த்த காலத்தில் எத்தனை எதிர்ப்புக்கள் எத்தனை ஏளனங்கள்,

பந்து ஜனங்களிடையே எத்தனை குசமச வார்த்தைகள். அப்பப்பா!... அனேக இன்னல்கள் புசல்காற்றுபோல் புரட்டியடித்தன. ஆனால் கல்வியின் தாயகமாகிய சாக்ஷாத் ஸரஸ்வதியின் கிருபைக்குப் பாத்திரமாகி அறிவு தடாகத்தில்அளைந்து அஞ்ஞான அழுக்கைப்போக்க முற்பட்டுள்ள சகோதரி யாரின் குடும்பத்தினர் அந்த அல்ப எதிர்ப்புகளை லக்ஷ்யம்செய்யாமல் தைரிய மாக, நமது சகோதரியை பள்ளிக்கு அனுப்பி அவரை B. A. L. T. வரை யில் படிக்க வைத்து,கீர்த்தி ஜெயித்து வெற்றியுடன் முன்னுக்கு வந்தார்கள். நமது தென்னாட்டில், அதுவும் பிராமண குலத்தில், முதன்முதலாக யூனிவர் ஸிடி பெரிய பரீக்ஷையான B. A. தேறிய பெண்மணி நமது குருவான ஸுப்பலக்ஷ்மி அவர்கள்தான். அவரின் மேன்மையான குணத்தைக்கண்டு நமது சகோதரர்கள் நம்மீது இருந்த தப்பான அபிப்பிராயத்தை விலக்கிக் கொண்டனர்.

எப்போதும் கரடுமுரடான முள்களும், கல்லும் நிறைந்த பாதையில் முதலில் நடப்பவர்கள் அந்த முள்ளடியும் கல்லடியும் பட்டு அவ்வழியைச் செப்பனிட்டு வைத்தால் பின்னால் நடப்பவர்கள் எத்தனை சந்தோஷமாக வும் சவுகரியமாகவும் நடக்க வழியுண்டாகிறதோ,அதேபோல் சகோதரியார் பெண்களுக்குக் கல்வித்துறைக்கான வழியைச் செப்பனிட்டு வைத்தார்கள் என்றால் மிகையாகாது.

முதலில் சகோதரியாரின் கல்விப் பயிற்சியைக் கண்டித்தும் ஏளனம் செய்தும் பேசிய அனேக மனிதர்கள் சகோதரியாரின் பிற்காலத்தில் அவ ருடைய உதவியை நாடி அவருடைய ஆதரவிலேயே தம்தம் பாலிய வித வைப் பெண்களைச் சேர்த்தப் படிக்கவைத்தார்கள் என்றால் சகோதரி யாரின் மகிமைக்கு வேறு அத்தாக்ஷி வேண்டுமா!

நமது சகோதரிக்கு அளிக்கப்பட்ட கல்வியையும், காலத்தையும் சிறி தளவும் வீண்போக்காமல் அதனைப் பயன்படுத்திக்கொண்டு காட்டையும், நமது சகோதரிகளையும் சீர்திருத்துவதில் ஊக்கத்தை வைத்தார். தன்னைப் போலவே மற்ற பெண்களும் சுதந்திர வாழ்க்கையை அடையவேணும் என்று எண்ணினார். இரண்டு கண்களிருந்தும் கபோதியைப்போல தட மாடிக்கொண்டிருந்த பெண்களை கரைசேர்க்கவேண்டியதே தமது கடமை யாக வ்ரதம் பூண்டு வேலை செய்யத் தொடங்கினர். சர்க்கார் பெண்கள் ஹைஸ்கூலில் ஒரு உபாத்தியாயினியாக அமர்ந்து பெண்களுக்கு ஞானத் தைப் போதித்தார். ஆனால் அவரின் மனம் அதில் மட்டும் திருப்தி யடையவில்லை. ஏன்? கன்யாப் பெண்கள்மட்டும் படித்தால் போதாது நமது தாய்நாட்டில் அனாதை விதவையாக இருக்கும் அறியாப் பெண் களின் துயரத்தைப் போக்குவதற்கு முயலவேண்டுமென்ற எண்ணம் எழும் பியது. உடனே அவர் அப்பொழுது ஸ்கூல் இன்ஸ்பெக்ட்ரஸ்ஸாக இருந்த மிஸ் ட்ரைஸ்டேல் (Drysdale) அவர்களுடைய உதவியைக்கொண்டு ஒரு விதவா ஆச்ரமத்தை நமதுசென்னையில் சமுத்திரக்கரையோரமிருக்கும் ஐஸ் ஹவுஸில் (Ice House) ஆரம்பித்து,அதனில் படிக்கும் மாணவிகளுக்கு உப காரச் சம்பளம் (Stipend) கொடுக்கும்படிச் செய்தார். அந்தக் காலத்தில் விதவைகள் வெளியில் கிளம்பக்கூடாது என்ற கொள்கை இருந்து வந்தது. படிப்புக்காக அவர்களை பள்ளிக்கு வரும்படிச் செய்வது அவ்வளவு சுலப மான காரியம் அல்ல. கைம்பெண் ஒருத்தி படிப்பதென்றால் ஊரார் அந்தப் பெண்ணின் தாய் தந்தையரை உடனே ஜாதிப்ரஷ்டம் செய்துவிடுவர் என்றபயம் அவர்களை வாட்டுமேயன்றி தங்கள்பெண்ணின் வருங்காலத்தின்

நிலைமையைக் குறித்து எள்ளளவேனும் கவலைப்பட்டார்கள் இல்லை. நமது சகோதரி ஸுப்பலக்ஷ்மி அம்மாள் அவர்கள் விதவா ஆச்ரமத்தை சுலபமாக ஸ்தாபித்திருக்கலாம் ஆனால் கைம்பெண்களை அந்த விடுதிக்குக்கொண்டுவருவதற்கு மிக்க ச்ரமத்தை அடைந்திருக்கவேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

நமது அம்மையரும் அவரது காலம் சென்ற சித்தியரும் அந்த விதவா ஆச்ரமத்திலேயே இருந்துகொண்டு பெண்களை இரவும் பகலும் இமைக்குள் வைத்துப் பாதுகாத்துவந்தனர். சாதாரணமாக வீடுகளில் பக்குவமான பெண்களைக் கட்டிக் காப்பதென்றால் பெற்ற தாய்தந்தையர்களுக்கே கஷ்டம். இதரர்களுடைய பாலிய விதவைகளை ஒரே இடத்தில் கட்டிக் காப்பதென்றால் சாமானியமான காரியமா! சகோதரி சுப்பலக்ஷ்மியம்மாள் அந்த பாலிய விதவைகளை நடத்திய ஒரு திட்டங்களும் காட்டிய அன்பும், பெற்ற தாயைவிடப் பேரன்பு கொண்ட தாய் போலவே இருந்தது. சகோதரி என்றால் அந்த பெண்கள் தம்தம் தாயாயும், குருவாயும், கடவுளாயும் நினைப்பார்களேயன்றி தமக்கு வெறும் உதவி என்றுமட்டும் நினைக்கவே இல்லை. தினம் மாலை வேளையில் அந்த பெண்களை வரிசையாக நிறுத்தித் தானும்கூடச் சேர்ந்து கடவுளுக்குப் பிரார்த்தனை செய்யும் அழகைப் பார்த்தாலே நாஸ்தீகர்களின் மனத்தில் ஆஸ்தீக ஊற்று சுறக்கும்.

சகோதரிஸுப்பலக்ஷ்மி அவர்கள் இந்து மதத்தில் அதிகப்பற்றுள்ளவர்; நமதுபழய ஆசார அனுஷ்டானங்களைத்தெரிந்துகொண்டு முறைப்படி நடக்கும் சுபாவமுள்ளவர்;தெய்வபக்தி உள்ளவர்.பர தர்மத்தைப் பற்றாமல் அதாவது மேனாட்டு பழக்க வழக்கங்களில் சிக்கிக்கொள்ளாமல், ஸ்வதர்மத்தைக் கைவிடாமல் இருப்பதினால்தான் ஜனங்கள் அவரிடத்தில் நம்பிக்கைவைத்து தம்தம் பெண்களை பயமில்லாமல் ஆச்ரமத்திற்கு அனுப்பிவந்தனர். நமது சகோதரி பத்து பன்னிரண்டு வருஷங்கள் வரையில் தம் காலத்தைப் பெண்களுடன் கழித்தார். லக்ஷக்கணக்கான ஏழைக் கைம்பெண்களுக்கு ஸன்மார்க்கத்தைக் காண்பித்த கருணைவள்ளல். இப்பொழுதும் அந்த ஆச்ரமத்தில் கைம்பெண்கள் கணக்கில்லாமல் வந்துகொண்டிருக்கின்றனர்; ஆனால் எல்லோரையும் சேர்த்துக்கொள்வதற்கு இடமில்லாமலிருக்கிறது.

கைம்பெண்களின் குறைகளைப் பூர்த்தி செய்துவிட்டார். ஆனால் ஊரில் கொடுமைகள் குறைந்தபாடில்லை. வரதக்ஷிணைப் பிசாசு தலைவிரித்து எங்கும் ஆடிக்கொண்டிருக்கிறது. என்ன கஷ்டம் ? எவர் இட்ட சாபம்? கல்யாணம் ஆன பெண்களை, சீர்வரிசை சரியாக வரவில்லையென்று பணத்தாசை பிடித்த மாப்பிள்ளை வீட்டினர்கள் அதி எளிசாகத் தள்ளிவிடும் அக்ரமத்தை யாரிடம் சொல்லி முறையிடுவது ? அந்த த்ருசங்கு ஸ்வர்க்கத்தில் நிற்கும் பெண்களுக்கும் சிறிது வயது சென்ற பெண்களுக்கும் பிழைக்கும்படியான ஒரு நிலயத்தை ஏற்படுத்துவது தமது கடமையாக எண்ணி திருவல்லிக்கேணியில் ஒரு சிறிய வீட்டில் 'சாரதா வித்யாலயம்' என்ற பெயருடன் ஒரு நிலயத்தை ஆரம்பித்தார். முதலில் அந்த வித்தியாலயத்தில் மூன்று பெண்களே இருந்தனர். ஜாதிமதபேதமின்றி எல்லாப் பெண்களையும் சேர்த்துக்கொண்டனர். பொதுமக்களின் ஆதரவினால் அந்த நிலயம் நடத்தப்பட்டு வந்தது. உயர்தர குடும்பத்துப் பெண்கள் எல்லோரும் வரத் தலைப்பட்டதால் இடம் போதாமல் அதை திருவல்லிக்கேணி பெரிய தெருவுக்கு மாற்றினார்கள். பிறகு அதனில் Higher Elementary Training Section அதாவது மூன்று வருஷப் படிப்பு சர்க்கார் உபகாரச் சம்பளத்துடன் வைத்து நடத்திவருகிறார்கள். அதனில் அநேக ஏழைகுடும்பத்துப்பெண்கள்

சேர்ந்து படிக்கிறார்கள். அதில் தேறிய எல்லா பெண்களுக்கும் சகோதரி ஸுப்பலக்ஷ்மி வேலையையும் சம்பாதித்துக் கொடுத்துவிடுகிறார். பெண்களுக்கு ஞானத்தை போதித்து ஜீவனத்திற்கு வேலையையும் ஸம்பாதித்துத் தரும் இந்த தர்மமான ஸேவையை அவர் மேற்கொண்டு நடத்தி வருவதைப் புகழ்ந்தால் அது மிகையாகாது.

சாரதாவின் துணையால்தான் எனக்கு சகோதரி ஸுப்பலக்ஷ்மி அம்மாள் அவர்களின் பரிச்சயம் கிடைத்தது. சாரதா வித்தியாலயத்தின் கமிட்டியில் நான் ஒரு அங்கத்தினராக இருந்து வருகிறேன். அந்த அதிர்ஷ்டத்தினால் அவருடன் சேர்ந்து செட்டிநாடு, ஐதராபாத் முதலிய இடங்களுக்குப்போகும்படி நேர்ந்தது. அவர் சென்னையில் Lady Willingdon High School-ல் Headmistress ஆக நீண்டகாலம் இருந்துகொண்டே சாரதா வித்தியால்யத்தை ஸ்தாபித்து ஓடி அலைந்து அதற்கு மூலதனம் சேர்ப்பிதென்றால் சாதாரணமான காரியமாக இருக்க முடியுமா?

சாதாரணப் பெண்களுக்கும் நல்ல அறிவு வளர்ச்சியையுண்டாக்கவும், சாரதா வித்யாலய மாணவிகளுக்கு உபன்யாஸ அறிவை உண்டாக்கவும் சத்சங்கமாகிய சாரதா ஐக்ய சங்கத்தை பல வருஷங்களுக்குமுன்பே நிறுவினார். அது திருவல்லிக்கேணியிலேயே வெகு காலம் நடந்தது. அச்சங்கத்தில் பகவத்கீதா உபன்யாஸமும் மற்ற இதர நல்ல விஷய உபன்யாஸங்கள், உயர்ந்த சங்கீதம் முதலியனவும் நடைபெற்றுவந்தன. சகோதரியவர்கள் பகவத்கீதையில் அபாரப்பற்றுடையவர். வேதாந்தவிஷயங்களையும், தத்வ சாஸ்திரங்களையும் கரை கண்டு படித்ததோடு அவைகளின் சாரங்களை தம்முடைய சாரதா ஐக்ய சங்கத்தில் உபன்யாஸம் செய்து அறிவை ஊட்டுவார். எப்போதும் சாந்தமும் சிரித்த முகமும் உடைய சகோதரியாரின் தூய வாழ்க்கையின் பரிசுத்தம் அபாரமானதாகும். கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும் என்பதுபோல் சகோதரியின் குடும்பத்தைச் சார்ந்த பலரும் அபார கல்வித்திறமை பெற்று உயரிய பதவியிலிருப்பதைக் காண யார்தான் பூரிக்காமலிருப்பார்கள்? அம்மையார் உபன்யாஸம் செய்யும் போது விஷயங்களை விளக்கிக் கூறும் அழகு ஒன்றேபோதும். ஏழை பணக்காரர்கள் என்கிற வித்யாஸமற்ற சம திருஷ்டியுடையவர். ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையை மேற்கொண்டு உயரிய குணத்துடன் விளங்கும் வித்யா பூஷணமணி என்றால் அந்தப் பெயர் அவர்களுக்கே தகும்.

எளியவர்களின் துயரத்தை நீக்குவதில் கண்ணாக இருக்கும் அந்த அம்மையார் பெரிய இடத்துப் பெண்களுக்கு சரீரப் பயிற்சியும், பலருடன் சேர்ந்து பழகும் வழக்கத்தையும் கற்றுக்கொள்வதற்காக ஒரு Club இருப்பது அவசியமென்று கருதி எட்டு வருஷங்களுக்குமுன் எங்களது Mylapore Ladies Club ஐ ஏற்படுத்திவைத்தார்.

இப்பேர்ப்பட்ட சிறந்த ரத்னத்தை அடைந்திருக்கும் நமக்கு என் பெருமையாக இராது? அவரது சாந்தத்தையும் எளிய வாழ்க்கையையும் பார்த்து நமது படித்த சகோதரிகள் அவரைப் பின்பற்றிநடப்பதற்கு ப்ரயத்தனப்படவேண்டும். நமது தலைவி ஸுப்பலக்ஷ்மி அம்மாள் அவர்களுக்கு பகவான் நீண்ட ஆயுளைக் கொடுத்து ரக்ஷித்தால் நமது நாட்டில் இன்னும் மேன்மேலும் ஸ்திரீகள் உன்னத நிலைமையை அடைவார்கள் என்பதில் ஐயமில்லை. ஸ்திரீகளுக்கு ஞானக் கண்களைக் கொடுத்து உலகத்தின் போக்கை அறியும்படிச் செய்த பாக்கியசாலியான நமது சகோதரியை எல்லோரும் போற்றி வாழ்வோமாக.

## குகப்ரியை

# வைகாசி விசாகம்

வைகாசி என்ற உடனே வெயிலின் கொடுமைதான் முதன் முதலாய்த் தோன்றுகிறது. வைகாசி வஸந்தருது என்றாலும் அக்கினி நக்ஷத்திரத்தின் கொடுமை சித்திரை பிற்பகுதியிலேயே தொடங்கி விடுகிறது. வைகாசியின் முற்பகுதியிலே வெயில் அதிகரித்து படிப்படியாய்க் குறையத் தொடங்குகிறது. இந்த நடுவேனிற்காலத்திலே கோயில்களில் மண்டலாபிஷேகமும், வஸந்தோற்சவமும் கொண்டாடுவது வழக்கம். இந்த விழாவைக் கத்திரி உற்சவமென்றும் சொல்லுவதுண்டு. பொதுவாகச் சித்திரைத் திருநாள் கழிந்தவுடன் 'விடாயாற்றி' உற்சவமும் வைகாசியில் வஸந்தமும் நடைபெறும்.

வஸந்தோற்சவத்தின் அழகே ஒரு தனிப்பட்டது. கோயில்கள் நந்தவனங்களாகவும் உல்லாசக் கிருகங்களாகவும் கொடி வீடுகளாகவும் அலங்கரிக்கப்படும். விஸ்தாரமான அழகிய பந்தல்கள், வெண்மையான துணிகளாலும், தங்க நிறமுள்ள காகிதங்களினாற்செய்யப்பட்ட மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டு, வான வீதியிலே உலவும் நக்ஷத்திரங்களுடன் போட்டியிடும். சென்னிறமான ஜாலர்கள் மக்களை 'வாருங்கள்! வாருங்கள்!!' என்று அழைப்பதுபோல் பறக்கும். பந்தலின் நடுவே நீராழி மண்டபம் பலவிதமான விசித்திர வர்ண விளக்குகளால் நிறைந்து கனிகள் நிறைந்த கற்பக விருட்சம்போல் காட்சியளிக்கும். நீராழி மண்டபத்தின் நடுவே அழகிய ஊற்றுக்கள் பூமாரி பெய்வதுபோல் மெல்லிய நீர்த் திவலைகளைத் தூவிக்கொண்டே இருக்கும். நாற்புறங்களிலும் நிலைக் கண்ணாடிகள். அவற்றிலே தோன்றும் சர விளக்குகளின் வர்ண விசித்திரங்களினால் மயனது சபையை நமக்கு நினைவூட்டும். மல்லிகை முல்லை முதலிய மலர்களின் வாசமும், ஊதுவத்தி சந்தனம் பன்னீர் இவைகளின் நறுமணமும் தென்றலுடன் கலந்து நமது கண்களையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்து ஆனந்த நிலையில் ஆழ்த்தும். சைத்ரோத்ஸவத்திலே காணும் ஆடம்பரமும், முழக்கமும் இந்த விழாவிலே கிடையாது. அமைதியான அந்தப் பூம்பந்தலிலே, பரம சாந்த மூர்த்தியாய்க் காட்சியளிப்பார் எம்பெருமான்.

இரவு 10 மணிக்குத்தான் புறப்பாடு. ஆடவரும் மகளிரும் தத்தம் வேலைகளை முடித்துக்கொண்டு மிகவும் உல்லாசமாக குழந்தைகளுடன் பந்தலில் வந்து கூடுவர். மிகவும் மெல்லியதும் இனிமையானதுமான வாத்தியங்கள் ஒலிக்க எம்பெருமான் உலாவவருகின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சிதான். சந்தேகமென்ன? ஒவ்வொரு முறையிலும் ஒவ்வொரு மாறுதல், முதன் முறை வலம் வரும்பொழுது, முதலில் நாதஸ்வரம் தனது இன்னிசையால் மக்களை மதிமயங்கச்செய்யும். அதன்பின் முக வீணை வாசிப்பர். இது இரண்டாம் முறை பவனி. அதையடுத்து வேதபாராயணம் செய்பவர்களின் கோஷம். இவற்றுடன் பூம்பந்தரைச் சுற்றிவருவார் எம்பெருமான். இதன்பின் மௌனமாக; மோன நிலைதான் மக்கள் அடைய வேண்டிய ஒரு நிலை' என்பதைக் குறிப்பதுபோல் ஒருமுறை வலம் வருவார். இதன்பின் பரத நாட்டியம். கடைசியில் எச்சரிக்கை முதலிய பண் சுமக்கும் பாடல்களோடு மண்டபத்துட் புகுவார். இந்த விழாவை தவனோத்

ஸவம் என்றும் சிறப்பித்துக் கூறுவதுண்டு. தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு கோயிலிலும் வஸந்த விழா மிகுந்த சிறப்புடன் கொண்டாடப்படுகிறது.

வீடுகளிலே வெயிலின் கொடுமை சகிக்க முடிகிறதில்லை. மிருகங்களும் பறவைகளும்கூட வெயிலின் தாபம் சகியாமல் தவிக்கின்றன. குயில்கள் மரங்கள் தோறும் பறந்து பறந்து 'குவ்வூ! குவ்வூ!!' என்று தமது இன்னிசையால் நமது செவிகளுக்கு அமுதூட்டுகின்றன. செல்வம் படைத்தவர்கள் கோடை காலத்திலே மலை வாசத்தை நாடிச் செல்லுகிறார்கள். மலைகளுக்குச்சென்று அந்த இயற்கை அற்புதங்களைக் காணமுடியாதவர்களுக்கும், இயற்கைக் குளிர்ச்சியினால் உடல் வெம்மையைத் தணித்துக் கொள்ள இயலாதவர்களுக்கும், ஒரே சமயத்தில் ஈசுவரதரிசனமும் உடலுக்கும் மனதுக்கும் ஆனந்தமும் கிடைக்கும்படிச் செய்வதோடல்லாமல், எம்பெருமானது அருளும் கிடைக்கும்படி செய்கின்றது வஸந்தோற்சவம். குழந்தைகளின் உடல் நலத்தைக் கருதி மருந்தூண்ணும் தாய்போல், நம் பொருட்டே இந்த விழாவை நம்மைக்கொண்டே செய்வித்துக்கொள்ளுகிறார் என்றே தோன்றுகிறது.

* * * * *

வைகாசி விசாகம் என்றவுடனே விசாகப்பெருமாளின் திரு உருவம் நம் கண் முன்னே எழுகின்றது. வைகாசிமாதத்துப் பூர்ணிமையில், விசாக நட்சத்திரத்திலே தோன்றினான் தமிழ்க் கடவுள் முருகன். நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு சிவாலயத்திலும் ஆறுமுகனது உற்சவம் இந்த விசாகத்தில்தான். உலக முழுவதையும் சமதிருஷ்டியோடு காண்கிறேன் என்று சொல்வதுபோல் ஆறுமுகன் எட்டுத் திசைகளையும் தனது பன்னிரு கண்களால் கடாக்ஷிக்கும் பொருட்டு பவனி வருவது வழக்கம். ஆறுமுகனது உற்சவ மூர்த்தியை முன்னும் பின்னும் ஒரேவிதமாகத் தோன்றும்படி அலங்கரிப்பார்கள். முன்புறத்திலே வாத்ய கோஷமும், தீவட்டி, மத்தாப்பு, விருதுகள் முதலியவை வருவதுபோலவே, பின் புறமும் சூழ, பவனி வருவான் குழந்தை முருகன். அவனது பிறந்த நாளை, அசுரர் கொடுமையை ஒழித்து அறம் வளர்த்த அந்த நன்னாளை, வருஷந் தோறும் வைகாசியில் நாம் கொண்டாடுவது பொருத்தமல்லவா? இன்று இந்த நிலையில் யுத்த பீதியினால் நம் நாடே குழம்பித் தவிக்கிறது. இந்த சமயத்தில் குழந்தைக் குமரன் பிறந்த விழாவைக் கொண்டாடும் பொழுது "அன்று தேவர் சிறை மீட்டு உலகில் அமைதியை நிலைநிறுத்தினாய். இன்று என்ன செய்யப்போகிறாய்? உன் வேலின் வன்மை எங்கே?" என்று கேட்க வேண்டுமென்றே தோன்றுகிறது.

விசாகம் குமரனது அவதாரத்தினால் மட்டுமே பெருமை பெற்றது என்பதில்லை. ஆசிய ஜோதியாகிய புத்த பகவான் அவதரித்ததும் இந்த விசாக பூர்ணிமையிலேதான். அஹிம்ஸா தர்மத்தை போதித்த அந்தப் புண்ணிய மூர்த்தியின் வருகையை ஞாபக மூட்டுகிறது இந்த மாதம். புத்த தேவரது வருகையைப் புதுமைக் கவிஞர் தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள் வர்ணிக்கின்ற அந்தக் காட்சி நமது மனக் கண்களின் முன்னே எழுகின்றது உயிர்பெற்ற ஓவியம்போல. புத்தர் பெருமான் பிம்பசாரனது யாகத்தின் பொருட்டு சென்றுகொண்டிருக்கும் ஆட்டு மந்தையைக் காண்கின்றார். நடக்கவும் சீவனில்லாத அந்த மந்தையைக் கண்டவுடன் அவரது உள்ளத்திலே கருணை பொங்கிப் பெருகுகின்றது. ஒரு நொண்டி ஆட்டுக்

குட்டி, கல்லெறிபட்டுக் கால் முடமானது. அதைத் தோளிலே சுமந்தவராய் நகரத்திற்கு வருகிறார். அந்த அற்புதக் காட்சியைக் கவிஞர் தாம் கண்டு நமக்குக் காண்பிக்கிறார்.

மானேந்தும் ஈசன் உளம் நாண-ஆட்டின்
மறியேந்தும் பெருங்கருணைப் புனிதவள்ளல்

வானேந்து மதில்மீது கொடிகளாடும் மாநகரின் திருவாயிலில் வருகிறார். இந்த அடிகளைப் பாடும்பொழுது அப்பொழுது என்ன நடந்தது என்பதைப்பற்றி நமது சிந்தை எண்ணத் தொடங்குகிறது. அவர் வருகின்ற அந்தக் கோலத்தைக் கண்டு மானேந்தும் ஈசனாகிய சிவபெருமான் 'நாம் மானைக்கையிலே பிடித்து வைத்துக்கொண்டோமே, இவன் கருணை மிகுதியினால் ஆட்டைச் சுமந்து செல்லுகின்றானே என்று வெட்கப்படுகிறாராம்!

என்ன அற்புதமான காட்சி! விசாகத்தன்று உலக இருள் நீக்கவந்த அந்த உத்தமனது சரித்திரத்தின் ஒவ்வொரு காட்சியும் நம்முன் தோன்றுவதில் ஆச்சர்யமென்ன? ஆனால் புத்தரது கவிதைகளைப் படிக்கும்தோறும் கொள்கைகள் இன்று எந்த நிலையில் இருக்கின்றன; அவரது கொல்லா விரதத்தை மேற்கொண்டிருப்பதாக சொல்லிக்கொள்ளுகின்ற மக்கள் இன்று எப்படி அசுரர்களாகி உலக நாசத்துக்கே வழி தேடுகிறார்கள் என்பதை நினைக்கும்பொழுது நம்மை யறியாமலே நமது கண்களிலே கண்ணீர் துளிக்கிறது. படிப்பது திருவாசகம் இடிப்பது சிவன்கோயில், என்பது போல, வாய்கள் 'நமோபுத்தாய' என்று துதிக்கின்றன. நெஞ்சமோ பிறரது துன்பத்தைக் கண்டு களிக்கின்றது. கைகளோ பிறரைக் கொன்று குவிக்கின்றன இதுதான் இன்று நாம் காண்கின்ற காட்சி. அன்றொரு பாரதம் ஆக்க வந்த புத்தர் பெருமான் இன்று என்ன செய்யவேண்டும்? எப்படிச் செய்யவேண்டும்? என்பதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கிறாரோ?

சைவ சமயாசாரியர்களுள் ஒருவரான ஞானசம்பந்தமூர்த்தி பிறந்ததும் இந்த வைகாசியில்தான். அவரது அவதார ஸ்தலமாகிய சீர்காழியிலே பங்குனி தொடங்கி உற்சவம், ஞானப்பால்கொடுத்த திருவிழா நடைபெறும்.

தோணியப்பரது சன்னிதியை அடுத்த மிகப் பெரிய குளக்கரையிலேதான் இந்த உற்சவம். ஐந்து வயதுக் குழந்தை, தந்தையுடன் நீராட வருகிறான். தந்தை முழுகி எழுவதன்முன், முன்வினைப்பயனால் பசி தூண்ட 'அம்மே! அப்பா!' வென்று குழந்தை அழுகிறது. உடனே தேவி எம்பெருமானுடன் தோன்றி தனது பாலைப்பொற்கிண்ணத்தில் கறந்து ஊட்டுகிறாள்.

சிவபாத ஹ்ருதயர் என்கின்ற அந்த அந்தணர் "தீண்டத் தகாதவளுடைய கலத்திலே குழந்தை பாலுண்கிறது. போயிற்று ஆசாரம்! கெட்டது குலம்!" என்று சீறி எழுந்தவராய் குழந்தையை அடிக்கக் கையை ஓங்குகிறார்.

கடைவாய் வழியே பால் சோர அந்தத் தெய்வக் குழந்தை அதோ வென்று வானத்தைச் சுட்டிக்காட்டி,

தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப் பொடிபூசிஎன் உள்ளம் கவர்கள்வன்

என்று துதிக்கிறது. 'அடாடா! எத்தகைய கவி. தெய்வக் குழந்தையின் அருள் வாக்கு!' என்று ஆச்சரிய மிகுதியினால் திகைக்கிறோம். இது மட்டுமல்ல. இறைவன் தாயும் தந்தையுமாய் உலகைக் காக்கிறான் என்ற தத்து

வத்தை விளக்கவே தோன்றினன் சம்பந்தன் அந்த நாளிலே. 'இயற்கையை வெறுத்து வாழவேண்டுமென்றும், பெண்களைப் பேய்களென்றும் போதித்த ஜைன சமயத்தாருக்கு புத்தி புகட்டி, 'பெண்மையைப் போற்றி வாழ்; தாயில்லாமல் உலகமில்லை. கடவுளை அம்மையப்பனாகவே வழிபடவேண்டும்' என்பதைப் பிரசாரம் செய்வதை அவரது தேவாரங்களிலே அங்கங்கே காண்கிறோம்.

சக்தியின்றேல் சிவமில்லை என்பதை வற்புறுத்துவதுபோல திருத்தாலமுடையார் கோயிலில் தாளபுரீசுவரர் பொற்றாளம் (பொன்னாற்செய்த 'ஜால்ரா') கொடுத்தாராம். அதில் ஓசையில்லை. அதாவது உடலில் சக்தியில்லை. தேவி ஓசையைக் கொடுக்கின்றாள் என்பது கதை. அந்தக் கோயில் சீர்காழிக்குச் சமீபத்திலிருக்கின்றது. அந்த தேவியின் பெயர் ஓசைநாயகி. ஓசையிலிருந்துதான் உலகம் பிறந்தது. கடவுள் ஒலி வடிவமானவர் என்பதையும், ஓசையின்றித் தாலமில்லை, தாலமின்றி ஓசையில்லை; அதுபோல கடவுள் அம்மையப்பனாக தாலமும் ஓசையும்போல நிறைந்து நிற்கிறார் என்பதை இந்தக் கதை போதிக்கிறது.

இதே கருத்தைத்தான் மகா கவி பாரதியாரும் 'மொழியும் பொருளும் போல, விழியும் ஒளியும்போல' என்றெல்லாம் இறைவனது நிலையை வருணிக்கிறார். இதையே சம்பந்தரது தேவாரங்களிலும் காண்கிறோம்.

குமாரனும், புத்த பகவானது வருகையாலும் பெருமை பெற்ற வைகாசி சம்பந்தரால் ஒருபடி உயருகிறது. இவற்றிற்கெல்லாம் மேலாக ஆழ்வார்களிற் சிறந்தவரான, "உண்டோ வைகாசி விசாகத்துக் கோப் பொருநாள்! உண்டோ சடகோபருக்கொப்பொருவர்!" எனும் நம்மாழ்வாரது அவதாரத்தினால் மேலும் பெருமை அடைகிறது. இவர், நான்கு வேதங்களின் ஸாரத்தையும் (ருக்வேதம்-திருவிருத்தம், யசுர்வேதம்-திருவாசிரியம், சாமவேதம்-திருவாய்மொழி, அதர்வணவேதம்-பெரிய திருவந்தாதி) நான்கு பிரபந்தங்களாக அருளிச்செய்து, தமிழ்மொழிக்குப் பின்னும் சிறப் புண்டாக்கினார்.

ஆழ்வார் திருநகரி என்ற புனிதமான க்ஷேத்திரத்திலே உறங்காப் புளியின் கீழே வீற்றிருந்த மூர்த்தியின் திரு நட்சத்திரம் மிகவும் சிறப்பாக இன்றும் கொண்டாடப்படுகிறது. விஷ்ணு பக்தர்கள் காதவழி நடந்து அந்தப் பக்த மணியின் திருநாளைக் கொண்டாடுவதற்கு வந்து சேருவார்கள். அவரது அமுதினும் இனிய கவிகளைப் பாடியும் கேட்டும், ஆனந்திப்பார்கள். நம்மாழ்வார் பிறந்த அந்த நன்னாள் அந்த ஊரில் மட்டுமல்ல. பாடல் பெற்ற ஒவ்வொரு திருக்கோயிலிலும் இந்தத் திருநாள் மிகுந்த விமரிசையுடன் கொண்டாடப்படும். அப்படியிருக்க அவர் பிறந்த புண்ய பூமியாகிய திருநகரியில் கொண்டாடுவதில் ஆச்சர்யமென்ன? இப்படி இந்த வைகாசியில் நடைபெற்ற விசேஷங்கள் எண்ணிறந்தவை. இந்த வைகாசியின் பிறப்பு இந்தச் சித்திரபானு வருஷத்திற்கு, இந்தப் பவித்ரமான பாரத பூமிக்கு என்னென்ன பலன்களைக் கொடுக்குமோ? என்பதை நம்மால் எண்ணவும் முடியவில்லை.

இந்த வைகாசியிலே, பாரதநாட்டிற்கு ஏற்பட்ட பீதி ஒழியும், 'நன்மை வந்தெய்தும் தீதெலாம் நலியும்' என்று சோதிட நிபுணர்கள் சொல்லுகிறார்கள். அந்த வாக்குப் பலிக்கவேண்டுமென்று வேண்டுவதைத் தவிர நாம் வேறென்ன செய்யமுடியும்?



# வனிதா மண்டலம்

சௌபாக்யவதி கல்யாணிக்கு உபய க்ஷேமங்கள்.

உன் கடிதங்கள் வந்தன. மிக்க சந்தோஷம் 'நீ இருக்கும் கிராமத்தில் ஏதாவது அதிசயமிருந்தால் எழுது' என்று எழுதியிருந்தாயே! இங்கு எழுதிப் படித்து இன்புறும்படியான அதிசயம் எதுவுமே இல்லை. பட்டிணத்திற்குச் சமீபத்தில் சென்றிருந்தேன். 'அங்குள்ள அதிசயங்களைத்தான் எழுதவேண்டும்' என்று எழுதுகிறேன். ரயிலிலிருந்து வீட்டிற்குப் போகும்போது வீதிகளில் ஜனநடமாட்டமே அற்று சூன்யமாகக் கிடப்பதைப் பார்த்துப் பகீரென்றது. வீடுதோறும் இரும்புப் பூட்டுக்களும், பித்தளைப் பூட்டுக்களும்,நம்பர் பூட்டுக்களும், மில்லர் பூட்டுக்களும் அப்பப்பா! பூட்டுகளில் எத்தனை விதங்கள் இருக்கின்றன என்பதை கணக்கெடுக்கலாம்போலிருந்தது.

வீட்டிற்குள்போனால் மனித சஞ்சாரமற்ற வீடும் ஊரும் ஒரே நிச்சப்தமாயும் அம்போ என்றும் இருந்ததுகண்டு எப்படி வியக்காமலிருக்கமுடியும்? எப்படியோ கஷ்டப்பட்டு ஒருவாறு வீட்டுக் குப்பையை ஒழித்து எறும்புப் புற்றுகளை வாரிக் கொட்டிவிட்டு வாசலுக்குத் தண்ணீர் தெளித்துக் கோலமிடச் சென்றேன். "காக்காயா பறக்கறயே" என்கிற பழமொழியை நாம் இதுவரையில் கேட்டதுண்டேயன்றி பார்த்ததில்லை. முக்யமாக திவசங்கள் சங்கராந்தி கழித்து கனுவு இவ்விரண்டு நாட்களிலும் காக்காயை வருந்தி வருந்தி அழைத்துத்தான் நாம் பார்த்திருக்கிறோம். காக்காய் வராவிட்டால் மனக் கவலைகூட வந்துவிடும். தற்சமயம் பட்டணத்தில் பஞ்சம் யாரிடம் தாண்டவமாடுகிறதென்றால் காக்காய்கள், பூனை, நாய் முதலியவைகளிடந்தான் நிர்த்தனம் செய்வதை நேரில் கண்டேன்.

கோலமாக் கிண்ணியுடன் சென்று இரண்டு இழை இழுப்பதற்குள் பதினாயிரம் காக்காய்களாக வந்து என்னைச் சுற்றிக்கொண்டு கையிலிருந்த கிண்ணியை லபக்கென்று கொத்தித் தட்டிவிட்டதோடு கத்துகிற கத்தலில் காது செவிடாகிவிடும்போல் ஆய்விட்டது. என்னைக் குத்தாதுவிட்டால் போதும் என்கிற பயம் சூழ்ந்துகொண்டதால், "அவசரக் கோலம் அள்ளித் தெளித்தாளாம்" என்று ஒரு பழமொழி உண்டே, அதை நினைத்துக்கொண்டு உள்ளே வந்துவிட்டேன்.

நான் சற்றுஓவியம் தெரிந்தவளாகவிருந்தால் அக்காக்ஷியை அப்படியே படமே எழுதியிருக்கலாம். அத்தனை மாவும் ஒரு க்ஷணத்தில்தீர்ந்துவிட்டது.

"இந்த வீடு திறந்திருப்பதால் இதில் தனக்கு ஏதேனும் கிடைக்கும்" என்கிற முன்ஜாக்ரதையால் எங்கள் வீட்டில் திறந்த இடம் எங்கு உண்டோ, அங்கெல்லாம் நூற்றுக் கணக்கில் ஆஜராக வீற்றிருந்த அழகை என்ன சொல்வேன் போ...பிறகு குழந்தைக்கு சாதம்போட வந்தேன். முன்பெல்லாம் குழந்தைக்கு விளையாட்டுக் காட்ட ஒரு காக்காயிக்குக் கத்துவேன். இன்றோ, குழந்தையின் வாயிலிருந்தே சாப்பாட்டைப் பிடுங்கிக் கொள்ளும்போலாகிவிட்டது. ஒரு எச்சில் இலை எறிந்தால் ஓராயிரம் காக்காய்" என்கிற பழமொழியை ப்ரத்யக்ஷமாகக் கண்டேன்.

இன்னொரு வேடிக்கை. மிகுதி சாப்பாட்டை வாங்கிக்கொள்ள ஒரு ஏழை பிச்சைக்காரர்கள் கிடைக்காது நாயிக்கு வைத்தேன். இந்த குண்டு பயத்திற்கு ஓடாத ப்ராணி காக்காய்தான் போலும்.

யுத்த வெறிபிடித்து தலைகால் தெரியாது தாண்டவமாடும் ஜப்பான் காரர்களை எதிர்த்து யுத்தம் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம்.எங்கள் மூக்கால் குத்திக் கொன்றுவிடுவோம் என்று தைரியமாக காக்காய்கள் பட்டணத்தை விட்டுப்போகவில்லைபோலிருக்கிறது என்று நினைத்தேன். நீ எழுதியபடி வில்லுகளும், புடவையும் வாங்கியனுப்ப ஷாப்புகளே இல்லை. இப்போதுதான் இரண்டொருவர் திரும்பி வருகிறார்கள். இப்படியே வந்துகொண்டிருந்தால் கடைகளும் திறப்பார்களென்று சொல்கிறார்கள். பட்டணத்தில் இன்று உள்ள நிலைமையைப் பார்க்கச் சகிக்கவில்லை. அப்படி பரிதாபமாக இருக்கிறது. இன்னும் சில தினங்களுக்கு முன்பு இருந்த லக்ஷணத்தை அங்குள்ள ஒருவர் கூறக் கேட்டு கதிகலங்கினேன். ஒரு கப்பு காப்பி யகப்படாது பல பேர்கள் தவித்தார்களாம். மயிலாப்பூரிலிருந்து டவுனுக்கு ஒரு கப்பு காப்பியகப்படுமா! ஒரு ஹோட்டலாவது இருக்குமா என்று ஓடினார்களாம். காப்பிக்கே இக்கதியானால் சாப்பாட்டுக்குச் சொல்லவேண்டுமா!

கல்யாணி! குண்டு தைரியம் என்றால் பவானிக்குத்தான் சொல்ல வேண்டும். அவள் அங்கேயே இருக்கிறாள். அவள் இருக்கும் வீதியில் பெண்பிள்ளைகள் என்கிற பெயரில் அவள் ஒருத்திதான் இருக்கிறாள். மற்ற சில வீடுகளில் உத்யோக நிமித்தமாக ஆண்பிள்ளைகள்தான் இருக்கிறார்கள். இன்னொரு வேடிக்கை தெரியுமா! காலை 8-30 மணி முதல் 11 மணி வரையில் பாவம் தலைவிதியே என்று ஆண்பிள்ளைகள் டிப்பன் காரியரில் சாப்பாடு ஒரு கையிலும் வாழை யிலை ஒரு கையிலுமாகக் காக்ஷியளிப்பதைக் கண்டு பரிதாபப்படுவதா! சிரிப்பதா! ரிக்ஷாவில் பார்த்தால் டிப்பன் காரியர், சைகிலில் டிப்பன் காரியர், மோட்டாரில் கூட சிலர் எடுத்துச் சென்றதைப் பார்த்தேன். மோட்டாரில் செல்பவர்களுக்கு சமையல்காரன் அகப்படவில்லையாம். தற்சமயம் எமர்ஜன்ஸி கபே என்ற ஓட்டல் ஒரு புண்ணியவான் வைத்திருக்கிறார். அந்த மகானை வாழ்த்தாதவர்கள் இல்லை. அதனால்தான் பொதுமக்கள் பிழைக்கிறார்கள் பாவம். அஸ்தமித்தால் இரண்டொருவர் நடமாடுவதும் இல்லை. மனத்திற்கு சற்று திக்கென்றுதான் இருக்கிறது. நீயும் இந்த அபூர்வ காக்ஷியைப் பார்க்க ஒரு முறை பட்டணம் போய்விட்டு வா! அந்த உணர்ச்சியை நீயே அனுபவிக்கலாம்...என் கடிதமே இல்லை? கிராம வாழ்க்கையின் ஸாரத்தை அடிக்கடி எழுது. நான் இங்கு தோட்டம், பாத்தி கட்டி, புடலை, அவரை, பாகல், பூஷணி முதலிய செடிகள் போட்டிருக்கிறேன். சரியான புத்திசாலியான குடியானப் பெண்கள் கிடைத்தால் அவர்களுக்கு எழுதப்படிக்கச் சொல்லிக் கொடுக்கலாம் என்று நினைத்தேன். குடியான ஜனங்கள் வெறும் சர்வ சாதாரணமாயிருக்கிறார்கள். அவர்கள் வருஷத்திற்கொருதரம் குளிப்பதும் உடை மாற்றுவதுமே சந்தேகம்போல் தோன்றுகிறது. அத்தனை மோசமாக விருப்பதால் அவர்களுக்கு முதலில் தினம் குளிக்கக் கற்றுக்கொடுத்துப்பின் எழுதவும் கற்றுக்கொடுக்கப்போகிறேன். உன் கிராமத்தில் குடியானவர்கள் எப்படி? பள்ளிக்கூடம் உண்டா!பார்ப்பதற்கு பரிசுத்தமாயிருப்பார்களா!நீயும் அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்வதுதானே! வீண்பொழுதுபோவதில் உபயோகமென்ன...விவரமாய் பதில்எழுது.

உன் ப்ரியமான,

இந்துமதி.

## குற்றமுள்ள நெஞ்சும்—குறைதீர்ந்த நெஞ்சும்

கமலா, குழந்தைகளின் படிப்பு விஷயத்திலும் மற்ற அறிவு வளர்ச்சியிலும் ரமாதேவியின் உதவியால் நன்கு கவனித்து வந்தாள். நாள் ஆக ஆக குழந்தைகளின் அறிவும் வளர்ந்துவந்தது. அதன் பலனாக ஜெயா அடிக்கடி தன்னுடைய தகப்பனார் எங்கே என்று கேட்கத் தொடங்கினாள்.

கமலாவுக்குப் பதில் சொல்ல முடியாது தியங்குவாள். மனது தவிக்கும் வேகத்தில் தான் உண்மையை எங்கே சொல்லிவிடுவோமோ! என்று பயமும் உள்ளூற உண்டாகியது. எங்கேயோ வெளிதேசத்திற்குப் போய்விட்டார் என்று கூறிச் சமாதானம் செய்வதற்குள் போதும் போதும் என்றாகிவிடும்.

ஜெயா மகா புத்திசாலி. கெட்டிக்காரி. தாயார் மழமழவென்று விட்டாலும் அதோடு த்ருப்தியாகாமல் "ஏம்மா! நம்ம அப்பா அத்தனை பொல்லாதவரா! ஏன் நம்மை விட்டுப்போனார்?" என்று தொணப்பி விடுவாள். அவள் அதிகமாகத் தொணப்பாதிருக்கும் பொருட்டு கமலா ஏதாவதொரு பாடமோ, கதையோ சொல்லிக் கொடுத்து கவனத்தை மாற்றுவாள்.

ஒருதினம் ஜயா அலையக் குலைய ஓடிவந்து "அம்மாம்மா! கொஞ்சம் சாதம் இருக்குமா? ஐயோ பாவம்!" என்று கூறி முடிக்குமுன் கமலா பரபரப்போடு "என்னும்மா!...யாருக்கு சாதம் வேணும்?" என்று கேட்டாள்.

ஜெய:—அம்மா! நான் கோயிலுக்குப்போய் ஸ்வாமிதரிசனம் செய்துவிட்டுத் திரும்பிவரும்போது ஐயோ பாவம்! ஒரு பிச்சைக் காரி என்னமோ வ்யாதிப் பிடித்தவள் கைகால் எல்லாம் மொண்டி அவள் ஒரு தகர குவளையில் பிச்சை வாங்கிய அரிசியையும் காலணு தம்பிடியையும் ஒரு சோதாப் பயல் தட்டிப் பிடுங்கிக்கொண்டு போய்விட்டான். அந்தப் பிச்சைக்காரி அழறு பாவம். பசி உசிர் போறதாம். கண்ணெ தெரியவில்லையாம். பாவம். அவளைப் பாத்தா எனக்கு என்னமோ மாதிரி இருந்தது. நீ எங்காத்துக்கு வா! சாதம் போட்றேன் என்று கூப்பிட்டேன். நடக்க முடியாமல் தவிக்கிறாள். அப்படியே அதோ வாசல்லே வந்திருக்கா! கொஞ்சம் சாதம் போட்றயம்மா!—என்று கொஞ்சிக் கொஞ்சிக் கேட்டாள்.

ஜெயா சொல்வதிலிருந்து முன்பு தான் பார்த்த அதே பிச்சைக்காரியாய்தானிருப்பாளோ! என்ற எண்ணம் உண்டாகி அவளை அப்படியே அலட்டிவிட்டது. அவளைப் பார்த்து தான் இகழ்ந்தும் இழிவாகப் பேசியும் மனம் புண்படும்படி சுருக்கென்று வைததும் தான் தனக்கு இக்கதியாகிவிட்டது என்கிற நினைவு கமலாவின்

உள்ளத்தில் பசு மரத்தாணிபோல் பதிந்து சதா சர்வகாலமும் நெஞ்சை அள்ளித்தின்றும் மலைபோல் அழுத்தியும் அவளைச் சித்திர வதைசெய்யும் ரகஸியம் இளங் குழந்தைக்கு என்ன தெரியும்பாவம்.

தன் வயிற்றில் பிறந்தும் தன்னைப்போல் அசங்கியப்படும் குணமில்லாது நல்ல எண்ணமும் கருணை குணமும் சிறிய உள்ளத்திலும் தயாளமும் கூடியிருப்பதைக்காண கமலாவின்மனத்தில் ஒருபுறம் சந்தோஷமும் ஒருபுறம் தாங்கமுடியாத துக்கமும் உண்டாகியது. தன்னை அப் பிச்சைக்காரி கண்டால்கூட சாதம் வாங்கிச் சாப்பிடமாட்டாள் என்பது கமலாவுக்கு ஏற்கெனவே தெரியுமாதலால், தான் உள்ளிருந்தபடியே சாப்பாட்டை ஜெயாவிடம்கொடுத்து அவள் பசியை ஆற்ற எண்ணினள்.

அடுத்த வினாடியே தனது ரூபம் விகாரமாகிவிட்டது. பளிச்சென்று நினைவிற்கு வந்ததால் எங்கு மில்லாத சந்தோஷம் குபீரென்று பொங்கியது. உடனே வீதிக்கு ஓடிவந்து பார்த்தாள். அதே பிச்சைக்காரிதான் சந்தேகமே இல்லை. ஒரு துள்ளு துள்ளினள். அவள் ஒருவேளை தன் குரலிலிருந்து தெரிந்துகொள்வாளோ, என்ற சந்தேகம் உண்டாகியதால் குரலைமாற்றிக்கொண்டு கம்மலாகப் பேசுகிறவள்போல் பேசத் தொடங்கி "அம்மா! இந்தா! சாப்பிடு வயிறு நிறைய சாப்பிடு. பசியாறச் சாப்பிடு" என்று கூறி சாப்பாட்டை வைத்தாள்.

அப் பிச்சைக்காரிக்கு இருந்த பசியில் ஊரையே விழுங்கிவிடுவள்போல் தோன்றியது. லபக்கு லபக்கென்று தன் மொண்டிக் கையால் வாரி வாரித் தின்றாள். கமலாவின் இதயத்தில் அவளை யறியாது சித்திரவதைசெய்து, எங்கெங்கோ மனது ஓடி அலைகிறது. தவிக்கிறது. பிச்சைக்காரி தன்னைத் தெரிந்துகொள்ளாமல் சாப்பிடுவதே அவளுக்குப் பரம சந்தோஷமாகத் தோன்றியது. பிச்சைக்யைப் பார்க்கப் பார்க்க அவள் மனக் கண்முன்பு சோமுவின் உருவமும் நினைவுமே தாண்டவமாடி வருந்தின. பரிந்து பரிந்து உபசரித்துச் சாப்பாட்டைப் போட்டாள்.

பிச்சைக்காரியின் கோரமான பசி தீர்ந்தபிறகு, "அம்மாடீ... உசிரு வந்தது. இந்தப் பாழுங்கட்டேயே பகவான் பாக்கமாட்டேங்கிறான். உலகத்துக்கு உபகாரமாயிருக்கறவங்களெல்லாம் நொடிலே இட்டுக்கிறான். பசிக்கொடுமை தாங்காது அவதிப் பட்டுச் சாக என்னெ வெச்சு ஆட்ரான். எங்கேயோ ஒரு தர்மலச்மி இப்பிடி ஒன்னுட்டும் சாப்பாடு போட்ரா.

யம்மாடீ! இந்த அபாக்ய ஜென்மத்தெக் கண்டா எத்தினி பேர் வெறுக்கராங்க. அசங்கியபட்ராங்க. பாம்பெ பாக்கராப்பலே நடுங்கராங்க....ஒரு புண்ணியவதி சொன்னு...."எங்கொயந்தே செத்துட்டாக்கூட சந்தோசப்படுவேன். நீ தொட்டதுதான் விசனமாக்கிறதுன்னு, அந்த வார்த்தெ இன்னும் காதுலே இருக்குது."

என்று கூறும்போது ஆயிரம் ஈட்டிகளை கமலாவின் இதயத்தில் பாய்ச்சுவதுபோல் வேதனை செய்து துடிக்கிறாள். "நான்தான் அந்த மகாபாவி. அம்மாதிரி சொல்லியதற்குப் பலன் அனுபவித்துவிட்டேன் என்று சொல்லிவிடலாமா!" என்றுகூட எண்ணினான். பிறகு தன்னுடைய வயிற்றில் மாணிக்கம்போல் பிறந்துள்ள ஜெயாவுக்கு இந்த ரகஸியங்கள் தெரிந்துவிடுமே" என்கிற பயத்தால் மௌனமாகவிருந்தாள்.

பிச்சைக்காரி தன் பேச்சைத் தொடர்ந்தாற்போல். "உம்... எல்லாரும் கடவுள்கீழே குடி இருக்கரவங்கன்றத்தே மறந்து பேசராங்க. எங்க வமிசத்துலேயே இந்தமாதிரி பாவம் இல்லேயாம்... எங்கம்மா இந்தமாதிரி நோயாளி யாரையோ கண்டு பழிச்சாளாம். குத்தலாகப் பேசி சுருக்குனு மனசெ புண்ணு பண்ணுளாம்.

அப்போ நானு அவ வவுத்துலே இருந்தேனும். அந்த பாவத்துலே வளந்த புண்டமானதாலே அவ அசங்கியப்பட்டு வெறுத்து எண்ணிய ரத்தத்திலே ஊறி அந்த கல்மஷமும் கர்மமும் ஒன்னு சேந்து இப்பிடி ஆய்பூட்டுதுன்னு அப்பறம் எங்கம்மா அடிச்சிகுவா. என்ன செஞ்சு என்ன உபயோகம். என்னெ கட்டிக்குடுக்கப் பட்ட கஷ்டம் சொல்லமுடியாது. ஒரு வியாதிக்காரனுக்குக் கட்டப் பார்த்தாங்க. வியாதிக்காரனெ கட்டிகிட்டு வியாதிப் பிண்டங்களே உண்டாக்கி உபத்திரவபட்ரத்தெவிட கண்ணுலமே இல்லாமே கடக்கலாமுண்ணு ஓடியாந்துட்டேன். அதோடெ எங் கதையும் முடிஞ்சிபோச்சி."

என்று கூறுவதைக் கேட்கக் கேட்க கமலாவால் நிற்கவே முடியவில்லை. அவள் தலை சுழன்றது. திண்ணைமீது அப்படியே சாய்ந்தாள். பிச்சைக்காரி சாப்பிட்டானதும் கமலா அவள் பரிதாபத்திற்கிரங்கி தன் புடவையில் ஒன்று கொடுத்து கட்டிக் கொள்ளச் செய்து ஒரு போர்வையுங் கொடுத்து பேசமாட்டாது கண்ணீர் பெருக நின்றாள்.

பிச்சைக்காரி "யம்மா! ஒங் கொழந்தைகள் நன்னுயிருக்கணும். ஓம்மங்கில்யம் மலேபோலே வளரணும்" என்று வாழ்த்தியவாறு வழியோடு போய்விட்டாள். கமலாவின் மனத்தில் போராடும் எண்ணங்கள் அப் பச்சைக் குழந்தைக்கு என்ன தெரியும்?

"ஏம்மா! முன்னே ஒருநாள் ரயில்வே ஸ்டேஷனிலே ஒரு பிச்சைக்காரனே பாத்தோமே... அவனுக்கும் இதேமாதிரி வியாதி தானேம்மா! அவன் உனக்குத் தெரிந்தவனு... அவனே நீ வெகு அன்போடு கூப்பிட்டயே! கையைக்கூட பிடிச்சி இழுத்தயே... அவன் யாரும்மா?..." என்றாள்.

இம்மாதிரி ஒரு விபரீதமான கேள்வி கேட்கப்போகிறாள் என்று கமலா கனவுகூடக் காணவில்லையாதலால் அவளை அப்படியே தூக்கி வாரிப்போட்டது. கேட்பது குழந்தையே யன்றி, குழந்தை கேட்பதாகவே தோன்றவில்லை. அவளுடைய கால தேவதையின்

சோதனைகள்தான் குழந்தையின் வாயிலிருந்து வார்த்தைகளாக வந்து தாண்டவமாடித் தன்னைப் பரீக்ஷிப்பதாக எண்ணினாள்.

குழந்தை தூர விளையாடுவதாக எண்ணியிருந்ததெல்லாம் இப்போதுதான் ஏமாற்றமென்று தெரிந்தது. எனினும் அவள் தகப்பன் அவர்தான் என்று சொல்ல அவள் இதயம் இடங் கொடுக்கவில்லை. ஆதலால் இச் சமயம் என்னமான பதில் சொல்வதென்று தெரியாமல் திண்டாடுகிறாள்.

குழந்தையோ, தாயின் முகத்தையே ஓயாது பார்த்து பதிலுக்குக் காத்துக் கிடக்கிறது. கமலாவுக்கோ திகிலும் பயமும் நெஞ்சை யள்ளிப் பிடுங்குகிறது. ஒரு நொடிப்போது சமாளித்தாள். சடக்கென்று ஏதோ நினைத்தவளாய் “அடெடே! பிச்சைக்காரி போய்விட்டாளா! ஐயோ! அவளுக்கு ஒரு அணா காசு கொடுக்கவேண்டுமென்று எண்ணினேன். ஜயா! இந்தா! இந்த ஓரணாவெ ஓடிப்போய் அவளிடம் கொடுத்துவிட்டு வா; பார்க்கலாம்” என்று கூறிக் கொடுத்தாள்.

குழந்தையும் ஆசையுடன் காசை வாங்கிக்கொண்டு ஓட்டமாக ஓடிவிட்டாள்; கமலாவுக்குத் தன் நெஞ்சிலிருந்து ஏதோ பெரிய பாரத்தை இறக்கியதுபோன்ற ஒரு சிறிது சாந்தி உண்டாகியது.

# 39

## சாமியாரின் சக்தியா! செப்பிடு வித்தையா!

சாமியாரின் சிஷ்யர்கள் காதில் பாட்டுக் கேட்ட பிறகு மனது பின்னும் குழம்பிவிட்டது. ஸ்வாமிகள் எரவானத்தின் மீதிருந்த காஷாயத்தை எடுத்துச் சென்றுவிட்டார்; ஆனால் காஷாயம் மட்டும் மெல்ல நகர்ந்ததேயன்றி உருவமே தெரியவில்லை. சிஷ்யர்களின் நம்பிக்கை பின்னும் ஊர்ஜிதமாகிவிட்டது.

“ச்வாமி! குருநாதா! ஒருதரம் எங்களுக்குக் காக்ஷி யளிக்கக் கூடாதா! தங்கள் தரிசனத்திற்காகக் காத்துக்கொண்டிருக்கிறோமே! அறியாத்தனமாக நடந்துவிட்ட குற்றத்தை மன்னித்து எங்களுக்குக் காக்ஷியளிக்கக் கூடாதா! தாங்கள் ஏன் வெளியில் அலையவேண்டும்? இங்கேயே மடத்திலேயே இருக்கலாகாதா!” என்றார்கள்.

“சீடர்களே! உங்கள்மீது குற்றமில்லை. உங்களை நான் மன்னித்துவிட்டேன். நான் தற்போது ஒரு சரீரமும் அகப்படாது அலைந்தேன். ஒரு பெண்பிள்ளை காட்டில் புல் வெட்டுகையில் திடீரென்று இறந்துவிட்டாள். நான் கற்றுள்ள கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தையை உபயோகித்து அந்த பெண்பிள்ளையின் சரீரத்தில்

புகுந்துகொண்டிருக்கிறேன். இறந்தவன் மீண்டும் மடத்துக்குள் வந்தால் ஊரார் என்னை அடித்துக் கொன்றுவிடுவார்கள். நீங்கள் இத்தனை ஆவலாக தரிசனம் செய்யவேண்டுமென்பதால் நாளை நடு நிசியில் நான் இதே எரவானத்திலிருந்து இறங்கி வருகிறேன். இப்போது நீங்கள் கலவை செய்யாதீர்கள்.

ஒரு முக்கிய ரகஸியமாக இதை வைத்துக்கொள்ளவேண்டும். அதாவது நான் பிழைத்துலாவுவது ஒருவருக்குமே தெரியக்கூடாது. தெரிந்தால் இது சுத்த பொய். ஹம்பக்கு, அது இது என்று புகார் செய்து என்னையும் அடித்துக்கொன்று உங்களையும் கேலி செய்துப் பயித்தியக்காரர்களாக அடித்துவிடுவார்கள். நாளை நான் வரும் போது ஒரு முக்யமான ரகஸியம் சொல்லப்போகிறேன். மடத்தில் உங்களைத் தவிர வேறு வேலைக்காரர்கள்கூட இருக்கக்கூடாது. தெரியுமா!" என்கிற குரல் கேட்டது.

சிஷ்யர்கள் "ஸ்வாமி! குருநாதா! அப்படியே செய்கிறோம்" என்று பயபக்தியுடன் கூறினார்கள். சாமியாரின் ஆவி மறைந்து விட்டது. மறுதினம் இரவு எப்போது வரும் என்கிற எண்ணத்தைத் தவிர மற்ற எண்ணமே இவர்களுக்கு உண்டாகவில்லை. சாமியாரின் ஆவி தங்களைச் சாபமிடாதிருந்தால் போதும் என்று மட்டும் உள்ளூற எண்ணிப் பயந்தார்கள்.

சாமியாரின் ஆவி சொல்லியபடியே, குறித்த நேரத்தில் எரவானத்தை எல்லோரும் எதிர்பார்த்துக்கொண்டு நின்றார்கள். நல்ல நடுநிசி, இருள் மெய்யிருட்டாக கவ்விக்கொண்டிருந்தது. எர வானத்தில் தடதடவென்ற ஓசை கேட்டது. உடனே சிஷ்யர்கள் "ஸ்வாமீ! ஸ்வாமீ! வரவேணும், வரவேணும்" என்று சந்தோஷத் துடன் கூப்பிட்டார்கள்.

தலையை விரித்தபடியே நெத்தியில் விபூதியும் அதன் மத்தியில் பெரிய குங்குமமும் வைத்துக்கொண்டு காஷாயத்தை யணிந்து சாமியாரின் ஆவி பெண்ணின் கூடில் புகுந்துவந்தது. எர வானத்திலிருந்து மெல்ல முற்றத்தில் குதித்து அப்படியே அசை யாது நின்றதுகண்டு சிஷ்யர்களில் கோழையாயுள்ள சிலர் உள்ளூறப் பயந்து அலறியடித்துக்கொண்டு ஓடி உள்ளே புகுந்துகொண் டார்கள். தைரியமாகவிருந்த சிலருக்கும் தம்மையறியாது தேகம் கிடுகிடென்று ஆடியது. கூறத்திறமற்ற பயத்துடன் நாக்குளற.... 'ஸ்வா...மீ'...என்று காலில் விழுந்து ஸேவித்தார்கள்.

காளிகாதேவி போன்ற ஸ்வரூபத்தைப் பார்க்கும்போது யாருக்குத்தான் பயமாக இருக்காது? ஏதேதோ பேசவேண்டு மென்று எண்ணியதெல்லாம் தொண்டைக்குள் தங்கிவிட்டதே யன்றிச் சப்தம் வெளியில் வரவே இல்லை. எங்களை மன்னிக்க வேண்டும். தங்களுக்கு மகா அபசாரத்தைச் செய்துவிட்டோம். தேவரீர் நிஷ்டையிலிருப்பதை அடியேங்கள் அறியவே இல்லை. எந்த

விதமாகவோ இத்தகைய பெரும்பிழை நிகழ்ந்துவிட்டது" என்று தழுதழுத்துக் கூறினர்கள்.

ஸ்வாமிகளின் கண்களில் நெருப்பு ஜ்வாலை வீசுகிறது. சிஷ்யர்களிடம் மெல்லிய குரலில் பேசத் தொடங்கி, "சீடர்களே! இந்த விஷயத்தில் குருவினிடம் அபசாரப்பட்டது மட்டுமின்றி அதைவிட பெரிய பாதகம் உங்களைச் சூழ்ந்திருக்கிறது. அதைத் தெரிவிக்கத் தான் நான் உங்களிடம் இத்தனை நாட்கள் கழித்துத் தேடிக்கொண்டு வந்தேன். அந்த பாதகத்திலிருந்து நீங்கள் தப்புவதற்கு இப்போதும் ஒரே ஒரு மார்க்கம் இருக்கிறது. அந்த மார்க்கத்தை உடனே செய்யவில்லை என்றால் உங்களை பகவான் அதோகதியாக்கிவிடுவார். நின்றவிடத்தில் திடீரென்று கண்களை அவித்துவிடுவார்."

என்று கூறக் கேட்கும்போதே அந்த சிஷ்யர்களுக்குக் கண்ணவிந்துவிட்டதுபோல் ஒரு பயமும் நடுக்கமும் உண்டாகியது. "ஐயையோ! அப்படிப்பட்ட பாதகம் எதுவோ தெரியவில்லையே!... ஸ்வாமீ! எங்களால் முடிந்த உபாயத்தை நீங்கள் சாதிக்கவேண்டும்" என்று கண்ணீர்வழிய பிரார்த்தனை செய்தார்கள்.

"சிஷ்யர்களே! கதவெல்லாம் தாளிடப்பட்டிருக்கிறதா! அதோ சிலர் ஓடிப் பயந்து நிற்பதைப் பார்க்க எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. அவர்கள் என் ஸ்வரூபத்தைக் கண்டு பயப்படுகிறார்களா அல்லது என்னையே கண்டு சந்தேகிக்கின்றார்களா என்பது தெரியவில்லை. அவர்களையும் இப்படிக் கூப்பிடுங்கள். நான் கூடுவிட்டுக் கூடு பாயும் சக்தியைப் பெற்றிருக்கும் ரகஸியத்தை நீங்கள் இப்போது நேரில் அறிந்திருக்கிறீர்கள். என்னுடன் இத்தனை வருஷங்களாகப் பழகியவர்களாகிய உங்களுக்கு என்னைப்பற்றி நன்றாகத் தெரியும். சிங்காரவனத்துச் சீராளச் சாமியார் சென்ற சில வருஷங்களுக்கு முன்பு இங்கு வந்திருந்த விஷயம் தெரியுமல்லவா!...

சிஷ்:—ஆம்! ஆம். தெரியும்; தெரியும்.

சாமி:—அந்தச் சாமியார் நமக்கு ஒரு அற்புத விக்ரகம் பரிசாகக் கொடுத்தது நினைவிருக்கிறதா!

சிஷ்:—ஆஹா! திவ்யமாய் நினைவிருக்கிறது. அந்த விக்ரகத்திற்கு ரத்னாபரணங்கள்கூட அணிவித்திருந்தன; தேவரீர் பூஜாக் கிரகத்திலிருந்தது. பிறகு திடீரென்று காணாது போய்விட்டது.

ஸ்வாமி:—பேஷ்! பேஷ்! காணாதுபோன நான்கு தினத்திற்குள்ளாகத்தான் நான் நிஷ்டையிலிருந்ததும் நீங்கள் என்னைச் சமாதியில் வைத்ததும், அதுவும் மறந்திருக்கமாட்டீர்களல்லவா!

சிஷ்:—மறக்கவே இல்லை...

ஸ்வாமி:—அந்த விக்ரகம் எங்கிருக்கிறதென்பதைக் கண்டு பிடிக்கவே நான் நிஷ்டையில் ஆழ்ந்திருந்தேன். நமது மடத்தில் பகவத்ஸேவை செய்யவரும் தேவதாசியின் க்ரகத்தில் அது இருப்பதை அன்றே அறிந்தேன். இன்றும் அது அந்த தாசியின் க்ரகத்

தில் தான் இருக்கின்றது. நீங்கள் அதைச் சாமர்த்தியமாகக் கைப்பற்றி நமது மடத்தில் சேர்த்து பூஜை செய்யவேண்டும்.

இரண்டாவது, என்னுடைய நிஷ்டையின் மகிமை யறியாது, என்னை அந்த பரம சாத்விகியாகிய குட்டி கொலை செய்துவிட்டதாக பெரும் அபாண்ட பழியைக் கிளப்பி நமது மடத்து சிஷ்யர்களே வழக்கு தொடுத்துவிட்டீர்கள். அந்த குட்டியின் பார்யை பரம பதி வ்ருதை. மகா சீலவதி, தன் கணவனுக்காகத்தானே இக்கொலையைச் செய்ததாக ஒப்புக்கொண்டு இருவரும் சிறைச்சாலையிலிருக்கிறார்கள். அவர்களுக்குத் தூக்கு தண்டனை விதிக்காத வரையில் நானும் ஒரு சரீரம் அகப்படாது திண்டாடினேன். நான்கு நாட்களுக்கு முன்புதான் அந்த பரிசுத்த தம்பதிகளுக்குத் தூக்கு தண்டனை அளித்துவிட்டதை நமது ஞானதிருஷ்டியாலறிந்துகொண்டேன். அந்த தம்பதிகள் என்னைக் கொலை செய்ததாகப் பழி ஏற்றுச் சாகப் போகும் பாதகம், உங்களைச் சாருமேயன்றி வேறில்லை. அந்த கொலைப்பாதகம் ஒரு ப்ரம்மராக்ஷஸ் போல் உங்களைப் பிடிக்கும். கண்களை அவிக்கும், ஊமையாக்கும், கொலைப்பாதகத்தின் பயங்கரம் ஒன்றிரண்டல்ல. ஆகையால் அதிலிருந்து உங்களை விடுவிக்கத் தான் நான் இந்த பெண் சரீரத்தில் புகுந்துகொண்டு வந்தேன்.

சிஷ்யர்களே ! அந்த குட்டியின் மனைவி காமாக்ஷியின் கண்ணீர் கூரிய பாணம் போன்றதாகும். அதுதான் உங்கள் கண்களை அழித்துவிடும். ஜாக்ரதை. இந்த வழக்கு வெறும் பொய்யானது. என் சரீரத்தை நீங்கள் சமாதியில் வைத்ததால் உண்டாகிய விபரீதம் கொலை பாதகமாக மூண்டது. அந்த தம்பதிகளை எப்படியாவது தப்பச் செய்துவிட்டால் அந்த பயங்கர கொலைப்பாதகத்திலிருந்து நீங்கள் ஒரு சிறிது தப்பமுடியும். இன்னும் கூடிய சீக்கிரத்தில் அந்த இருவரையும் தூக்கிலிட்டு விடுவார்கள்.

அந்தோ ! பயங்கரம்...பயங்கரம். அந்த ஆவிகள் காற்றாக வந்து உங்களைக் கட்டிப் பிடித்துக் கண்களை அவித்து கால் கைகளை நொண்டியாக்கி வாயை அடைத்து ஊமையாக்கி படுகுழியில் தள்ளி விடும். எனக்கு இச் செய்தி ஞானத்ருஷ்டியினால் தெரிந்திருப்ப தால் எனது ஆப்த சிஷ்யர்களாகிய உங்களிடம் தெரிவிக்க வந் தேன். நீங்கள் ஏதோ அறியாமையால் என்னைச்சமாதியில் இட்ட தன் பலன் உங்களையே அழித்துவிடப்போகிறதே என்று எனக்கு வருத்தமாகவிருக்கிறதால் உங்களைக் காக்கும் பொருட்டாக நான் இதைச் சொல்கிறேன். "ஹர ! ஹர !....சிவ சிவா!...அம்பலவாணா" என்று ஒரு கர்ஜனை செய்தார்.

சிஷ்யர்களுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. தலை சுழலுகிறது. தேகம் தள்ளாடுகிறது. நாக்குழறியவாறு. "ஸ்வாமீ ! எங்களுக்கு ஒன்றுமே தெரியவில்லையே ! இந்த விபரீதத்தில் நாங்கள் தப்புவ தற்கு மார்க்கம், த்ரிகால ஞானியாகிய தங்களை யல்லாது வேறு யாரால் கூறமுடியும்? "ஸ்வாமிகள் சாகவில்லை; உயிரோடிருக்கிறார்.

அவர் சரீரந்தான் எங்கள் மூடத்தனத்தினால் அழிந்துவிட்டது. தண்டனை விதித்த தம்பதிகளை விட்டுவிடுங்கள்" என்று நீதி சபையில் கூக்குரல்போடட்டுமா!" என்றார்கள்.

இதைக்கேட்டஸ்வாமி






ப்ரமாதமான கர்ஜனை செய்தபடியே, "ஹே! மூட சிஷ்யர்களே! என் சரீரத்தை சமாதியிலிட்ட முட்டாள்தனத்திற்குமேலாக இந்த யோசனை விளையுமேயன்றி பயன் தராது. இந்த கலிகாலத்தின் விசித்ரப் போக்கைப்பற்றி நான் எத்தனை உபன்யாசங்களில் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். அவைகளை மறந்தீர்களா ! கலியில் உண்மைக்கு மதிப்பில்லை. சத்தியத்திற்கு நம்பிக்கையில்லை. தர்மத்திற்கு காலமில்லை. படாடோபத்திற்கும் அசத்தியத்திற்குந்தான் காலம். அதற்குத்தான் மதிப்பும் உண்டாகிறது.

சிஷ்யர்களே ! என்னுடைய உயிர்போகவில்லை என்பதை



உங்களையின்றி வேறு யாருமே நம்பமாட்டார்கள். கேலிக்கூத்தென்று நகைப்பார்கள். ஆதிகாலத்தில் விக்ரமாதித்தன் கதையிலும் பன்னிரண்டு மந்திரி கதையிலும் கூடுவிட்டுக் கூடுபாயும் அதி அற்புதமான சஸ்திர ப்ரயோகங்களை நான் உங்களுக்கு எடுத்துக் காட்டியிருப்பது நினைவிலிருக்கலாம். அந்த விசேஷமான யோகாப்யாஸத்தைக் கற்றுப் பயனடைய நான் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் உங்களுக்குத் தெரியும். அப்படிக்கிருக்கும்போது நீங்களே முதலில் நம்பாது சற்று தயங்கியதை நான் அறியவில்லை என்று நினைத்தீர்களா! உங்கள் கதியே அங்ஙனமிருக்க ஆங்கில மோகம் தலைக்கேறித் தாண்டவமாடும் நீதிஸ்தலத்தில் அந்த உண்மை சற்றும் பலிக்காது. நீங்கள் செய்யவேண்டியகாரியம் என்னதெரியுமா! 'சாமியார் சாகவே இல்லை. நிஷ்டையிலிருந்தபோது நாம் முட்டாள்தனமாக சமாதி வைத்துவிட்டோம். அவர் சூஷ்ம சரீரத்துடன் தான் எடுத்துக்கொண்ட தங்க மெடுக்கும் வேலையில் வெற்றி பெற்று இதோ தங்கக் குவியலைக் கொட்டியிருக்கிறார்" என்று நம்முடைய மடத்திற்குச் சம்மந்தப்பட்ட எல்லோருக்கும் ரகஸியமாகக் கூப்பிட்டுக் காட்டுங்கள். அதுவே கோர்ட்டுவரையில் பிரசாரமாகிவிடும்.... இதோ! தங்க நாணயம்...நான் உங்களுக்காகச் செய்தவை' என்று கூறி சாமியார் ஒரு பையுடன் தங்க நாணயத்தைக் கண் பறித்துவிடும்படியாகக் கொட்டினார்.

இதைக்கண்ட சிஷ்யர்களுக்கு மெய் சிலிர்த்துவிட்டது. தங்கள் கண்களையே தாம் நம்பமுடியாது சில வினாடிகள் திகைத்தார்கள். ராமதாஸரின் சரித்திரத்தில் தானிஷா பாக்ஷாவுக்கு ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் மொகராக்களையும் தங்க நாணயங்களையும் கொட்டி பக்தனாகிய ராமதாஸரின் கடனைத் தீர்த்தபோது பாக்ஷாசாஹெப் அடைந்த பிரமிப்பைப்போல் இவர்களும் பிரமித்தார்கள்.

"நாணயம்...தங்க நாணயம்...நாணயம் கண்டுபிடிக்கும் விஷயத்தில் பரிபூர்ண வெற்றி கிடைத்துவிட்டதா!...ஸ்வாமீ! ஸ்வாமீ! நாங்கள் இப்போதே இதை நமது மடத்திலுள்ளவர்களுக்கு வெளியிட்டுவிடட்டுமா!...அடேய்! சுப்ராயா! கந்தப்பா! முனியாண்டீ! அங்கமுத்து, கன்னியம்மா...பேயச்சீ....எல்லோரும் ஓடிவாருங்கள். ஓடிவாருங்கள்...நமது ஸ்வாமி...நமது குருநாதர் இறக்கவில்லை. அவருடைய சரீரத்தை நாம் முட்டாள்தனமாக அடக்கம் செய்துவிட்டோம். அவர் சூக்ஷ்ம சரீரத்துடனிருந்து தங்கக் குவியலைத் திரட்டி இதோ கொண்டு கொட்டியிருக்கிறார். அந்த மகான் நமக்காக ஒரு ஸ்திரீயின் சரீரத்தில் புகுந்துகொண்டு வந்து காக்ஷியளிக்கிறார். வந்து தரிசனம் செய்யுங்கள்" என்று பெரிய கூக்குரலிட்டு மடத்தின் பின்புறத்துக் கதவைத் திறந்துவிட்டார்கள்.

ஏற்கெனவே குசமசவென்று பேச்சு நடப்பதில் சந்தேகங்கொண்ட வேலைக்காரர்கள் அபாரமான ஆச்சரியத்துடன் ஓட்டமாக வந்தார்கள், ஸ்வர்ணக் குவியலைக் கண்டதும் தாங்கமுடியாத

பிரமிப்பும், அதற்குப் பின்னலிருக்கும் ஸ்வாமிகளைக் கண்டு குலை நடுக்கமும் பயமும் ஒன்றாகூடி "ஐயையோ !" என்று அலறியவாறு மூலைக்கொருவராக ஓடினார்கள். அவர்களைத் தடுக்கவும் முடியாது போயிற்று. செத்தவர்களின் ஆவி மீண்டும் வந்து பேசுகிறதென்றால் யாருடைய உள்ளந்தான் முதலில் பயப்படாது?

## 40

### நாடகச் சித்திரமும்—வாழ்க்கைச் சித்திரமும்

ஜெயா கேட்ட கேள்வி கமலாவின் மனத்தில் பெரும் போராட்டத்தை விளைவித்துவிட்டது. தன் தகப்பனார் தான் அந்த வியாதிக்காரன் என்பதை அறிந்தால் ஜயாவின் உயிர் அப்படியே போய்விடுமல்லவா! அதோடு, அவர் கையை நான் பிடித்து இழுத்ததை குற்றமாயும் என்மீது இழிவாயும் தோன்றி அவளது பரிசுத்தமான இளம் இதயத்தில் ஒரு நூதன எண்ணம் விழுந்துவிடுமாயின் என்ன செய்வது? ஒரு பெண்பிள்ளை அன்னிய ஆடவனிடம் பேசக்கூடாது. பேசினால் குற்றம். அதோடு அவனைத் தீண்டினால் பின்னும் பெருங்குற்றம் என்பதும் நன்கறிந்துகொண்டிருக்கும் குழந்தைக்கு என்ன பதில் சொல்வது. என்கிற கவலையும் ஒருவிதமான பயமும் உண்டாகியது.

பிச்சைக்காரியிடம் ஒரு அணாவைக் கொடுத்துவிட்டு ஜயா ஓட்டமாக ஓடிவந்து "அம்மா! அம்மா!" என்று கூப்பிட்டாள். கமலாவுக்கு பயம் அதிகமாகிவிட்டது. பழைய விஷயத்தை மீண்டும் துடர்ச்சியாகக் கேட்பதற்காகத்தான் இம்மாதிரி கூப்பிடுவதாக எண்ணி முதலில் நடுங்கினாள். "பிச்சைக்காரி அகப்பட்டாளா! காசு கொடுத்தாயா? அவள் என்ன சொன்னாள்" என்று கேட்டாள்.

ஜய:—பிச்சைக்காரி அகப்பட்டாள். காசைக் கொடுத்துவிட்டேன்...அம்மா! ஒரு சமாச்சாரம்...சொல்லலாமோ...

கம:—சொல்லடா என் கண்ணு! என்ன சமாச்சாரம்?...

ஜய:—கோவிச்சிக்கமாட்டயே...

கம:—ஊஹூம். கோவிச்சிக்கவே மாட்டேன். சொல்லும்மா.

ஜய:—அம்மா! எங்க பள்ளிக்கூடத்தில் ஒரு ட்ராமா போடப் போகிறார்கள். அந்த ட்ராமாவில் வசூலாகும் பணத்தை அப்படியே குஷ்டரோக ஆஸ்பத்திரிக்கு தர்மம் செய்யப்போகிறார்களாம். அதற்கு ஒரு அழகான கதை எங்க பள்ளிக்கூடத்து வாத்தியாரம்மாவே எழுதியிருக்கிறார்கள். பள்ளிக்கூடத்திலுள்ள பசங்களைப் பொறுக்கி எடுத்திருக்கிறார்கள். அதில் என்னையும் சேர்த்

திருக்கிறார்கள். நான் நன்றாக நடித்தால் எனக்கு ஒரு நல்ல பரிசு கொடுப்பார்களாம். எனக்கு நடிக்கவேண்டுமென்று வெகு ஆவலாயிருக்கிறது. உன்னைக் கேட்காமலேயே நான் என் பெயரைக் கொடுத்துவிட்டேன். இப்போது வாத்தியாரம்மாளைப் பார்த்தேன். இன்று முதல் ஒத்திகை நடத்தப்போகிறார்களாம். இன்று லீவாக விருந்தாலும் பள்ளிக்கூடம் வரவேண்டுமென்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். நான் போகட்டுமா!—என்றாள்.

கமலாவுக்கு விவரிக்கமுடியாத சந்தோஷம் உண்டாகிவிட்டது. தான் நினைத்தபடி கேட்காது விட்டதே போதும் என்றாகியதால் ஜெயாவை வாரியணைத்துக் கட்டிக்கொண்டு முத்தமிட்டு பூரித்தபடியே "கண்ணா! நாமோ பரம ஏழைகள். நாமாக ஒரு தம்பிடி தருமம் செய்வதற்குச் சக்தியில்லையெனினும் நம்முடைய சரீரத்தை உழைத்தாவது தர்மம் செய்யவேண்டும் என்கிற ஆவல் எனக்கு அபரிமிதமாக உண்டு. அந்த ஆவலை, நீயாவது நடித்துப் பூர்த்திசெய்து வைத்தால் நான் பரம த்ருப்தியடைவேன். அதிலும் மற்ற தர்மங்களைக்காட்டிலும் குஷ்டரோக ஆஸ்பத்திரிக்கு என்றால் மெத்த சந்தோஷமாயிருக்கிறது. உனக்குக் கொடுக்கப்போகும் பாகத்தை வெகு நன்றாகத் திறமையாக நடித்து நல்ல பெயர் வாங்கி நிறைய வசூல் செய்துகொடு. நான் கண் குளிரப் பார்க்கிறேன். போய் வாடா! ராஜா!" என்று கூறினாள்.

இதைக்கேட்ட ஜெயாவுக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. 'அம்மா கோபித்துக் கொள்வாளோ!' என்று ஜெயா முற்றிலும் பயந்து நடுங்கியதற்கு நேர்மாறாக இம்மாதிரி உத்திரவு கிடைத்துவிட்டதும் சந்தோஷம் தாங்கமுடியவில்லை. ஒரே ஓட்டமாக ஓடினாள். பள்ளிக்கூடத்தில் ஏற்கெனவே பொறுக்கியிருந்த குழந்தைகளும் வந்தார்கள். அவரவர்களின் பாகத்தைப் பகிர்ந்து எழுதிக்கொடுத்து சொல்லிக்கொடுத்தார்கள்.

வெகு உத்ஸாகத்துடன் ஜெயா தன் பாகத்தைக் கற்றுக்கொண்டாள். வீட்டிற்கு வந்ததும் அதையே மிக்க அக்கரையுடன் உருப்போட்டுக்கொண்டிருந்தாள். கமலாவுக்கு அந்த பாகத்திலிருந்துமுழு கதையும் விளங்கவில்லை. ஏதோ குழந்தை பொழுது போக்காக இருக்கட்டும் என்று எண்ணி தன் வேலையைக் கவனிக்கச்சென்றாள்.

நன்றாகக் கற்றுக்கொண்டு பாடமாகிய பிறகு பெரிய ஹாலில் டிக்கட்டு வைத்து நாடகத்தை நடத்த ஏற்பாடு செய்தார்கள். நாடகத்தில் நடிக்கும் குழந்தைகளின் பெற்றோர்களுக்குமட்டும் இனமாக வந்து பார்க்க அனுமதிச் சீட்டுக்கொடுத்திருந்தார்கள்.

ஜெயா அச்சீட்டைத் தன் தாயாரிடம் கொடுத்துவிட்டு "எல்லாப் பெண்களின் தகப்பனார்களும் வருகிறார்களம்மா! என் தகப்பனார் இருந்தால் அவரும் பார்ப்பாரல்லவா?" என்று கூறிக் கண்ணீர்விடுவதைக்கண்டு கமலாவின் மனம் உருகியது. தானும் போகாமலிருந்துவிடலாமா என்றுகூட எண்ணினாள்.

ஆனால் குழந்தையின் ஆடல் பாடல்களைக் கண்டு களிக்கும் பாக்கியம் இருக்கும்போதே அதை என் இழந்துவிடவேண்டும் என்று உடனே தோன்றியதால் அவள் போவதற்கு இசைந்தாள். மனத்தில் மட்டும் விசனமும், ஏக்கமும் போராடிக்கொண்டிருந்தன. ஏது இருந்து என்ன செய்வது ? கொட்டகையில் போகும்போதே நாடகத்தின் ஸாரம் அடங்கிய சீட்டு ஒன்று கொடுத்தார்கள். அதை கமலா ஆவலுடன் படிக்கத் தொடங்கினாள்.

## விண்ணப்பம்

"உலகத்தில் மக்களிடையே அனேகவிதமான கொடிய வியாதிகள், அதிலும் கண்டவுடனே தொத்திக்கொள்ளும் தொத்து வியாதிகள் ஏராளமாகவிருக்கின்றன. அவைகள் எல்லாவற்றையும் விட மிகமிகக் கொடிய வியாதி-நினைக்கும்போதே பயப்படும்படியான அபாயம் நிறைந்த வியாதி—குஷ்டரோகம் ஒன்றுதான். தற்காலம் நமது தேசத்தின் போதாக்காலக் கொடுமையினாலோ, அன்றி எந்த சாபக்கேட்டினாலோ இந்த துர்வ்யாதிக்காரர்களை அதிகமாகக் காண்கிறோம். அது ஒருவரிடமிருந்து ஒருவருக்கு ஓட்டும் விபரீதத்தில் எத்தனையோ குடும்பமே அப்படியே நசித்து நாசமாகி விட்டதை-நாசமடைவதை-நாம் பிரத்யக்ஷமாக பார்க்கிறோம். அந்த வியாதியை மூலிகைகளினாலும் உயர்ந்த ஔஷதங்களினாலும் ஊசி குத்தலாலும் தடுப்பதற்கு ஒரு ஆஸ்பத்திரி அத்யாவச்யமாக விருக்கிறது. இந்த ஜில்லாவின் சுற்று வட்டாரங்களில் அம்மாதிரியோர் உபயோகமான ஆஸ்பத்திரி இல்லாதது பெருங்குறையாயிருக்கிறது. வெகு நாட்களாக நான் இதைப்பற்றி யோசித்ததுண்டு. பலரிடமும் பேசி உதவி நாடியதுமுண்டு. மகத்தான தர்ம ஸ்தாபனத்தை சாதாரணமான தனிப்பட்ட மனிதர்கள் செய்துவிடுவதென்றால் சாத்யமானதல்ல என்பதும் தெரியும். 'எறும்பூறக்கல்லும் தேயும்' என்கிறபடி ஒரு காரியத்தை முடிக்கவேண்டுமென்கிற தீவிரமான எண்ணத்துடன் நான் ஆரம்பித்து நடத்தியே பார்க்கலாம். ஜயாபஜயம் பகவான் கையிலிருக்கிறது என்று துணிந்து அபாரமான இத்திருப்பணியிலீடுபட்டு பல பிரமுகர்களை, தர்ம தாதாக்களைக் கண்டு உதவி நாடினேன். உதவியும் கிடைத்திருக்கிறது.

இந்த பள்ளிக்கூடத்துத் தலைமை உபாத்தியாயினியை ஒரு நாடகம் நடித்து உதவும்படி கேட்டேன். அவர்கள் வெகு உத்ஸாகத்தோடு இசைந்ததுமல்லாமல் தாமே ஒரு கதையும் எழுதி நடிக்கச் செய்வதாயும், சில உபாத்தியாயினிகளும் சேர்ந்து நடித்து உதவுவதாயும் சொன்னார்கள். இதுவும் பகவானின் கருணை என்று உள்ளம் பூரித்தேன். எடுத்த காரியத்திற்கு பகவான் வெற்றியைக் கொடுத்து அதனால் பல நோயாளிகள் குணமடைந்து சந்தோஷப் படும்படி அருள்புரிய வேண்டுகிறேன். இந்த நாடகத்தைப் பார்க்க வரும் சீமான்களும் சீமாட்டிகளும் தம் தம் சக்திக்கு ஏற்ற அளவு

பொருள் உதவி செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு என் வந்தனத்தை எல்லோருக்கும் செலுத்துகிறேன்.

இத்தனை சிரத்தை எனக்கு இதில் உண்டாகவேண்டிய காரணமென்னவென்று நீங்கள் வியக்கலாம். எதற்கும் பிறர்படும் துயரத்தைக்கண்டு தான் இரங்குவது ஒருவிதம். தனக்கே அத் துயரம் சம்பவித்துத்தான் அந்த உணர்ச்சியை அனுபவித்தால்தான் அதிகமாகத் தெரியும். இன்பதுன்பத்தின் ஸாரமறிந்து முயற்சி செய்ய மனம் இசையும். ஒரே ஒரு வார்த்தையில் சொல்லிவிடுகிறேன்.

என் மனைவியும் நானும் வெகு அன்யோன்யமாகவிருந்தோம். எங்கள் அன்பின் பூங்காவில் அரும்பு பூத்ததுபோல் ஒரு குழந்தையும் பிறந்தது. எக்கால சாபத்தின் பாபமோ! பயங்கரமோ! என் மனைவிக்கு மேற்குறித்த துர்வியாதி கண்டதும் நான் அவளை வெறுத்தேன். அந்த கோரத்தைச் சகியாது என் மனைவி தன் குழந்தையுடன் ஆற்றிற்குப் பலியானுள். அந்த துக்க சம்பவத்திற்குப் பிறகு என் வாழ்க்கையே மாறியது. அதுமுதல் குஷ்டரோகிகளைக் கண்டால் எனக்கொரு அலாதி பச்சாத்தாபம். என் மனைவியையும் குழந்தையையும் பலிகொண்டதுபோல் இன்னும் எத்தனைக் குடும்பங்களில் எத்தனை பேர்களைப் பலி வாங்குமோ என்கிற பயமும் பரிதாபமும் என்னிதயத்தில் பதிந்து இதற்கோர் பரிகாரம் தேடுவதற்கே என்னை அவ்வுணர்ச்சி அர்ப்பணமாக்கிவிட்டது. அதற்கே என்னுயுள்வரையில் உழைத்துவிடுவதென்று கங்கணம் கட்டிக் கொண்டேன். பகவானும் கிருபை செய்து வருகிருர். ஜனங்களும் ஆதரவு காட்டி வருகிருர்கள். கவர்மெண்டிலும் உதவி நாடி இருக்கிறேன். காரியம் ஜெயமாகவேண்டும்.

இப்படிக்கு,
லோகநாதன்.

## கதைச் சுருக்கம்

ஜென்மாந்திர பாவம் யாரை விடுகிறது? கர்மம், கர்ம வியாதி, கர்ம பலன் என்கிற போர்வையில் பல பேர்களை பல பீடைகள் பாதிக்கின்றன. அதேபோல் கங்காதரனை குஷ்டநோய் பீடித்தது. அவன் நல்ல பணக்காரன், பணத்திமிர்படைத்த அவன் முன்னோர்கள் ஓர் ஏழைப் பெண்ணை அவனுக்கு விவாகத்தைச் செய்து விடுகிருர்கள். ஏழைப் பெண்ணுயினும் உணர்ச்சியிலும், மற்ற அம்சங்களிலும் அவளுக்கும் எல்லாம் ஒன்ருகத்தானே இருக்கும்.

தாய்தகப்பனருக்கு வியாதியின் ரகஸ்யம் தெரியாது பணத்திற்காகப் பெண்ணை விற்பதுபோல் விற்றுவிட்டுப் போய்விடுகிருர்கள். விவாகம் செய்தபிறகு புருஷனிடம் பழக அவள் சம்மதிக்கவில்லை. முதலில் கஷ்டப்பட்ட அப் பெண்மணி தன் விதியை எண்ணி அவனிடம் வெகு பணிவாக நடக்கவாரம்பித்துவிட்டாள். அவளையும்

அவள் புருஷனையும் எல்லோரும் வெறுக்கிறார்கள். வியாதிப் பிண்டமாகவே குழந்தை வேறு பிறந்துவிட்டது.

கணவனைக்கண்டு சகிப்பதைவிட குழந்தையைக் கண்டு சகிக்காது தத்தளிக்கிறாள். அந்தப் பெண்ணுக்கும் இதே வியாதி தொத்திக்கொண்டதால் அவள் ஒரு கடைக்குப்போனாலும் கடைக்காரனும் மற்ற கடையில் வருகிறவர்களும் வெறுத்துப்பேசுகிறார்கள்.

ரோஷம் தாங்காது அந்தப் பெண் தவிக்கிறாள். பணக்கார அண்ணன்தம்பிகள் வியாதிக்காரனை மோசம் செய்து பணத்தையும் கரைத்துவிடுகிறார்கள். அவளுடைய கஷ்டம் சொல்லமுடியவில்லை. வீதியில் பிச்சை எடுக்கவும் காலவிதி அமைந்துவிடுகிறது. பள்ளிக்கூடத்திலிருந்துவரும் பிள்ளைகளுடன் இவர்களின் குழந்தையும் சேர்ந்து விளையாடச் சென்றதைக்கண்ட ஒரு குழந்தையின் தாயார் ஆத்திர மிகுதியால் அக் குழந்தையை நையப்புடைத்துவிடுகிறாள்.

ஏற்கெனவே ரோகம் நிறைந்த குழந்தை செத்துப்போகிறது. இதைக்கண்ட அதன் தாயின் வயிறு எரிவதோடு ஒருபுறம் நிம்மதியாகக் குளிர்ந்துவிட்டது. அடித்தவளின் காலில் விழுந்து வணங்கி "தாயே! இக் காரியத்தைச் செய்ய மனமில்லாது இத்தனை நாட்களாய் துடித்தேன். நான் இந்த உலகத்தில் கண்டபலன் போதும். என் குழந்தையாவது ஒருவித பயங்கரத்திற்கு ஆளாகி அவதிப்படாமல் நிம்மதியும் சாந்தியும் அடையும்படிக்குச் செய்ததற்காக மெத்த வந்தனம் செய்கிறேன்" என்று கூறுவதைக் கேட்ட அந்த கொலைபாதகியின் நெஞ்சு இளகுகிறது. ஆயிரம் வாள் கொண்டு இதயத்தில் அறுப்பதுபோல் சித்திரவதை செய்கிறது. தான் செய்த மகத்தான பயங்கரத்தைப் பிறகு உணர்ந்து கண்ணீர்விடுகிறாள்.

இனி போன உயிர் திரும்புமா? பெற்ற வயிறு எரிவதோடு சாந்தியும் நிலவியது. இனி ரோகம் வந்தவர்களுக்கு வயித்தியம் செய்து சொஸ்தப்படுத்தாமல் விவாகத்தைச் செய்து பரிதாபப்படவேண்டாம்" என்று அவளே வீதி வீதியாகப் பிரசாரம் செய்கிறாள். இத்தகைய கொடிய வியாதியைத் தடுக்க ஒவ்வொரு ஊரிலும் ஆஸ்பத்திரிகள் கட்டுங்கள். உதவி செய்யுங்கள் என்று கத்திய உணர்ச்சியிலேயே அவளும் இறந்துவிடுகிறாள். மனைவியும், மகளும் இறந்தபிறகு ஞானம் உதயமாகிறது. பணத்திற்காக ஆசைப்பட்டுப் பெண்ணைத் தள்ளிய பெற்றோர்கள் கண்டு கதறுகிறார்கள். தான் திமிர்படைத்து விவாகம் செய்துகொண்ட முட்டாள்தனத்திற்கு வருந்துகிறான். பிறகு ஆஸ்பத்திரி ஏற்படுகிறது. வைத்தியம் செய்துகொண்டவர்கள் மகிழ்கிறார்கள்.

இதைப் படிக்கும் கமலாவுக்குச் சகிக்கவேமுடியாத துக்கம் பீறிக்கொண்டுவந்தது. 'கதையைப் படிக்கும்போதே இப்படியிருக்கிறதே, பார்க்கும்போது எப்படி இருக்குமோ!' என்று வயிற்றில் சங்கடம் செய்கிறது. தன் வாழ்க்கையின் பயங்கரமும் கண்முன்பு தாண்டவமாடுகிறது.

இந்நிலைமையில் தினா தூக்கியாகிவிட்டது. குஷ்டரோகியின் மகளாகவே ஜெயாவுக்குப் பாத்திரம் அமைந்திருப்பதைக் கண்டு பின்னும் துடிதுடிக்கிருள். "ஜெயாவின் வாழ்க்கையிலுள்ள பயங்காத்தைப்போலவே நடிப்பிலும் வரவேண்டுமா!" என்று இதயம் விம்முகிறது. எத்தனை அடக்கியும் அவளால் அடக்கவேமுடியவில்லை.

ஜெயாவின் நடிப்பைக் காணக் காண ஜனங்கள் அபாரமான ஆரவாரம் செய்கிருர்கள். அசல் குஷ்டரோகியைப்போலவே ஜயா நடிப்பதைக்கண்டு கமலாவின் வயிற்றில் நெருப்பை அள்ளி வீசுகிறது. "ஐயோ! ஆண்டவனே என் கண்மணிக்கு இத்தகைய விபத்து கனவிலும் வராதிருக்கவேண்டுமே! என் வயிற்றில் பாலை வார்க்கவேண்டுமே" என்று பகவானை ப்ரார்த்திக்கிருள்.

கதையில் ஜெயாவை ஜனங்கள் வெறுப்பதும் குத்தலாகப் பேசுவதும் அசங்கியப்பட்டு அடிப்பதும் கண்டு கமலாவின் கண்கள் மழையைப் பொழிகின்றன. 'குஷ்டரோகியின் மகள்... குஷ்டரோகியின் ஆஸ்தி' என்றெல்லாம் பேசும்போது தன் ரகஸியமும் வெளியாருக்குத் தெரிந்தால் இப்படித்தானே பேசுவார்கள். ஐயோ! என்ன பயங்கரம்...இவ்வளவு கொடுமையானதா இந்த வ்யாதி?...இருக்க இடங்கொடுக்கமாட்டேன் என்கிருர்களே. குடிக்கும் தண்ணீர் குளத்தைக் கூடத் தொடவிடாது விரட்டுகிருர்களே...ஸ்வாமி தரிசனத்திற்குக் கூட நிற்கவிடாது துரத்தியடிக்கிருர்களே...ஐயோ! இந்த உண்மைகளை அறிந்துதான் என் ப்ராணபதி தலை காட்டாது ஓடிவிட்டார். அவர் செய்தது அப்போது மிகவும் கேவலம் என்று நினைத்தேன். அதன் உண்மை தத்துவம் இப்போதல்லவா தெரிகிறது. என்ன பயங்கரம்!...என்ன கொடுமை!"...என்று தனக்குள் தான் தவிக்கின்ருள். ஜயாவை அடித்துக்கொல்லும் கட்டத்தில் கமலாவின் உயிரே துள்ளியது. அடிக்காதே என்று கத்திவிடவும் துணிந்தாள்.

ஜெயாவின் நடிப்புக்கு மெச்சி ஆரவாரம் செய்யும் ஜனங்கள் அவள் பிச்சைக்காரியாய் தெருவில் வரும்போது தம்தம் கையில் கிடைத்ததை எல்லாம் வாரி இறைத்து 'பேஷ்! பேஷ்! ஒன்ஸ் மோர் ஒன்ஸ் மோர்' என்று கத்தினுர்கள்.

'குழந்தைக்கு எங்கு த்ருஷ்டிபட்டுவிடுமோ!' என்று கமலாவுக்குப் பதறியது. கொடிய அந்த ரோகத்தினுல் எத்தனை கஷ்டப்படமுடியுமோ அத்தனையும் அக் கதைக்குள் சித்திரித்திருந்ததைக் கண்டு எல்லோரும் சந்தோஷப்பட்டார்கள்.

நாடகம் முடிந்தபிறகு, நாடகத்தை நடத்திய முதலாளி நடித்தவர்களைப்பற்றி மிக்க ச்லாகித்தும் புகழ்ந்தும் பேசுகையில் ஜயாவின் நடிப்பைப்பற்றி வெகு வெகு கொண்டாடிப் பேசி தங்கப் பதக்கம் பரிசாகக் கொடுத்தார்கள். பதக்கத்தைப்பெற்ற ஜெயாவின் சந்தோஷம் எல்லை கடந்தது. அதைக் கண்ட தாயின் இதயமும் கட்டு மீறிக் களித்தது.

நாடகம் முடிந்ததும் நேரே மேடைக்கு ஓடிப்போய் கமலா தன் மகளை வாரியணைத்துக் கட்டிக்கொண்டு பல முத்தங்களிட்டுப் பின் எல்லோரிடமும் விடைபெற்று வீட்டிற்கு வந்தாள். குழந்தைக்கு த்ருஷ்டிகள் பல கழித்தாள். அவளுக்கு ஒரு குறைவும் இல்லாதிருக்கவேண்டுமென்று பகவானை ப்ரார்த்தனை செய்தாள்.

அதைத் தவிர அவள் வேண்டுவதற்கு என்ன இருக்கிறது. தன் கணவனும் கூட இருந்து இந்த அற்புதமான நடிப்பைக் கண்டு களிக்கவில்லையே என்று எண்ணி ஏங்கியது உள்ளம். ஜெயாவையே இமைகொட்டாது பார்த்துக்கொண்டு நின்றாள். அதுவே அவளுக்கு ப்ரம்மானந்தமாகத் தோன்றியது.

எனினும் இக்கொடிய வ்யாதியின் பயங்கரத்தால் விளைந்த விளைவுகளை நாடகத்தில் பார்த்த பிறகு தன் கணவனுக்கு இப்பேர்ப் பட்ட துன்பங்கள் ஒன்றும் நேராதிருக்கவேண்டுமே; அவன் தீர்க்காயுசாகவிருந்து தனக்கு நல்ல மங்களத்தைக் கொடுக்க வேண்டுமே, அவன் மனமுடைந்து ஒரு தீமையும் புரிந்துகொள்ளாதிருக்கவேண்டுமே என்று பற்பல எண்ணங்கள் உள்ளத் திரையில் அலைகள்போல் எழுந்து வதைக்கவாரம்பித்தன. அந்த எண்ணங்களில் உந்தப்பட்டு அப்படியே சோகப் பதுமைபோல் நின்றாள். அசையாக் கல்லோ என்று சந்தேகிக்கும்படியாகிவிட்டது.

## 41

## எட்டிப் பார்த்த பிசாசு கிட்ட வந்தது

"நிஜமாகவா! அங்கமுத்து! நிஜமாகவாடீ....பொய்சொல்லாதே. இறந்தவர்கள்கூடவா பிழைக்கமுடியும்!...என்னை ஏதோ செய்கிறதே. நீ கண்ணால் பார்த்தாயா!" என்று தாசி அதிரூப சுந்தரி வெகு ஆச்சரியத்துடனும் தாங்கமுடியாத வியப்புடனும்கேட்டாள்.

"அம்மா! நான் ஏன் பொய் சொல்லப்போறேன். என் கண்ணாலே பாத்தேன். சாமியாரின் ஆவி ஒரு பெண்பிள்ளை உடலில் புகுந்துகொண்டு வந்திருக்கிறார். அந்த ஸ்வரூபத்தைப் பார்த்த உடனே காளிகாதேவிபோலெ பயங்கரமாயிருக்குது. அதோடு சாமியார் தான் எடுத்தகாரியத்தில் வெற்றிபெற்று தங்கநாணயத்தை அப்படியே கொட்டினார்; அதைப் பார்த்து நான் பிரமித்துப்போனேன். நீங்க மொதல்லே இதை தெரிஞ்சிக்கிணுமென்னுதான் இந்த ராத்திரிலேயே ஓடிவந்தேன்" என்று இறைக்க இறைக்கப் பேசினாள்.

தாசியின் தலை சுழலுகிறது. இன்னதென்று விவரிக்கமுடியாத சித்திரவதை செய்கிறது. "சாமியாரின் பிரேதத்தைச் சமாதியில்

வைத்தபிறகு ஆவியாவது வந்து பேசுவதாவது. இந்த அதிசயத்தை உலகத்தில் கண்டதுமில்லை; கேட்டதுமில்லையே! நாமும் நேரில் போய்ப்பார்க்கலாமா!" என்கிற குழப்பமும் ஆவலும் உண்டாகியது. "அங்கமுத்து! நீ இப்போது அங்கிருந்து நேராகவா வருகிறாய்? நானும் வந்து இப்போது பார்க்கட்டுமா!" என்றாள்.

அங்கமுத்து அதற்குச் சம்மதித்தாள். தாசி அதிரூப சுந்தரிக்கு உள்ளூறப் பயமும், நடுக்கலும் இருப்பதை அடக்கிக்கொண்டு அங்கமுத்துவுடன் கிளம்பினாள். நள்ளிருட்டில் தனியாக இரண்டு பேர்கள், அதிலும் பெண்பிள்ளைகள், போவதென்றால் இயற்கையான திகிலும் கிலியும் பிடித்து ஆட்டியதால் வீதியில் இரண்டடி நடந்த தாசி மறுபடியும் பயந்துபோய் உள்ளே வந்துவிட்டாள். "அங்கமுத்தூ! என்னால் நடக்கவே முடியவில்லை. மார்பு படபடவென்று அடித்துக்கொள்கிறது. நீ ஒன்று செய். நாளைகூட இம்மாதிரியே அந்தசாமியாரின் ஆவி வருமாயின் உடனேவந்து என்னை அழைத்துக் கொண்டுபோகிறாயா! இன்று என்னால் வரவே முடியவில்லை. மனத்தில் பயமாகவே இருக்கிறது" என்றாள்.

"என்ன பயம்மா! ஏதோ ஒரு பெண்பிள்ளையின் உடலில்தான் சாமியார் புகுந்துகொண்டு வந்திருக்கிறார். நீங்கள் வந்தது தெரியாது வந்து பார்த்துவிட்டு வாருங்கள். இன்னொரு வேடிக்கை யன்னு! சாமியார் மடத்திலிருந்து நீங்கள் கொண்டுவந்து வைத்திருக்கும் ரத்ன ஸ்வாமிகளின் ரகஸியத்தைக்கூட ஸ்வாமியாரே சொல்லிவிட்டாரென்றால் இன்னுமா உங்களுக்குச் சந்தேகம்? உங்களையும் என்னையுந்தவிர இந்த ரகஸியம் யாருக்குமே தெரியாதென்று சொன்னீர்களே! இப்போது அத்தனை பேர்களுக்கும் வெட்ட வெளிச்சமாகிவிட்டதே. இதைக்கொண்டு அவர்கள் ஏதாவது செய்தால் என்ன செய்வது? நான்தான் இருக்கிறேனே! பயமென்னவந்தது. கிளம்புங்கள்" என்று தேற்றினாள்.

அங்கமுத்துவின் தைரிய மொழிகளைக் கேட்ட தாசிக்கு சிறிது தைரியம் ஏற்பட்டது. மெல்லத் தன்னைத்தான் தேற்றிக்கொண்டு கிளம்பினாள். ஒரு பெரிய போர்வையை எடுத்துத் தலை முதல் கால் வரையில் போர்த்துக்கொண்டு கிளம்பினாள். இம்மாதிரி நள்ளிருளில் அவள் அலகையைப்போல் போனதே கிடையாதாகையால் உடல் நடுக்க மெடுத்துக்கொண்டது.

சாமியாரின் மடத்திற்கும் தாசியின் வீட்டிற்கும் அசாத்ய தூரமிருப்பதோடு சாமியாரின் மறைவுக்குப் பிறகு அந்த மடத்தின் பக்கமே அவர்கள் போகவில்லை. அதோடு ஸ்வாமியாருக்கும் தனக்கும் உள்ள ரகஸிய சந்திப்பு அங்குள்ளவர்களில் இரண்டொருவருக்குத் தான் தெரியும். அவர்கள் அங்கிருக்கிறார்களோ, இல்லையோ! அதோடு சாமியாரின் கடைசி காலத்தில் தான் பக்கத்திலிருந்த ரகஸியம் அவளையும் அவளுக்கு உடந்தையான அங்கமுத்துவையும் தவிர வேறு யாருக்குமே தெரியாது. சாமியார் சாகுந்தறுவாயில்

கொத்துயிர் குலை உயிராயிருக்கையில் தான் ஓடி வந்துவிட்ட ரகஸியமும் பிறருக்குத் தெரியாது. தான் சாமியார் எதிரில் எப்படி நம்பிக்கையுடன் போவது. என்ன நடக்குமோ, என்கிற பலவிதமான குழப்பங்கள் அவள் மனத்தை வாட்டுகின்றன.

அதனால் ஒருவிதமான நடுக்கலுடன் கால் மீண்டும் பின்னடைந்தது. தெருக்கோடி வரையில்கூடப் போகவில்லை. அதற்குள் மனது மாறியதால் மீண்டும் வீட்டிற்கே திரும்பிப்போய்விடலாம் என்று எண்ணினாள். அங்கமுத்து அவளை விடவே இல்லை. பலவந்தம் செய்து அழைத்துப்போனாள்.

மடத்தில் உள்ள சிஷ்யர்கள் தங்கக் குவியலைப் பார்த்து ப்ரமித்தவர்கள் சிறிது தெளிவு படைத்து எழுந்திருப்பதற்குச் சற்று நேரமாகியது. "ஸ்வாமீ!நாங்கள்தற்சமயம்என்னசெய்யவேண்டும்?" என்று கேட்டார்கள். ச்வாமியார் கலகலவென்று பெரிதாக நகைத்தார். ஒரு கனைப்புக் கனைத்துக்கொண்டார். "சிஷ்யர்களே! தங்கக் குவியலை நன்றாக எடுத்துப் பாருங்கள்.கையால் அளைந்துபாருங்கள். பயப்படவேண்டாம். உங்கள் மன ப்ராந்தியும் பயமும் தெளியட்டும். பிறகு நான் பேசுகிறேன்" என்றார்.

அந்த சமயத்திற்குத்தான் தாசியும் அங்கமுத்துவும் வந்தார்கள். தாசி, தான் வந்திருப்பது தெரியக்கூடாது என்கிற எண்ணத்துடன் மூடி முசுக்கிட்டபடியே எட்டிப்பார்த்தாள். அசல் துர்க்கா தேவிபோல் வீற்றிருக்கும் சாமியாரின் பிம்பத்தையும் அங்குக் கொட்டியுள்ள தங்க நாணயத்தையுங்கண்டு தன்னைமீறிய ப்ரமிப்பை அடைந்தாள். அவளால் அங்கு நின்று பார்க்கமுடியாது பயம் நடுக்கியதால் அங்கமுத்துவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஓட எத்தனித்தாள்.

அங்கமுத்துவும் விடாது 'நில்லுங்கம்மா! சற்று இருங்கம்மா!" என்று கூறினாள். ஆனால் தாசிக்கு அவளையறியாத பயம் நடுக்கியதால் உடனே ஓட்டமாக ஓடியேபோய்விட்டாள். அதற்குமேல் எத்தனை இழுத்தும் நிற்காததால் அங்கமுத்துவும் கூட ஓடிவந்தாள். தாசி வீட்டிற்கு வந்ததும் அவளால் தாங்கமுடியாத அதிர்ச்சியும் சந்தேகமும் உண்டாகியது,

"ஏண்டீ! அங்கமுத்து! இதெல்லாம் நிச்சயமானதாக இருக்குமா! அந்த ரூபத்தைப் பார்த்ததும் எனக்கு வயிற்றில் சங்கடம் செய்து வதைக்கிறதே. அன்று சாமியாரின் உயிர்போகும் முன்பே நீயும் நானும் ஓட்டமாக ஓடி வந்துட்டோமே! அதன் பிறகுதான் சாமியாரைப் புதைத்துவிட்டார்களே! இதென்ன விளையாட்டா! கேலிக் கூத்தா! ஒன்றுமே தெரியவில்லையே! அந்த குரலைக் கேட்டால் சாமியாரின் குரலைப்போலவே இருக்கிறது. எனக்கு ஒரு வழியிலும் நம்பிக்கை உண்டாகமாட்டேன் என்கிறதே. ஆனால் என்னை யறியாது ஒருவிதமான பயம் மட்டும் என்னை வதைத்து

உலுக்குகிறது. உடம்பெல்லாம் கிடுகிடென்று நடுங்குகிறது. என்ன செய்வது!"...என்று பயத்தின் வேகத்துடன் கூறினள்.

அதே சமயம் அவ்வீட்டு மொட்டை மாடியிலிருந்து "அதிரூபம் அதிரூபம்! எதற்காக நீ பயந்துகொண்டு ஓடிவந்தாய்...கண்மணி! நீ பயப்படுவாயோ! என்கிற எண்ணத்தினல்தான் நான் இதுவரையில் உன் வீட்டிற்குப் பலதரம் வந்தும் தூரவிருந்து பார்த்துக் களித்துவிட்டுப் போனேன். இன்று நீயே அங்கு வந்தும், என்னிடம் ஒரு வார்த்தை சொல்லாது வந்துவிட்டதால் என் மனது கேட்கவில்லை. நான் உன்னைப்பார்க்கவேண்டும் என்கிற பேராவலினல்தான் பெண்ணுடலாகப் பார்த்துப் புகுந்துகொண்டேன். அதைக் கண்டு கூடவா நீ பயப்படுகிருய்! அதிரூபம்! உன்னைப் போன்ற பெண் சரீரத்தைக் கண்டு பயப்படாதே...இப்படிவா... உனக்காக நான்கொண்டுவந்துள்ள தங்கக்குவியலை வாங்கிக்கொள்" என்று கூறிய குரலைக்கேட்டதும் அதிரூபமும் அங்கமுத்துவும் இடியோசையைக் கேட்ட நாகம்போல் இடிந்துவிட்டார்கள்.

அவர்களால் நிலைமையைச் சமாளிக்கவே முடியவில்லை. இதய வேகம் அதிகரித்து வாட்டுகிறது. அதிரூபத்தின் தேகம் வெடுவெடு என்று நடுங்குவதை அங்குமுத்து நன்ருகப் பார்க்கிருள். வெயர்வை வெள்ளம் குபீரென்று பொங்கி வழிகிறது. பொறியிலகப்பட்ட எலிகளைப்போல் இருவரும் துடிக்கிருர்கள். பெருமூச்சுதான் தூக்கியடிக்கிறது.

## 42

### கைக் கெட்டியும் வாய்க் கெட்டவில்லை

இளஞ் சிறுமியாயிருப்பினும் ஜெயாவின் மனே தர்மத்தின் வேகமும், புத்தி நுட்பத்தின் கூர்மையும் காண்போர் பிரமிக்கும்படிக்கிருந்தது. தான் வெகு நன்ருக ஆடி தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்ற மகிழ்ச்சியில் தன் பிதா இருந்து இதைக் கண்டு சந்தோஷப்படவில்லையே என்கிற வருத்தமும் தோய்ந்து கிடந்தது. சிறுமியாகையால் பதக்கம் மட்டுமின்றி அனேகவிளையாட்டுச்சாமான்களும் அவளுக்குப் பரிசாக வழங்கினுர்கள். அவைகளை வைத்துக்கொண்டு தன் தம்பிக்கு விளையாட்டுக்காட்டி மகிழ்ந்தாள். கமலா தன் மகளுக்கு எங்கே த்ருஷ்டி வந்துவிடுகிறதோ என்று த்ருஷ்டி கழித்து இன்புற்ருள்.

நாடகம் நடந்த சில தினங்கள்வரையில் அனேக பத்திரிகைகளில் இந்நாடகத்தின் சிறப்பைப்பற்றியும் நடித்தவர்களின் திறத்தைப்பற்றியும் பணத்தை மிகவும் உபயோகமான குஷ்டரோக ஆஸ்

பத்திரி நிதிக்காக கொடுப்பதைப் பாராட்டியும், புகைப்படங்களுடன் வருவதைக் கண்டு கமலாவின் உள்ளம் பூரித்து, தன் கணவனும் இதைக்கண்டு களித்தால் எப்படியிருக்குமென்று ஏங்கினாள்.

ஒருதினம் ஜெயா பள்ளிக்கூடத்திலிருந்து விளையாடிவிட்டுத் திரும்பி வரும்போது தன்னையே இமைகொட்டாது பார்த்துக் கண்ணீர்விட்டு பெருமூச்சுவிடும் ஒரு ஆத்மாவை தற்செயலாகப் பார்த்துவிட்டாள். சில வருஷங்களுக்குமுன்பு ரயில்வே ஸ்டேஷனில் பார்த்த சோமுவின் சாயலை எப்படியோ அச் சிறுமி கண்டுகொண்டு அவனை இமைகொட்டாது தானும் பார்த்தாள்.

பிச்சைக்காரிக்கு நோய் இருப்பதைப்போலவே இவனுக்கும் இருப்பதைக்கண்டு சற்று தயங்கி நின்றாள். இவள் தன்னைப் பார்த்து நிற்பதையறிந்த சோமு சற்று பயந்தபடியே பின்னுக்குப் போகப்போனான்.

யாரோ ஒரு புண்ணியாத்மா கட்டைதடிபோன்ற சுருட்டைக் குடித்துவிட்டு நெருப்புடன் அதை வீதியில் ஒய்யாரமாக எறிந்துவிட்டுச் சென்றான். சோமு அதை மிதித்து அது சுறீரென்று சுட்டதால் ஒரு துள்ளு துள்ளி பக்கத்திலிருக்கும் மரத்தில் மோதிக்கொண்டு விழுந்தான்.

இதைக்கண்ட ஜெயா "ஐயையோ! யாரோ ஒத்தன் விழுந்துவிட்டானே! ஐயோ! பாவமே...யாராவது வந்து சற்று தூக்குங்களேன்...இப்படி வாருங்களேன்" என்று கத்தினாள். வீதியில் போகும் இரண்டொருவர் அருகில் வந்து பார்த்துவிட்டு "ஐயையோ குஷ்டரோகியன்னா இவன்!....இவனை யார் தொட்டுத் தூக்குவார்கள்" என்று உரக்கவே சொல்லிக்கொண்டு போனார்கள்.

ஜெயாவோ சிறுமியாயிருப்பினும் அம்மாதிரி சொல்லியதைக் கேட்டு மனது சகிக்காமல் "ஐயோ! பாவம். அப்படி சொல்லக் கூடாது சார்! வியாதிக்காரர்களைப் பார்த்து வெடுக்கென்று சொன்னால் கட்டாயம் அந்த வியாதி நமக்கு வந்துவிடுமாம். ஸ்வாமி தண்டனை செய்வாராம். எங்கம்மா தினம் எனக்கு இம்மாதிரிதான் புத்தி சொல்லித் தருகிறாள்...அடேயப்பா! நீ மெள்ள இப்படி எழுந்துவா!" என்று சற்றும் பயமோ அசங்கியமோ இல்லாமல் சோமுவின் கையைப் பிடித்து இழுத்தாள்.

அந்தோ! பரிதாபம்...சோமுவுக்கு எப்படித்தானிருக்கும்? ஜெயா தன் வயிற்றில் பிறந்த மாணிக்கம் என்பதை அவன் அறிந்தும் புத்திரவாத்ஸல்யத்துடன் குழந்தையைக் கட்டி யணைக்கும் பாக்யம் உண்டா! "ஆதியில் வியாதிக்காரி, குழந்தையின் உயிரைக் காப்பதற்காகத் தொட்டபோது கமலாவின் உயிர் துடித்ததே. இப்போது குழந்தை என்னைத் தீண்டுவதை என்னால் தடுக்கமுடியவில்லையே!" என்று தவித்தான்.

கையைத் தொடாதே என்று சொல்கிறானேயன்றி குழந்தையின் அன்பு ததும்பும் கரம் தன்மீது படும்போது அமிருத

தாரையே தன்மீது படுவதுபோல் பூரித்துப் புலகிதமாகிறது. எனினும் வியாதி...கொடிய வியாதி. பயங்கர வியாதி...மாசுமறு வற்ற என் கண்மணியின் தேகத்தில் இந்த பீடை பிடித்த கை படவே வேண்டாம். என் செல்வரத்தினத்திற்காவது ஒரு பயங் காமும் இல்லாதிருந்தால்போதும்" என்று தனக்குள் எண்ணிய படியே மெல்ல சமாளித்துக்கொண்டு எழுந்து நின்று "குழந்தே... என்னைத் தொடாதேம்மா...நான் மகாபாவி. என்னைப்பாத்தால் கூட பாவம் வரும். தொட்டால் விமோசனமே வராது. தொடா தேம்மா!" என்று கண்ணீர் பெருகக் கூறினன்.

இதைக்கேட்ட ஜெயா "ஐயோ! பாவம். நோயாளிகளுக்குத் தான் உபகாரம் பண்ணனும். அப்பதான் ஸ்வாமி நமக்கு உபகாரம் பண்ணுவார். நோயாளிகளை வெறுக்கக்கூடாது. வெறுத்தால்ஸ்வாமி நம்மை வெறுப்பார்" என்று எங்கம்மா தினம் சொல்லித்தரா! அதுக் காக கதைகளெல்லாம் சொல்ரா. பள்ளிக்கூடத்து வாத்தியாரம்மா கூடதான் சொல்ரா! இந்தமாதிரி குஷ்டரோகி ஆஸ்பத்திரி கட்டி உதவுவதற்குத்தான் எங்க பள்ளிக்கூடத்துலே ட்ராமாபோட்டா! அதிலே ஒரு குஷ்டரோகியின் மகளாகவும் நானே குஷ்டரோகி யாகவும் கூட நடித்தேனே. ஏராளமாய் பணம் வந்தது. ஆஸ்பத்திரி கட்ட அத்தனையும் குடுத்துவிட்டோம். நான் ரொம்ப நன்னு நடிச்சேன்னு எனக்கு தங்க பதக்கம், பொம்மைகள், மோட் டார் ஏதேதோ கொடுத்தார்கள்.

இதோ பாரு...எங்க வீடு பக்கத்து தெருவுலேதான் இருக்கு. நீ வரயா! என் தங்க மெடலெ காட்டுறேன். என்னை நிறைய பட மெடுத்திருக்கிறார்கள். அதையும் காட்டுறேன் வா....வாப்பா...வா" என்று தன்போக்காகச் சொல்லிக்கொண்டு போவதைக் கேட்ட சோமுவின் உள்ளம்விவரிக்க வியலாத வேதனை செய்கிறது."குஷ்ட ரோகியின் பெண்ணுகவா நடித்தாய்...நீயுமா குஷ்டரோகியாக நடித் தாய்?...ஐயயோ அது என்ன கதை...உன்னை யாரு அப்படி நடிக் கச்செய்தது?உங்கம்மா உன்னை நடிக்கவிட்டாளா?"...என்றுதன்னை மீறிய உணர்ச்சியுடன் கேட்டுவிட்டான்.

ஜே:—எங்கப்பாதான் எங்கேயோ ஓடிவிட்டாராம். எங்கம்மா வுக்கு தர்ம காரியம்னு ரொம்ப இஷ்டம். அதிலும் குஷ்டரோகிகள் என்றால் ரொம்ப பரிதாபப்படுவா. ஒரு பிச்சைக்காரி இருக்கா. அவளுக்கு எங்கம்மா ஒரு புடவைகூட கொடுத்தா; அடிக்கடி சாதம் போடுவா. காசுகூட கொடுப்பா. அவளுக்குக் கூட நேத்து என் பரிசுகளைக் காட்டினேன்...நீயும் வா...என் தங்கபதக்கத்தைக் காட்டுகிறேன்—என்று வற்புறுத்தினள்.

எத்தகையோருக்கும் தம்தம் பொருளைப்பற்றிப் பெருமையாக நினைப்பதற்கும் பிறரிடம் பேசுவதற்கும் ஒருதனி ஆசை சுபாவிக மாவே உண்டு. அதிலும் குழந்தைகளுக்கோ தாம் படிக்கும் பாட புஸ்தகம், எழுதும் ஸ்லேட்டு பலப்பம்,பென்ஸில் நோட்டுப் புத்தகம்

முதலியவற்றை தம் வீட்டிற்கு யார் வந்தாலும் எடுத்துக்காட்டுவது பிறவிக் குணமாயமைந்திருக்கிறது. அதில் அவர்கள் அனுபவிக்கும் ஆனந்தம் கையில் தின்பண்டமிருக்கும்போதுகூட அடையமாட்டார்கள். "இதோ பார் என் புதிய சொக்காய், என் கை வளையல், என் சங்கிலி, என் பெலுட்டு என்று அடுத்தபடியாக இவைகளைக் காட்டி மகிழ்வார்கள். அந்த குழந்தைகளின் உள்ளத்து உணர்ச்சி ஜெயாவை மட்டும் விட்டு விட்டுப் போகுமா! தன் பதக்கத்தைக் காட்டாத மனிதர்களில்லை. அதில் அவளுக்கு அத்தனை உத்ஸாகம். இவனை வலுக்கட்டாயமாகக் கூப்பிடுவதைத் தடுக்கவே சோமு ப்ரயத்தனப்பட்டான். வீட்டிற்குப்போனால்எங்கேகமலா உணர்ச்சி மிகுதியால் தன்னை காட்டிவிடுவாளோ என்கிற அச்சமே வாட்டியது. ஆதலால் "கண்ணு! நான் வரலேம்மா! எனக்கு ரொம்ப பசிக்கிறது. எங்கேயாவது கடைக்குப்போய் ஏதாவது வாங்கித் தின்னவேணும். நான் போகிறேன்" என்றான்.

ஆனால் தன் குழந்தை சிறு கையால் வாங்கிய பதக்கத்தைப் பார்க்க ஆவலும் தூண்டியது. குழந்தையோ விடமாட்டேன் என்கிறது. "எங்கம்மாவை சாதம் போடச் சொல்லுகிறேன் வாப்பா... வாயேன். இல்லாபோனா எங்கம்மாவை கேட்டு சாதத்தை இங்கு கொண்டு வருகிறேன். பதக்கத்தையும்கூட கொண்டு வருகிறேன்" என்றாள்.

சோமுவின் மனது அவனையறியாது சபல முற்று வைராக்யம் குலைந்து குழந்தையுடன் போகவேண்டுமென்று தடுக்க முடியாத ஆவல் உண்டாகியது. "எது வந்தாலும் வரட்டும்; என்ன நேர்ந்தாலும் நேரட்டும்: இந்த சமயத்தைவிட்டால் இனி எப்போது பார்ப்பேனோ!" என்கிற ஒரு குருட்டு எண்ணம் வெகு தீவிரமாக உண்டாகியதால் "வாம்மா! கண்ணு! வா...வா...ஆண்டவன் இருக்கிறான். நம்மைக் காப்பாற்றுவான்" என்று கூறிக்கொண்டே வெகு தைரியத்துடன் கிளம்பினான்.

ஜெயா அவனை அழைத்துக்கொண்டு வரும்போது வீதியிலிருந்த ஒருவன் ஜெயாவைப் பார்த்து. "ஏ பொண்ணே! குஷ்டரோகியின் பெண்ணாகவும், நீயே குஷ்டரோகியாகவும் நடித்துப் புகழ் வந்துவிட்டதனால் உனக்கு மண்டைகொழுப்பு ஏறிவிட்டதோ! குஷ்டரோகிகளுக்கு பிரமாத உதவி புரிவதாக தினம் பிச்சைக்காரர்களை இழுத்துக்கொண்டுபோகிறாயே! இந்த தளுக்கு யார் சொல்லிக்கொடுத்தார்கள்? உங்கம்மாவோ, உங்க வாத்தியாரம்மாவோ இந்தமாதிரி தினம் செய்தால் நீ நடித்ததுபோல உனக்கே வந்துவிடும். பேசாமல்போடீ!...மகா பெரியமனுஷி நீ பிரமாதமாகப் புரட்டப்போகிறாயாக்கும்" என்று வெடுக்கென்று சொன்னான்.

இதைக்கேட்ட சோமுவின் மனத்தில் சுறுக்கென்று தைத்தது. ஜெயா அதைச் சற்றுகூட லக்ஷ்யம் செய்யாமல் அவனை முறைத்துப் பார்த்துவிட்டு "போ! போ! உன்னை யார் கேட்டா! நோயாளியைக்

கண்டு வெறுத்தால்தான் அந்த நோய் வந்துவிடுமாம்; உனக்குதான் அதுவரும். எனக்கு வரவே வராது. உன் பெண்ணுக்கு எங்கே ஒட்டிக்கொள்ளுமோ என்று தானே நீ ட்ராமாவுலே சேர்க்கமாட்டேன்னே! எனக்குத் தெரியாதோ!....நீ வாப்பா!''....என்று அலக்ஷ்யமாகக் கூறியவாறு நடந்தாள்.

உலகத்தில் சில மனிதர்கள் கொடிய பிணியையும், பசியையும் பொறுக்கிறார்கள்; வீண் அகம்பாவத்தையும் ஆத்திரத்தையும் பொறுக்கக் கூடிய சக்திதான் அற்றுவிடுகிறது. தான் ஒரு க்ஷண நேரத்தில்விளைவித்துவிடும் பெருந்தீங்கான காரியம் எத்தனை கொடிய விஷம்போலாகிவிடும் என்று யோசிக்கும் சக்திகூட அற்றுவிடுகிறது. முரட்டு வெறியில் எதைச் செய்கிறோம் என்னசெய்கிறோம் என்றுகூடப் பாராமல் தம் மனத்தில் பொங்கிவரும் ஆத்திரத்தின் வேகம் தீர்ந்துவிடுவதிலேயே சிலர் முற்படுகிறார்கள்.

வழியோடு போகும் பெண்ணை வீணாக வலுச் சண்டைக்கு இழுத்ததற்குக் காரணம் ஜெயாவுக்குத் தங்கப் பதக்கம் பரிசு வந்துவிட்ட வயிற்றெரிச்சல், தினம் அவள் நடிப்பைப்பற்றி ச்லாகித்துப் பத்திரிகையில் வரும் பொறாமை. தன் மகளை இதே பாத்திரமாக நடிக்கச் சேர்க்காது போனோமே, என்கிற ஏக்கம் எல்லாம் ஒன்று சேர்ந்ததால் ஜெயாவை வெடுக்கென்று பேசி வலுச் சண்டைக்கு இழுத்ததுமன்னியில் அவள் பதில் சொல்லியதில் பின்னும் ஆத்திரம் பீறிக்கொண்டு வந்ததால் ஜெயாவை ஆவேசங் கொண்ட மிருகம்போல் பட்டார்! பட்டார்! என்று முதுகிலும் கன்னத்திலும் அடித்துவிட்டான்.

இதைப் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டுமிருக்கும் சோமுவுக்குத் தன்னால் குழந்தைக்குப் பேராபத்தாக முடிந்துவிட்டதே என்று இதயம் துடித்தது. "ஐயா! ஐயா! பச்சைக் குழந்தையை இப்படிஅடிக்கலாமா...ஐயையோ! வேண்டாமய்யா! குழந்தையைக் கொல்லாதீர்கள்''...என்று நடுநடுங்கியபடியே சோமு கெஞ்சி மன்றாடினான்.

மூர்க்கமும் பொறாமையும் குடிகொண்ட மனிதன் அடித்துப் போட்டுவிட்டு சோமுவின்மீது ஒரு கல்லை விட்டெறிந்தவாறு ஓடினான். அருகிலிருந்தவர்கள் தடுத்தும் நிற்கவில்லை. ஜெயா தேம்பித் தேம்பி அழுதுகொண்டே "இரு இரு. ஸ்வாமி உன்னை நன்றாகப் பார்த்துக்கொள்வார்...என்னை நீ அடித்தமாதிரி உன்னை ஸ்வாமி அடித்துப்போடுவார்'' என்று கூறியவாறு சோமுவைப் பார்த்தாள்.

நாம் கூடப் போக எண்ணிய எண்ணமே என் கண்மணிக்குப் பேராபத்தாக முடிந்துவிட்டது. கூடபோனேமேயானால் உயிருக்கே ஆபத்தாக முடிந்தாலும் முடியலாம். என்னுடைய பாப நிழல் என்னோடு போகட்டும். என் குழந்தை தீர்க்காயுசாக இருந்தால் போதும் என்று எண்ணியவனாய் கல்லால் அடிபட்டு ரத்தம் ஒழுகு

வதைத் துடைத்துக்கொண்டே ஜயா பார்ப்பதற்குள் போய் ஒரு மரத்து மறைவில் மறைந்துவிட்டான்.

திரும்பிப் பார்த்த ஜெயா சோமுவைக் காணுது சுற்றுமுற்றும் தேடினுள். கண்ணுக் கெட்டிய வரையில் காணுததால் மனது சோர்ந்தது. அவன் இன்னுன் என்று தெரியாவிடினும் அவனே யறியாத ஒரு காந்தம் போன்ற வேகம் இழுத்தது. "உம்...பிச்சைக்காரன் பயந்துகொண்டு ஓடிவிட்டான் பாவம். கல்லால் பட்ட அடியினுல் என்ன ஆயிற்ருே!" என்று இளந்தளிர்போன்ற இதயத்தில் ஒரு உணர்ச்சி உண்டாகியது. அழுதுகொண்டே வீட்டிற்குக் கிளம்பினுள். அவள் கண்கள் மட்டும் அந்தப் பிச்சைக்காரனைத் திரும்பித் திரும்பி பார்த்துக்கொண்டே சென்றன. எங்கும் காணுததால் ஏக்கம் குடிகொண்டது.

---

## 43

### சூரப்புலியை விழுங்கும் வீரப் புலி

அங்கமுத்துவுக்கும் குலே நடுக்கமெடுத்துக்கொண்டதால்அவள் கட்டிலின் கீழே போய் புகுந்துகொண்டாள். அதிரூபத்திற்கு முகத்தில் மூடியுள்ள முக்காட்டை எடுப்பதற்கும் பயமாகிவிட்டதால் மெல்ல இறுகப்போர்த்துக்கொண்டு குப்புறப்படுத்தாள்

மீண்டும் சாமியாரின் ஆவி சற்று உரத்த குரலுடன் 'அதிரூபம்! அதிரூபம்! எனக்குப் பதில் சொல்வதற்குக் கூடவா நீ பயப்படுகிருய்? இதோ! நானே உன் பயத்தைத் தெளிவிக்க மந்திர விபூதி தருகிறேன். வா!" என்று கூறிக்கொண்டே தடாரென்று மாடியிலிருந்து கீழே குதித்து தடதடவென்று உள்ளே வந்தார்.

அங்கமுத்துவைக் காணவே இல்லே. கட்டிலடியில் ஒட்டிக் கொண்டுவிட்டாள். அதிரூபம் மட்டும் கட்டிலில் தேகம் நடுங்க படுத்திருந்ததைக் கண்ட சாமியாரின் ஆவி "ஹா....என் கட்டழகீ! என் கற்பக சுந்தரீ! இத்தனே நாளாய் உன்னைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தேன்; இன்று உன்னைக் கட்டியணையும் பாக்யமே பெற்றுவிட்டேன்" என்று கூறிக்கொண்டு அதிரூபத்தைச் சேர்த்துக் கட்டிக்கொண்டார்.

ஏற்கெனவே பயத்தினுல் ஊசலாடும் உயிர் முற்றிலும் நீங்கிவிடும்போலானதால் கூகூவென்றுகத்தினுள். கண்ணைத்திறந்துபார்க்காமலேயே நாக்குழற கூச்சலிட்டபடி...ஸ்வாமீ! பயமாயிருக்கிறதே...பயமாயிருக்கிறதே...என்னுல்பார்க்கமுடியவில்லே. மறைந்து போய்விடுங்கள்....மறைந்து போய்விடுங்கள்" என்று கத்தினுள்.

ஸ்வா:—அதிரூபம்! என்னைக் கண்டா பயப்படுகிருய். என் மீதா சந்தேகப்படுகிருய். நான் உனக்காகவே ஒரு பெண்பிள்ளேயின்

சரீரத்திலிருப்பதை மறந்தாயா! கண்மணீ! இதோ பாரு! கத்தினு யானல் அக்கம்பக்கமுள்ளவர்கள் கும்பல் கூடிவிடுவார்கள். அவர்கள் என்னுடைய கூடுவிட்டுக் கூடு பாயும் ரகஸியம் தெரியாது என்னையும் அடித்துக் கொன்றுவிடுவார்கள். பிறகு உனக்குத்தான் பேராபத்தாக விளையும். ஏற்கெனவே காட்டில் தற்செயலாக இறந்து கிடந்த பிணத்தில் நான் புகுந்துகொண்டிருக்கிறேன். அந்தப் பெண்ணின் சொந்தக்காரர்கள் வலை போட்டுத் தேடி யலைகிருர்கள். இந்தப் பெண்ணின் சவத்தை இங்குவிட்டு நான் போய்விடுவேன். இந்தப் பெண்ணை நீ கொன்றதாக உடனே கொலைக் குற்றம் உன்னைத்தான் சேரும். ஆகையால் கத்தாதே...என்னைப்பாரு...என்னைப் பார்க்காமலேயே நீ கூப்பாடு போடுவதில் என்ன லாபம்... அதிரூபம்!"...என்று கூப்பிட்டார்...

"என்ன! கொலைக்குற்றமா...என்மீது கொலைக்குற்றமா'... என்று அதிரூபத்தின் நெஞ்சு துடிக்கிறது....சாமியாரைக் கண் திறந்து ஒரு க்ஷணம் பார்க்கிருள். உடனே 'ஹா!' வென்று கூக்குர லிட்டபடியே கண்ணை மூடிக்கொள்கிருள். இன்னது செய்கிற தென்பது தெரியாது தத்தளிக்கும் சமயம் அக்கம் பக்கத்திலுள்ள வர்கள் வீதியில் வந்து 'என்ன கூச்சல்...திருடன் வந்துவிட்டானு! பாம்பு வந்ததா! என்ன சமாச்சாரம்...அதிரூபம்...கதவைத்திற... என்று தடதடவென்று இடித்தார்கள்.

"பார்த்தாயா அதிரூபம் நான் சொன்னது சரியாகிவிட்டது. இன்னும் ஒரு க்ஷணம் தாமதித்தால் அவர்கள் கதவை உடைத்துக் கொண்டு வந்துவிடுவார்கள். நான் போகிறேன். நாளை இதே நேரத்தில் வருகிறேன். இந்தா...உனக்காகக் கொண்டுவந்த தங்க நாணயம். அதோ ஜனக்கூட்டத்தின் கூக்குரல் அதிகம் கேட்கிறது" என்று கூறியபடியே சாமியார் மறைந்துவிட்டார்.

கட்டிலடியில் புகுந்த அங்குமுத்து மூச்சே விடவில்லை. சாமியார் மறைந்துவிட்டதை அறிந்தபிறகு மெல்ல எழுந்து நடுங்கிய படியே வீதியில் வந்து"ஐயா! ஒரு விசேஷமும் இல்லை. ஏதோ சொப்பனங் கண்டு அதனுல் உளறினேன். நீங்கள் போங்கள்" என்று கூறி அனுப்பிவிட்டு மீண்டும் உள்ளேவந்தாள்.

இதே பயத்தினுலும் கிலியினுலும் அதிரூபத்திற்கு அபாரமான ஜுரம் வந்துவிட்டது. குளிர் தூக்கித் தூக்கிப்போடுகிறது. இவளுடைய நிலைமையைக்கண்ட அங்கமுத்துவுக்கு பயம் நடுக்குகிறது. என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துப்போய் "அம்மா! ஜெமீந்தாருக்கு ஆளை அனுப்பட்டுமா! எனக்கு மிகவும் பயமாயிருக்கிறதே. செத்த மனிதனுவது, திரும்பி வருவதாவது, என்று நான் மிகவும் அலக்ஷியமாக எண்ணினேன். ஆனல் அருகில் பார்த்தபிறகு என்னை ஏதோ சித்திரவதை செய்கிறது. உங்களுக்கும் இப்படி ஜுரம் வந்துவிட்டதே...என்ன செய்வேன்? ஜமீந்தார் நம்மருகிலிருந்தால் சாமியாரின் பிசாசு மறுபடியும் வராமலிருக்கும். தினம்

தினம் இம்மாதிரி வந்தால் என்ன செய்வது" என்று கேட்டாள்.

அதிரூபம் பதிலே சொல்லவில்லையாதலால் அங்கமுத்துவுக்குப் பின்னும் பயம் எடுத்துக்கொண்டது. அடுத்த ஊரிலிருக்கும் ஜெமீந்தார் அதிரூபத்தினிடம் உயிரையே வைத்துள்ளவர். அவர் நினைத்த போதெல்லாம் இங்கு வந்துவிடுவார். தற்சமயம் அவருக்கு காச நோய் கண்டிருப்பதால் தினம் வரமுடியாது ஆரோக்யத்திற்காக மருந்து சாப்பிட்டுக்கொண்டு அடுத்த ஊரில் தங்கியிருக்கிறார். வாரம் ஒருமுறை வராதிருப்பதில்லை. உடனே அங்கமுத்துஒரு ஆளை யனுப்பியதால்விடியற்காலையிலேயே அலறியடித்துக்கொண்டு ஓடிவந்தார். அதிரூபத்தைப்பார்த்ததும் ஜெமீந்தாருக்கு தேகம்பதறியது. "என்ன உடம்பு...அதிரூபம்!...என்ன இப்படி உடம்பு காய்கிறதே. திடீரென்று என்ன வந்துவிட்டது"என்று அங்கலாய்ப்புடன்கேட்டார்.

அங்கமுத்து அழுதுகொண்டே "எஜமான்! குடிமுழுகிப் போய் விடும்போலிருக்கிறது. அந்த சாமியார் இறக்கவில்லையாம். உயிருடன் இருக்கிறனும். அந்த ஆவி இங்கு வந்து தாண்டவமாடியது. அதைப் பார்த்தது முதல் அம்மாவுக்கு இம்மாதிரி ஆகிவிட்டது. அந்த ஆவி வந்து அம்மாளையே கொண்டுபோய்விடுமோ என்று பயமாயிருக்கிறது" என்று பெரிதாக பிலாக்கணம் பாடினள்.

இதைக்கேட்ட ஜமீந்தாரரைத் தூக்கிவாரிப்போட்டது. "என்னது!...சாமியார் பிழைத்திருக்கிறனு...சாமியாரின் ஆவி வந்ததா! இதெல்லாம் என்ன ஹம்பக்கு? இறந்தவனுவது, திரும்பி வரவாவது. யார் இம்மாதிரி கயிறு திரித்துவிட்டது. அவன் என்றைக்கோ செத்து சுண்ணும்பாகிவிட்டான். இனி இந்த ஜென்மத்தில் அவன் வருவதாவது, சுத்த பொய். முற்றிலும் பொய். வேண்டுமென்று யாரோ மோசக்காரர்கள், சூதர்கள், அயோக்யத் திருடர்கள், பயமுறுத்திப் பணம் பறிக்கும் நோக்கத்துடன் செய்திருக்கும் வேலையாகும். சாமியாரின் ஆவியாவது கூடுவிட்டுக் கூடு பாய்ந்து வருவதாவது, நீ கூட இந்த வேடிக்கையை நம்புகிறயா?...அதிரூபம்!... எழுந்திரு. அந்த சாமியாரின் ஆவி என் கண்ணெதிரில் வரட்டும். நான் அந்த சாமியாரையே ஒரு ஆட்டு ஆட்டிவிடுகிறேன். பெண் பிள்ளை என்றதனுல் உங்களிடம் எந்தசோதாவோ இப்படிவாலாட்டுகிறன்" என்று கர்ஜனை செய்தார்.

அதிரூபம் ஜெமீந்தாரின் கைகளை இறுகப் பிடித்துக்கொண்டு... 'ஸ்வாமீ! பொருளுக்கு ஆசைப்பட்டு வந்த கள்ளனேயல்ல. மடத்திலுள்ள அத்தனை பேர்களும் அந்த ஸ்வரூபத்தை பிரத்யக்ஷமாகப் பார்த்தார்கள். அதோடு தங்கநாணயம் குவியல் குவியலாகக்கொட்டியதை கண்ணுல் கண்டேன். அதோடு எனக்கும் இத்தனை தங்கத்தைக் கொடுத்திருக்கிறார். இதைப் பார்த்தால்தான் பயமாயிருக்கிறது" என்று கூறித் தங்க நாணயத்தைக் காட்டினள்.

ஜெமீந்தார் நாணயங்களைப் பார்த்ததும் பிரமித்துப்போய் அதைத் திருப்பித் திருப்பிக் கிளறினர். "அசல் தங்கந்தான். சந்

தேகமே இல்லை. இத்தனை தங்கத்தைக் கொடுக்க எவருக்கும் மனம் வராது. இதென்ன ஆச்சரியம்!...அதிரூபம்!...எனக்குக்கூட இதில் ஏதோ பயம் உண்டாகிறது. இதென்ன ஆச்சரியம்! இத்தனை தங்கத்தையும் ஒருவன் கொடுப்பதென்றால் கட்டாயம் இதில் ஏதோ சூது இருக்க வேண்டுமென்று நிச்சயமாகத் தெரிகிறது. இதை நாம் வெறுமனே விடக்கூடாது. முதலில் இவைகளை இப்படியே போலீஸாரிடம் காட்டி இந்த ரகஸியத்தைக் கண்டுபிடிக்கும்படிச் செய்ய வேண்டும். முதலில் நான் மடத்திற்குச் சென்று பார்த்துவிட்டு வருகிறேன்" என்று கிளம்பினர்.

அதிரூபம் அவரை வழி மடக்கிக்கொண்டு "ஐயோ! நாம் ப்ரவேசிக்கவேண்டாம். எனக்கு ஏதோ மிகவும் பயமாயிருக்கிறது. தயவுசெய்து நீங்கள் பேசாமலிருங்களேன்" என்று தடுத்தாள்.

ஜமீ:—நீ பேசாமலிரு அதிரூபம்!...இதோ நான்போய் போலீஸில் முதலில் கம்ப்ளெண்டு கொடுத்துவிட்டு அவர்களை அழைத்து வந்து இந்த தங்கத்தையும் காட்டி இம்மாதிரி ஏமாத்தும் சோதாப் பயலை உடனே பிடித்துவிடுகிறேன். கூடுவிட்டுக் கூடுபாய்வதாம். செத்தவன் பிழைப்பதாம். இதெல்லாம் என்ன இந்திரஜாலம். இந்த கலிகாலத்தில் இத்தகைய விஷயங்களைக் கனவுகூட காணமுடியாது. சற்று விடு. இதோ வந்துவிடுகிறேன்—என்று கூறிக்கொண்டே வெகு வேகமாகக் கிளம்ப எத்தனித்தார்.

அச்சமயம் "பேஷ்! ஜமீந்தார்வாள்! சபாஷ்! ஹஹ்ஹஹ்ஹஹ்ஹ உம். உடனே வீரப்புலியாகிய நீர் போய் போலீஸ் சூரப் புலியை அழைத்து வாருமைய்யா! அழைத்து வாரும். மெத்த சந்தோஷம்" என்ற குரல் அவ்வறையின் மேல்பாகத்திலிருந்து கேட்டது.

ஆனல் உருவம் தெரியவில்லை. இக் குரலைக்கேட்டதும் ஜமீந்தாரின் சரீரம் ஒரு முழ உயரம் தூக்கிப்போட்டது. நின்ற இடத்திலேயே தேகம் கிடுகிடு என்று நடுங்கி ஆடுகிறது. கையில் எடுத்த சரிகை உருமால் அப்படியே நழுவி விழுந்தது. கண்கள் ஆணியறைந்ததுபோல் நின்றுவிட்டன. இந்த தடுமாற்றத்தைக் கண்ட அதிரூபத்தின் ஆவியே பறந்துவிடும்போலாகிவிட்டது. மீண்டும் சாமியாரின் சிரிப்பின் த்வனி அந்த அறை பூராவும் கும்மென்று சூழ்ந்துகொண்டு எதிரொலி செய்தது.

## 44

## சொர்க்கத்தின் சாயலோ—சோதனைக் காற்றோ?

"ஏம்மா அழுகிறாய்! ஜெயா! என் கண்ணல்ல சொல்லம்மா!... ஐயோ! இதென்ன கன்னத்தில் விரல்கள் பதிந்திருக்கிறதே, வாத்தியாரம்மா அடித்தார்களா! நீ சரியாக பாடம் படிக்கவில்லையா! என்னம்மா நடந்தது?" என்று கூறியபடியே குழந்தையைச் சமாதானம் செய்து அணைத்துக்கொண்டாள்.

ஜெயா மெல்ல சமாளித்துக்கொண்டு நடந்தவிவரத்தைக்கூறும் போதே கமலாவுக்கு அவன் தன் கணவன்தான் என்பது நன்ருகத் தெரிந்துவிட்டது.

'ஜெயா! ஐயோ பாவம்...அந்த மனிதன் எப்படிப் போனுர் என்று உனக்குத் தெரியுமா!' என்று வாய் ஏதோ பேசுகிறதே யன்றி கண்ணில் ஜலம் முட்டுகிறது. சங்கடம் தாங்கமுடியாது செய்து வதைக்கிறது. ஐயோ! அவரைப் பார்த்து எத்தனையோ நாட்களாகிவிட்டதே. காணவே இல்லையே! எப்படியிருக்கிருரோ! என்று இரவு பகல் ஏங்கிக்கொண்டிருந்தேனே! அந்த பிம்பத்தைக் கண்ணுல் பார்க்கவும் எனக்குப் பஞ்சமாகிவிட்டதே' என்று தனக்குள் எண்ணித் துடித்து வீதிக்கு ஓடினுள்; கோயிலுக்கு குளத்திற்கு முதலிய பல இடங்களுக்கு ஓடி பார்த்தாள். தான் தரிசிக்க ஆசித்துள்ள பிம்பம் எங்கும் கிடைக்காததால் சோர்ந்துவிட்டாள். குழந்தை முதலில் சற்று வருந்தினுள். கன்னத்தின் வீக்கத்திற்குக் கமலா ஒத்தடம் கொடுத்தபிறகு அவள் தன் தம்பியுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். கமலாவுக்குஇருக்கையேகொள்ளவில்லை. "இன்னுரென்று தெரியாமலேயே குழந்தையைப் பார்த்துவிட்டார். சதா காலமும் காத்துக் கிடக்கும் எனக்குப் பார்க்க பாக்யமில்லையே! என்ன செய்வேன்?" என்று புலம்பிக்கொண்டே ஜன்னலருகில் நின்றுவெளியில் பார்த்துக்கொண்டிருக்கையில் வெகு ஸன்னமான குரலில் "கமலா!...கமலா!" என்ற குரல் கேட்டதும் கமலா வியப்பினுல் தாக்குண்டவளாய்சுற்று முற்றும் பார்த்தாள். தான் கோரித் துதித்துக்கொண்டிருந்தபிம்பம் காணமுடியாதபரிதாபகரமான நிலைமையில் ஜன்னலுக்குப்பக்கத்தில் இருட்டில் நிற்பதைக் கண்டு இன்பமும் துன்பமும் கலந்த கண்ணீருடன் "ஸ்வாமீ!...என் ஸ்வாமீ! உள்ளே வாருங்கள். ஐயோ! வெளியே நிற்கவேண்டாம்...என்னுல் இந்த நிலைமையைக் கண்டு சகிக்கவே முடியவில்லை. என்னுயிர் ஒவ்வொரு நிமிஷமும் ஊசலாடுகிறதை அந்த பகவான்தான் அறிவார். உள்ளே வந்துவிடுங்கள். எத்தனையுகங்களாகிவிட்டது தங்களை தரிசித்து" என்று கூறி அடக்கமுடியாத விசனத்துடன் புலம்பினுள்.

சோமுவும் இவளுக்குமேல் கதறுகிருன். கமலா ஜன்னலால் தன் கையை வெளியில் நீட்டி அவன் கைகளைப் பற்றிக்கொண்டாள். அதை அவனுல் சகிக்கமுடியாது துள்ளியவாறு அவள் கைகளை விலக்கிவிட்டு *"கமலா!...கத்தாதே...இந்த பாபிஷ்டியைத்தொடாதே எத்தனைதான் ஞான வைராக்யத்தை நெஞ்சில் நிலை நாட்டினுலும் என்னை அது ஏமாற்றிவிட்டது. உன்னையும் உன் கண்மணிகளையும் பார்க்காமல் என்னுல் க்ஷணங்கூட இருக்கமுடியாதுபோனதால் ஓடி ஓடி வந்தேன். ஜெயாவுக்கு என்னுல் நேர்ந்த விபத்தைக் கண்டு சகிக்காமல் ஓடினேன். ஆனுல் உன்னைப் பார்க்காதுபோக

* இந்த சம்பவத்தைச் சித்திரிக்கும் படத்தை முதல் அத்யாயத்தில் பார்க்கவும்.

மனம் வரவில்லை. பின்னும் வந்துவிட்டேன். கண்டேன். களிதீர்ந்தேன். நான் போகிறேன். நீ கத்தினால் குழந்தைகளுக்குத் தெரிந்துவிடும். ஜெயா நடித்த நாடகத்தின் கதி நேரிலும் ஆய்விட்டால் வெகு கஷ்டம். நான் போகிறேன்" என்றான்.

கமலாவால் சகிக்கமுடியாது புலம்பியபடியே தோட்டத்திற்கு ஓடினாள். அவன் கால்களில் விழுந்து கதறி அழைத்தாள். சோமு ஒரே பிடிவாதமாக வர மறுத்ததோடு, "கமலா! இந்த தொல்லைக்குத் தான் நான் இங்கு வருவதற்கே பயப்படுகிறேன். என் இதயத் தவிப்பின் வேகத்தை நீ அறியவில்லை. நம் குழந்தையின் க்ஷேமத்திற்குப் பாடுபட கடமைப்பட்டுள்ள நாமா அவர்களது வாழ்க்கையை நரகத்திற்கு ஒப்பாக மாற்றுவது? விட்டுவிடு. கமலா விட்டுவிடு. குழந்தைகள் பயப்படப்போகிறார்கள். போ....உள்ளே போ."

கம:—தாங்கள் எங்கிருக்கிறீர்கள். டாக்டரம்மாள் சொல்லிய சாமியாரிடம்போனீர்களா! அவர்உங்களுக்கு ஆசீர்வாதம்செய்தாரா.

சோமு:—ராமேச்வரம் போனாலும் சனீச்வரன் விடவில்லை என்பதுபோல் என்னுடைய நிழல் என்னை விடுமா! அந்த ஸ்வாமியார் மிகவும் சக்தி வாய்ந்தவர் என்பதற்கு ஐயமே இல்லை. அவர் பத்ரிநாராயணனைச் சேவிப்பதற்காக சில சிஷ்ய பரிவாரங்களோடு கால்நடையாகவே போயிருக்கிறாராம். அவர் எப்போது திரும்பு வாரோ தெரியாதாம். அதுமுதல் இப்படியே அலைகிறேன். கமலா! குழந்தை கூப்பிடுகிறாள். போ! போ!" என்றுகமலாவை விரட்டினான்.

அதற்குள் ஜெயா தாயாரைக் கூப்பிட்டபடியே "எங்கேம்மா போய்விட்டாய் தனியாயிருக்க பயமாயிருக்கிறதே! என்ற குரல் கேட்டு உள்ளேயும் போகமுடியாது இங்கு விட்டுப் போகவும் மனமில்லாது துடித்தாள். "நான் உங்கள் ஆணைப்படி உள்ளே போகிறேன். நீங்கள் எப்படியாவது இதே இடத்தில் என்னை தினம் வந்து ஒருதரமாவது தரிசனம் கொடுத்துவிட்டு ஒரு கவளம் அன்னம் புசித்துச்சென்றால் என் மனது நிம்மதி அடையும். சாந்தியுண்டாகும். உங்களுக்குப் போடாமல் நான் புசிக்கும் அன்னம் எனக்கு அன்னமாகவே தோன்றவில்லை. உடம்பில் ஒட்டுவதுமில்லை. ஒரு வேளையாவது சாப்பிட்டால் என்னிதயம் குளிரும். தோட்டத்தில் கொண்டுவந்து தருகிறேன். இந்த ஒரு ஆசையையாவது பூர்த்தி செய்யவேண்டும்" என்று கெஞ்சினாள்.

மனைவியின் மாசிலாத அன்பின் ஆழத்தை மீறிச் செல்லமுடியாத சோமு அதற்கு இசைந்தான். "கமலா! உனக்காக நான் இதற்குச் சம்மதிக்கின்றேன். என்னுடைய இப்போதிய பசியின் கோரத்தைக் கூறவேமுடியாது. முதலில் குழந்தைகளைத் தூங்கச் செய்து பிறகு எனக்குச் சாப்பாடு போட்டால் போதும்" என்றான்.

இந்த பாக்யம் கிடைத்ததே தான் செய்த புண்ணியம் என்று எண்ணி 'இங்கேயே இருங்கள். இதோ வந்துவிடுகிறேன். சத்ய

மாக நீங்கள் போய்விடக் கூடாது'என்று கூறி, 'இதோவருகிறேன். ஜெயா! இதோ இருக்கிறேன்'' என்று ஓட்டமாக ஓடினாள்.

உலகத்தில் கண்ணுக்குத் தெரியும் ஏதேதோ பொருள்களை விலைமதிப்பில்லாத பொருள் என்றும் ஒப்புயர்வற்ற பொருள் என்றும் கூறிக் களிக்கின்றோம். இதய பூர்வமான அன்புக்கு—ப்ரேமைக்கு—நிகர் வேறு எதைத்தான் சொல்லக்கூடும்? கரை காணாத கடலைப் போன்றதாகும் கரைகாணா அன்பும், அன்பிற்கு நிகர் அந்த அன்பேயன்றி வேறு உவமைப் பொருள் உண்டா! இத்தனை கொடிய வேதனையை அனுபவிக்கும்போதும் கமலாவின் தூய்மையான அன்பும், அவள் பரிசுத்த இதயத்தில் பிரகாசிக்கும் அபூர்வமான ஞானதீபச் சுடருமன்றோ நம்மைக் காத்துவருகிறது. எந்த ஜென்மத்தில் எத்தகைய அன்யோன்ய தம்பதிகளைப் பிரித்து வயிறெரியச் செய்தேனோ எந்த குடியைக் கெடுத்துக் குடலெரியச் செய்தேனோ அதை இப்போது அனுபவிக்கின்றேன்'' என்று எண்ணமிட்டபடியே சோமுதோட்டத்தில்மறைந்து நின்றிருந்தான்.

உள்ளே வந்த கமலா குழந்தைகளுக்குப் படுக்கைபோட்டு அவர்களைச் சமாதானப்படுத்தித் தூங்கவைத்தாள். அவளை மீறிய ஓர் சந்தோஷமும் நூதன சக்தியும் அவள் சரீரம் பூராவும் பரவி இன்பமயமாகச் செய்தது. குருடனுக்குக் கண் வந்ததுபோலும் மலடி ஒரு அருமை மகளைப் பெற்றதுபோலும், அஷ்ட தரித்திரன் ஐச்வர்யத்தைக் கண்டதுபோலும், விதவைகள் கணவனைப் பெற்று புதிய வாழ்க்கை இன்பத்தை அடைந்ததுபோலும் பாலைவனத்தில் பசுமைச் செடிகளைக்கண்டதுபோலும் கமலாவின் உள்ளம்பூரித்தது.

குழந்தைகள் தூங்கிய உடனே தோட்டத்திற்கு ஓடி வந்தாள். 'ஒரு வேளை ஏமாற்றிவிட்டுப் போய்விட்டாரோ!' என்ற சந்தேகமும் தோன்றியது. அவன் இருட்டில் நிற்பதையறிந்து அவனிடம் ஓடிப் போய் கையைப் பிடித்து இழுத்தாள். முதலில் சோமு மறுத்தானெனினும் அன்பினால் பிணைக்கப்பட்டுக் கிடந்ததால் அதிலிருந்து விடுபடமுடியவில்லை. 'கமலா! குழந்தைகள் அறிந்துவிட்டால் என்ன செய்வது? நாமே நம் குழந்தைகளுக்குச் சத்ருவாகி விடுவோமே! வைராக்ய நெஞ்சத்தையும் உன் ப்ரேமையாகிய ஜ்வாலை இளகச் செய்துவிடுகிறதே. என்ன செய்வேன்?' என்றான்.

கம:—தாங்கள் படித்துப் படித்துச் சொல்லிய பிறகாவது எனக்கு அந்த எண்ணம் இல்லையா! அவர்கள் தூங்கிவிட்டார்கள். நாளைக்காலையில்தான் எழுந்திருப்பார்கள். அதுவரை பயமே இல்லை. அதோடு என் வீட்டிற்கு யாருமே வருவதில்லை. நானும் ஒருவர் வீட்டிற்கும் போகமாட்டேன். ஆதலால் உள்ளே வாருங்கள்—என்று அவனை முற்றிலும் கட்டிப் பிடித்து உள்ளே அழைத்து வந்தாள்.

குழந்தைகள் முன்பக்கத்து ரூமில் தூங்கிக்கொண்டிருந்தன. சோமுவின் மனத்தில் தான் திருடன் போலும் தன்னை யாரேனும் பார்த்துவிடுவார்களோ! என்கிற திகிலும்தான் தலைதூக்கி நின்

றது. தன்னிரையழிந்து தூங்கும் குழந்தைகளை இமைகொட்டாது பார்த்து வாத்ஸல்ய மிகுதியால் உள்ளம் பூரித்துப் புலகிதமடைந்து ஆனந்தபாஷ்பமாகப் பெருகியது. பார்த்துப் பார்த்து அவர்கள் அழகைப் பருகி பசியாறினற்போல் களித்தான். "உம்...நான் மகா பாவி. இந்த உலகத்தில் கண்ணிருந்தும் குருடனுகக் காலங்கழிக்கும் தலைவிதி யாருக்காவது இருக்குமா! கமலா! என்னல் சகிக்கவே முடியவில்லையே! என் செல்வங்களைக் கட்டியணைத்து முத்தமிட்டு மகிழும் பாக்யம் பெறாத கொடும் பாவியாகிவிட்டேனே!" என்று தேம்பித் தேம்பியழுதான்.

3068 கமலா அவனைச் சமாதானப் படுத்தி உள்ளே அழைத்துச் சென்று நன்றாக ஸ்நானம் செய்வித்து சாம்பிராணி புகைபோட்டு ஆனந்தமாக அவனுக்குத் தானே சாப்பாட்டைக் கலந்து வாயில் போட்டுக்கொண்டே 'அப்பாடா! இந்தமாதிரியானபாக்யம் எனக்கு என்றும் கிடைக்குமா! பகவான் அதை சீக்கிரத்திலேயே பகிரங்கமாகக் கொடுப்பாரா! என்று ஏங்குகிறேன்' என்றாள். ஆனந்த பாஷ்பம் இருவர் கண்களிலும் அருவிபோல் சொட்டுகிறது. அவைகளை அடக்க அவர்களால் முடியவே இல்லை.

சொர்க்கப்பதவியே கிடைத்துவிட்டதுபோல் கமலா சந்தோஷப் படுகிறாள். சோமுவுக்கோ, சொர்க்கமும் நரகமும் சேர்ந்தது போலான உணர்ச்சி உண்டாகிறது. யாரேனும் பார்த்துவிடப்போகிறார்களே! என்கிற பயமே அவன் மனத்தில் திக்கு திக்கென்று பீதியை உண்டாக்குகிறது.

சோமுவின் கோரமான பசியின் எல்லையறிந்து கமலா வயிறார அன்னமிட்டு அவன் களைப்புத் தீர தன் மடியில் அவன் தலையை பலவந்தமாக வைத்துப் படுக்கச்செய்து விசிறினாள். 'ஆதியில் முதல் முதல் பிச்சைக்காரியைக் கண்டதும் உண்டாகிய குமட்டலும் அசங்கியமும் உணர்ச்சியும் கொண்ட கமலாவா இப்போது இருப்பவள்!' என்று சோமுவின் மனது வியப்புக் கடலாடியது.

க்ஷணநேரம் இருவரும் பேசத்தெரியாது இன்பவாரிதியிலிருப்பவர்கள்போல் மவுனம் சாதித்தார்கள். அந்த நிசப்தமான மவுனத்தைக் கலைத்துக்கொண்டு ஒரு குரல் 'கமலா! கமலா!...கதவைத் திறம்மா...இதற்குள்ளாகவா தூங்கிவிட்டாய்? கமலா! இன்னமும் என்மீது வைத்த கோபம் தீரவில்லையா! என்னை இன்னமும் க்ஷமிக்க மாட்டாயா! கதவைத் திற...கமலா!'...என்று இவள் ப்ரமித்துத் திகைக்கும்படி குருசாமி கதவைத் தட்டிக் கூப்பிட்டான்.

கனவு உலகத்தில் ஆனந்த மனுபவிப்பதுபோல் எத்தனையோ யுகங்கள் சென்று தன்னுருயிர் மணாளனைக் கண்டு சந்தோஷிப்பதற்குள் விக்னம் வந்தமாதிரி, ஒருநாளும் இல்லாது திருநாளைப்போல் அவன் வந்து கூப்பிடுவதைக் கேட்டு தூக்கி வாரிப்போட்டது. சோமுவையும் ஒரு துள்ளு துள்ளச் செய்தது.

மோகினியின் வாசகர்களுக்கு

# "மோகினி" பிரசுரங்கள்

30—6—1942 வரையில்

# குறைந்த விலைக்கு

## கொடுக்கப்படும்

தபாற்செலவு இனம்

## உடனே முந்துங்கள்

விவரங்களுக்கு பின்பக்கம் பாருங்கள்.

## 30—6—1942 வரையில்
## விசேஷ சலுகை திட்டம்

1. "மோகினி" பிரசுரங்கள் எல்லாவற்றையும் ஒரே சமயத்தில்—முழு செட்டாக—வாங்குபவர்களுக்கு 40% தள்ளி தரப்படும். உங்களது ரயில்வே ஸ்டேஷனுக்கு எங்கள் செலவில் ரயில்வே பார்ஸல் மூலம் அனுப்பப்படும்.

2. "மோகினி" பிரசுரங்களில் ஏற்கெனவே சிலவற்றை வாங்கியுள்ளவர்களுக்கு, மற்ற புத்தகங்களை வாங்குவதற்கு இதுவே சமயம். (i) ரூ. 15/-க்கு மேல் வாங்குபவர்களுக்கு மூன்றிலொரு பங்கு தள்ளிக் கொடுக்கப்படும். தபாற்செலவு இனாம். (ii) ரூ.5/-க்கு மேல், ரூ.15/-க்குள் வாங்குபவர்களுக்கு 25% தள்ளி தரப்படும். தபாற்செலவு இனாம். (iii) ரூ. 5/-க்கு குறைந்து வாங்குபவர்களுக்கு தபாற்செலவு இனாம்.

முன் பணம் அனுப்பவும். வி. பி. கிடையாது.

ஜகன்மோகினி ஆபீஸ், சிங்கப்பெருமாள் கோவில், B. O.

# ஜகன்மோகினி

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்

இப்போது 19-வது ஆண்டு நடைபெறுகிறது

வருஷசந்தா: ரூ. 1-8. தனிப் பிரதி: அணா. 2.

**ஜீவியசந்தா: ரூ. 25.**

ஜீவிய சந்தாதாரருக்கு சஞ்சிகையை அனுப்புவதுடன் இனிமேல் நமது ஆசிரியையால் எழுதப்பட்டு நம்மால் வெளியிடப்படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும். முன்பணமனுப்பவும்; வி. பி. கிடையாது.

## ஸ்ரீமதி. வை. மு. கோ. எழுதிய 57 நாவல்கள்

**ரூ. 2-8**

வைதேகி
ராதாமணி
சாருலோசனா
பத்மசுந்தரன்
காதலின் கனி

**ரூ. 2**

நவநீதகிருஷ்ணன்
ருக்மிணிகாந்தன்
சாமளநாதன்
தியாகக்கொடி
மங்களபாரதி

**ரூ. 1-12**

சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி
தயாநிதி

**ரூ. 1-8**

சோதனையின் கொடுமை
உணர்ச்சி வெள்ளம்
சந்தோஷ மலர்

**ரூ. 1-4**

பரிமளகேசவன்
உத்தமசீலன்
இன்பஜோதி
ராஜமோஹன்
அனாதைப்பெண்
வானக்குயில்
ஜீவியச்சுழல்
கஸ்தூரீதிலகம்
கானல் நீர்
ஆத்மசக்தி
புகழ்மாலை
கலாநிலயம்

**ரூ. 1**

சுகந்தபுஷ்பம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திரமண்டலம்
கருணாலயம்

**அணா 14**

கோபாலரத்னம்
புத்தியே புதையல்

**அணா 12**

கதம்பமாலை *

**அணா 10**

பட்டமோ பட்டம்
மகிழ்ச்சி உதயம்

**அணா 8**

நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின் பரிபவம்
பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தஸாகர்
ப்ரேமப்ரபா
வத்ஸகுமார்
மாலதி
படகோட்டி

**அணா 6**

பக்ஷமாலிகா
சுடர் விளக்கு

**அணா 4**

மாதவமணி
ஜெயஸஞ்சீவி
சகுணபூஷணம்
அம்ருததாரா
அன்பின் சிகரம்
ஸரஸராஜன் *
உளுத்த இதயம்

**"ஜகன்மோகினி" ஆபீஸ்,**

சிங்கப்பெருமாள் கோவில் போஸ்ட், (செங்கல்பட்டு ஜில்லா.)

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, VENKATAPURAM, SINGAPERUMAL KOIL, P. O.

Regd. No. M. 2210

## சித்திர ரகளை

“கார்த்திகை”

சென்னைக்குச் சென்றால் இந்த விநோதத்தை நேரில் காணலாம்.




வனிதாமண்டலத்தில் வெளியாகியுள்ள இந்துமதியின் கடிதத்தைப் படியுங்கள். (பக்கம் 24)